# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 271 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 07, செவ்வாய்க்கிழமை 23.08.2016


முச்சந்தி முரளி



இனி எப்போ உள்ளே போவார்....

# நீதி கேட்டு

## வன்னியில் நடைப் பயணம்

### ஐ.நா. செயலருக்கும் மனுக் கையளிப்பு





கிளிநொச்சி, ஓகஸ்ட் 23

காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிவது உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து 'ஆனையிறவில் இருந்து ஐ.நா. வரை' என்ற தொனிப்பொருளில் நேற்று கிளிநொச்சியில் நீதிக்கான நடைப் பயணம் முன்னெடுக்கப்பட்டது. இந்த நடைப் பயணம் நேற்று பரந்தன் உமையாள்புரம் அம்மன் கோவில் முன்றிலில் ஆரம்பமாகி கிளிநொச்சி அகதிகளுக்கான ஐ.நா. அலுவலகம் வரை இடம்பெற்றது. ஐ.நா. அலுவலகத்தில் கோரிக்கைகள் அடங்கிய மனுவும் கையளிக்கப்பட்டது. கிளிநொச்சிப் பொது அமைப்புக்கள் மற்றும் மாவட்டத்தின் கிராம 23ஆம் பக்கம்

# நாமல் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஓக. 23

நிதிமோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

முதல் தடவை கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட போது, நாமலின் ஆதர வாளர்கள் பெருமளவில் திரண்டு அவரைத் தமது தோள் மீது தூக்கிச் சுமந்து சென்று பெரும் ஆரவாரம் செய்தி ருந்தனர். ஆனால் நேற்றைய தினம் அவ்வாறான சம்பவம் எதுவும் இடம்பெற வில்லை.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த 15ஆம் திகதி நாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச இரண்டாவது தடவையாகக் கைது செய்யப்பட்டார்.

அவரை புதுக்கடை நீதி வான் மன்றத்தில் முற்படுத்தியபோது 22 ஆம் திகதியான நேற்று வரையில் விளக்கமறிய லில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்த நிலையில் நேற்றைய தினம் நாமல் ராஜபக்ச நீதிவான் மன்றில் முற்படுத்தப் பட்டார். இதன் போது அவரைப் பிணையில் விடுவிக்க நீதிவான் அனுமதி வழங்கினார்.

நாடாளு 23ஆம் பக்கம்

# போராளிகளுக்கான மருத்துவ சிகிச்சைக்கு சிறப்புத் திட்டம்

### வடக்கு சுகாதார அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23

முன்னாள் போராளிகளுக்குத் தேவையான அடிப்படை மற்றும் சிறப்புப் பரிசோதனைகள், ஆய்வுகள் என்பன வடக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பொது வைத்தியசாலைகளிலும், தெரிவு செய்யப்பட்ட ஆதார வைத்தியசாலைகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளன. இதனைச் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட மருத்துவர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்வாறு அறிவித்தது வடக்கு 25ஆம் பக்கம்

# ஊசி விவகாரம் ரணில் — விக்கி இன்று பேச்சு

யாழ்ப்பாணம், ஓக. 23

புனர்வாழ்வின் போது முன்னாள் போராளிகளுக்கு ஊசி ஏற்றப்பட்ட விவகாரம் தொடர்பில், பிரதமருடனான இன்றைய சந்திப்பில் பேசவுள்ளதாக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பிரதமருடன் இன்று சந்திப்பு 23ஆம் பக்கம்

# பேராதனைப் பல்கலை. தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் மீது நேற்றுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 23

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட தமிழ் – முஸ்லிம் மாணவர்கள் மீது, இரண்டாம் வருட சிங்கள மாணவர்கள் மூர்க்கமாகத் தாக்கினர். இந்தத் தாக்குதலில் காயமடைந்த 12 தமிழ் – முஸ்லிம் மாணவர்கள் பேராதனை வைத்தியசாலையில் நேற்று இரவு சேர்க்கப்பட்டனர். காயமடைந்தவர்களில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் உள்ளடங்குகின்றனர்.

"கைகளை உயர்த்துமாறு பணித்து விட்டு, தலைக் கவசங்களாலும் தடிகளாலும், தமிழ் மாணவிகள் முன்பாக எங்களைச் சிங்கள மாணவர்கள் தாக்கினர்" என்று தாக்குதலில் காயமடைந்த மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவர்களே தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இணைந்த சுகாதார விஞ்ஞானபீடத்தின் நிறுவுனர் நாள் 23ஆம் பக்கம்



# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக கொழும்பில் கையெழுத்துப் போராட்டம்

கொழும்பு, ஓக. 23

தென்பகுதி மக்களிடையே தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பில் கையெழுத்துப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இவ்வாறு அறிவித்தது அரசியல் கைதிகள் 23ஆம் பக்கம்

# மீண்டுவரும்செலவினத்துக்கு கடன் பெறுவது உகந்ததல்ல

### யாழ்ப்பாணத்தில் கூறினார் மத்திய வங்கியின் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஓக. 23

மீண்டு வரும் செலவினங்களுக்காகக் கடன் பெறுவது நாட்டுக்கு உகந்த விடயமல்ல. ஒரு குடும்பத்தில் அன்றாடச் செலவுக்காகக் கடன் வாங்கும் செயலுக்கு இது ஒப்பானது.



இவ்வாறு மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசாமி தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற முதலீட்டாளர் சம்மேளன ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு, 'முதலீட்டு வாய்ப்புக்களும் அதன் சவால்களும்' என்னும் தலைப்பில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆண்டின் இறுதியில் ஏற்படும் மீண்டுவரும் செலவினங்களுக்காகக் கூட நாம் கடன் பெறுவது என்பது நாட்டுக்கு உகந்த விடயமல்ல. இது ஓர் குடும்பத்தில் அன்றாடச் செலவுக்காகக் கடன் வாங்கும் செயலுக்கு ஒப்பானது.

அபிவிருத்தி என்பது தேவை. உட்கட்டுமான அபிவிருத்திகளைக் கடன் பெற்று மேற்கொள்வது மேலும் 23ஆம் பக்கம்

# மரத்துடன் மோதி மினிபஸ் தடம்புரண்டதில் வயோதிபப் பெண் சாவு; 16 பேர் படுகாயம்

### மடுத் திருத்தலம் சென்று திரும்பிய போது பூநகரியில் துயரம்

கிளிநொச்சி, ஓக. 23

மடுத் திருத்தலத்துக்குப் பக்தர்களுடன் சென்று திரும்பிய மினிபஸ் பூநகரிப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில், வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன், 16 பேர் படு காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் கிளிநொச்சி, பூநகரி மண்டக்கல்லாறுக்கு அண்மித்த பகுதியில் 23ஆம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதான நடை பயணத்துக்கு அனைவரும் ஒத்துழையுங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 23
நாட்டில் நிரந்தர சமாதானத்தை வேண்டி நல்லூரில் இருந்து அம்பாந்தோட்டை வரை நடைபெறவுள்ள நடைபயணத்துக்கு அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் ஆரம்பிக்கும் அமைதி நடை பயணம் நாட்டின் பல நகரங்களூடாகச் சென்று செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி அம்பாந்தோட்டையில் நிறைவடையவுள்ளதுஎனத் தெரிவிக்கப்பட்டது. (த-5-ரி7)

## முதிரைக்குற்றிகள் கடத்தலை முறியடித்தது அதிரடிப் படை



முல்லைத்தீவிலிருந்து சட்டவிரோதமாக யாழ்ப்பாணத்துக்குக் கடத்தி வரப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான முதிரைக் குற்றிகள் சிறப்பு அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன. அத்துடன், அவற்றை ஏற்றி வந்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் டிப்பர் சாரதியையும் பொலிஸார் கைது செய்தனர்.

"முல்லைத்தீவில் இருந்து மரக்குற்றிகள் கடத்தி வரப்படுவதாக சிறப்பு அதிரடிப் படையினருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்தது. இது தொடர்பில் சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் வன பரிபாலனத் திணைக் களத்தினரால் நேற்றையதினம் கொடிகாமத்தில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் போதே இந்த மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

கருங்கற்களை ஏற்றிக் கொண்டு ஏ 9 பிரதான வீதியில் பயணித்த டிப்பர் ரக வாகனத்தை கொடிகாமம் பகுதியில் வைத்து சோதனை மேற்கொள்ளப்பட்டது. கருங்கற்களுக்குள் மறைக்கப்பட்டு மிகவும் தந்திரமான முறையில் குறித்த மரக்குற்றிகள் கடத்தி வரப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனைஅடுத்தே அந்த முதிரை மரகுற்றிகள் மற்றும் டிப்பர் வாகனம் ஆகியன பறிமுதல் செய்யப்பட்டன. டிப்பர் வாகனத்தைச் செலுத்தி வந்த சாரதியை கைது செய்த சிறப்பு அதிரடி படையினர் அவரைக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர் என கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரையும் கடத்தி வரப்பட்ட மரக்குற்றிகளையும் டிப்பர் வாகனத்தையும் சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-ரி7)

### கஞ்சா கடத்தல் வழக்கில்

# பொலிஸார் குறித்த விசாரணை அறிக்கை நீதிமன்றுக்கு முன்வைக்கப்படவில்லை

## காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு அழைப்புக் கட்டளை

யாழ்ப்பாணம்,ஓக. 23
கஞ்சா கடத்தலுடன் பொலிஸாருக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படும் வழக்கில், அது தொடர்பான விசாரணை அறிக்கை வடக்கு மாகாண மூத்த பிரதி பொலிஸ் மா அதிபரால் மன்றுக்கு முன்வைக்கப்படவில்லை. இதனால் விசாரணை அறிக்கையுடன் மன்றில் முன்னிலையாகுமாறு காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு பருத்தித்துறை நீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது.

அல்வாய் முத்துமாரி அம்மன் கோயில் பகுதியில் 4 கிலோ 100 கிராம் கஞ்சா போதை பொருள் கைப்பற்றப்பட்டது. அந்தக் கஞ்சாக் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட4 சந்தேகநபர்கள் முற்படுத்தப்பட்ட வழக்கிலேயே நீதிவான் மன்றால் இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 2ஆம் 3ஆம் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி யோகனந்தி மன்றில் முன்னிலையாகி பிணை விண்ணப்பம் கோரினார். எனினும் ஏற்கனவே நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டு தேடப்படும் சந்தேக நபரான கெங்காதரன் மன்றில் முன்னிலைப்படுத்தப்படுத்தவில்லை. 4 சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 9ஆம் திகதி வரை நீடிக்க உத்தரவிட்டார் நீதிவான்.

இது தொடர்பான நீதிமன்றக் கட்டளையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இந்த வழக்கில் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மாசிங்க, கடந்த 4ஆம் திகதி அபாயகரமான ஔடதங்கள் சட்டப்பிரிவுகளின் கீழ் சந்தேக நபர்களைத் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்வதற்குரிய அனுமதியை மன்றிடம் கோரியிருந்தார். அதன் அடிப்படையில் மன்றும் அனுமதி வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் சந்தேக நபர் ஒருவர் 127(1) பிரிவின் கீழ் சுய விருப்பத்தின் அடிப்படையில் வாக்கு மூலம் வழங்க விருப்பம் தெரிவித்தார். அவர் தனது வாக்கு மூலத்தில், இந்த வழக்கில் பிரதான சந்தேக நபராக கெங்காதரன் இருப்பதாகவும், அந்தச்சந்தேக நபர் பொலிஸாருக்கு 30 இலட்சம் ரூபா வழங்கியமையால் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் விசாரணையை மேற்கொண்ட பருத்தித்துறை பொலிஸார், கெங்காதரன் என்ற அந்தச் சந்தேக நபர் தப்பிச் சென்றிருப்பதாக மேலதிக அறிக்கையொன்றினூடாக மன்றுக்குத் தெரிவித்தனர். இந்த வழக்கில் பொலிஸார் நடந்து கொண்ட விதம் தொடர்பில், அவர்கள் தமது கடமையை ஒழுங்காக செய்யவில்லை என்ற சந்தேகம் மன்றுக்கு ஏற்பட்டது. கெங்காதரன் தமக்கு தகவல் தருபவர் என குறிப்பிட்டிருந்தார் அந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸ் பரிசோதகர் தர்சன. அது பற்றி குறிப்பு புத்தகத்தில் காணப்படவில்லை என்றும் மதன்குமார் என்ற பொலிஸ் கொன்ஸ்டபிளிடம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இதன் மூலமாக பொலிஸ் அதிகாரி, தான் பேண வேண்டிய குறிப்பை பொலிஸ் கொன்ஸ்டபிளிடம் இருப்பதாக கூறுகிறார். அத்துடன்,குறித்தசுற்றிவளைப்பை மேற்கொண்ட குழு யாழ்ப்பாணத்திற்கு பொறுப்பாக இருக்கும் பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்னவின் கீழ் செயற்படும் குழு என தெரிவிக் கப்பட்டது.

குறித்த சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் தொடர்பில் ஏற்கனவே நீதிமன்றுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தரையும் உள்ளடக்கியுள்ளது.

எனவே இவ்வாறான வழக்கில் கஞ்சா மற்றும் ஏனைய போதைப் பொருள்களை வைத்திருப்பவர்களை கைது செய்யாமல் கஞ்சா வைத்திருப்பதாகக் கூறப்படும் சந்தேகநபர்களை மாத்திரம் முற்படுத்துவது பொலிஸார் தமது கடமையை ஒழுங்காக உரிய வகையில் செய்கிறார்களா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இது தொடர்பில் சிறப்புக் குழு ஒன்றை நியமித்து அறிக்கையை முன்வைக்குமாறு கடந்த 10ஆம் திகதி வடக்கு மாகாணத்துக்கு பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு மன்று கட்டளையிட்டிருந்தது. குறித்த பிரதியை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்புமாறும் உத்தரவிடப்பட்டது. எனினும் இது தொடர்பில் வடக்கு மாகாண மூத்த பிரதி பொலிஸ் மா அதிபரால் மன்றுக்கு எந்த அறிக்கையும் கையளிக்கப்படவில்லை. எனவே குறித்த சம்பவம் தொடர்பில் மன்றுக்கு அறிக்கை முன்வைக்குமாறு மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு மன்று கட்டளையிடுகிறது.

இந்தக் கட்டளையின் பிரதியை மூத்த பிரதி பொலிஸ்மா அதிபருக்கும் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் மது ஒழிப்பு தொடர்பான செயலணியின் தலைவருக்கும் அனுப்புமாறு மன்று கட்டளையிடுகிறது. இதேவேளை விசாரணை முடிவடையாததால் சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களிடம் இருந்து மேலதிக வாக்குமூலம் பெற ஏதுவாக நீதிமன்ற வளாகத்தில் சிறைக்காவலர்கள் முன்னிலையில் வாக்குமூலத்தைப் பெற பருத்தித்துறை பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் பரிசோதகர் சஞ்சீவனுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்குகிறது என்று கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

# 'சூழலியல் விவசாயத்தை நோக்கி' கண்காட்சி நேற்று ஆரம்பம்





யாழ்ப்பாணம், ஓக. 23
வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் சூழலியல் விவசாயத்தை நோக்கி என்னும் தொனிப்பொருளிலான கண்காட்சி நல்லூரில் நேற்று மாலை ஆரம்பமானது.

இந்தக் கண்காட்சியை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா ஆரம்பித்து வைத்தார். நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நடைபெறும் இந்தக்கண்காட்சி ஆலய வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் ஒழுங்கமைக்கப்பட்டது. இந்தக் கண்காட்சி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பூங்காவனத் திருவிழா நடைபெறும் வரை 10 நாள்கள் தினமும் பிற்பகல் 2 மணியிலிருந்து இரவு 8 மணிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. தேர், தீர்த்தம் மற்றும் பூங்காவனத் திருவிழா ஆகிய தினங்களில் காலை 9 மணியில் இருந்து இரவு 8 மணி வரை நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றின் காட்சிக் கூடங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் படும் வயல் நிலங்கள் உவர் தன்மையாகாது எவ்வாறு பண்படுத்தப்படவேண்டும், இரசாயன கிருமி நாசினி, உரப்பாவனையால் ஏற்படும் விளைவுகள், தேனீ வளர்ப்பு முறைகள், காளான் வளர்ப்பு முறைகள், தூவல் நீர்ப்பாசன முறையில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகள் மற்றும் சுழற்சி முறையிலான பயிர்ச் செய்கையினால் ஏற்படும் நன்மைகள் என பல விடயங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், க. விந்தன், ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-ரி7)

## 18 லட்சம் ரூபா பணம் பெண்ணிடம் கொள்ளை

கொழும்பு, ஓக. 23
காலி - அம்பலங்கொடையில் பெண் ஒருவரிடமிருந்து 18 லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வங்கிக்குப் பணத்தை வைப்பிலிட பெண் சென்றவேளையிலே, பணம் கொள்ளையிடப்பட்டது.

பெண் தனியார் வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட பணத்தைப் பிறிதொரு வங்கியில் வைப்பிலிடச் சென்றவேளையிலேயே இந்தக் கொள்ளை சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவ்வாறு கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக, அந்தப் பெண் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 55 வயதுடையான குறித்த பெண், அம்பலங்கொடை பொலிஸில் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசு மீது நாமல் எம்.பி சாடல்



கொழும்பு, ஓக. 23
டெஸ்ட் தொடரில் இலங்கை அணி வென்றதற்கு நல்லாட்சிதான் காரணம் எனக் கூறினார்கள். ஆனால், ஒரு நாள் ஆட்டத்தில் தோல்வி ஏற்பட்டுள்ளது. இதற்கு என்ன கூறுவார்கள் ?
இவ்வாறு, கேள்வி எழுப்பினார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச .
நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் நாமல் ராஜபக்ச செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி முதல் எதிரணி உறுப்பினர்கள் சிறையில் அடைக்கப்பட்டு வருகின்றனர். தேசிய அரசின் பிரதான வேலைத் திட்டமாகவும் இதுதான் இருக்கின்றது. மக்களிடமும் இதுபற்றித்தான் கூறப்பட்டு வருகின்றது. எம்மைச் சிறையில் அடைத்து, அதன்மூலம் திருப்தியடைகின்றனர்.
அத்துடன், எதற்கெடுத்தாலும் நல்லாட்சி, நல்லாட்சி எனக் கொக்கரிக்கின்றனர்.
சட்டத்தை வளைப்பேன் என்று கூஞரைக்கும் பொலிஸ்மா அதிபர், சட்டத்தை வளைத்தாவது பொலிஸ் அதிகாரிகளுக்கு சம்பள உயர்வையும், மோட்டார் சைக்கிள்களையும், பதவிப் பிரச்சினையையும் தீர்த்துவைக்க வேண்டும். சட்டத்தை வளைத்து எம்மை உள்ளே போடுவதுபோல் பொலிஸாருக்கு மேற்படி விடயங் களையும் அவர் செய்ய வேண்டும் - என்றார்.
(வ-5)

# போர்ட்சிற்றி உடன்படிக்கையை அரசு உடனே கைவிடவேண்டும்

## ஜே.வி.பி வலியுறுத்து

கொழும்பு, ஓக. 23
கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை (போர்ட்சிற்றி) அரசு உடனடியாகக் கைவிடவேண்டும். இலங்கையின் சுற்றாடல், இறையாண்மை, கடல்வளங்கள் ஆகியவற்றுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாலேயே இந்தத் திட்டத்தை நிறுத்துமாறு கோருகின்றோம்.
இவ்வாறு தெரிவித்தார் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க.
பத்தரமுல்லையிலுள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதன்போது அவர் தெரிவித்ததாவது:
கார்ப் பந்தயத்திடல், கசினோ போன்றவை இல்லாமல் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும், களியாட்ட நகராக அல்லாது நிதி நகரமாக மாற்றியமைக்கப்படும் என்றும் அறிவிப்பு விடுத்துவிட்டே அரசு நடவடிக்கையில் இறங்கியுள்ளது. 269 ஹெக்டேயர் அளவுக்கு கடலை நிரப்புவதற்காக 341/2 இலட்சம் கனமீற்றர் கருங்கல்லும் 650 இலட்சம் கனமீற்றர் அளவிலான மணலும் தேவைப்படுகின்றது. கடலை நிரப்ப பெரிய கருங்கல் தேவை என்பதால் கடுவலை, ஹங்வெல, தெல்தெனிய, வெயாங்கொட, பாதுக்க, திவுலகொட உள்ளிட்ட 11 கல்குவாரிகளை அரசுதெரிவுசெய்துள்ளது.
இந்தப்பகுதிகளில் இவ்வாறு பெரியளவிலான கல் அகழ்வை மேற்கொள்வதால், அதனை அண்டியுள்ள பகுதிகளுக்கும் மக்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்படும்.
3 வருடங்களுக்குள் கடலை நிரப்பவேண்டும் என்பதால் மிக வேகமாக கற்கள் உடைக்கப்படுவதால் மலைகள் சரிவடையும் அபாயமும் காணப்படுகின்றது. அதுபோல இந்தத் திட்டத்துக்குத் தேவையான மணல் நீர்கொழும்பு களப்பிலிருந்தே பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. இதனால் அந்தக்கடல் பகுதியை அண்டிய வளங்கள், மீன்கள் அழிவடையும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இதனையே நம்பி தொழில் புரிவோரது வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகியுள்ளது.
கொழும்பில் இவ்வாறு கடல் நிரப்பப்படுவதால் வெள்ளவத்தை, கல்கிஸை, மொரட்டுவ வாழ் மீனவர்களும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. மகாவலித் திட்டத்தை முன்னெடுக்கும்போதும் சுற்றாடல் உள்ளிட்ட பலவற்றை காரணம் காட்டி நாம் எதிர்ப்பை வெளியிட்டோம்.
ஆனால், அப்போது அதனைத் தட்டிக்கழித்தமையாலேயே 30 வருடங்கள் கழித்து தற்போது பெரியளவிலான மண்சரிவுகளையும் வெள்ளப்பெருக்குகளையும் நாடு எதிர்கொண்டுள்ளது. அதேபோன்றதொரு செயற்பாட்டைத்தான் இந்த அரசும் மேற்கொண்டு வருகின்றது. எனவே இதனை அரசு உடனடியாக நிறுத்தவேண்டும். என வலியுறுத்துகின்றோம் - என்றார்.
மகிந்த ஆட்சியின்போது சீன அரசின் பங்களிப்புடன் 'போர்ட் சிற்றி' திட்டம் ஆரம்பமானது. அப்போது பிரதான எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி இதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், தாம் ஆட்சிக்கு வந்தால் திட்டம் கைவிடப்படும் எனவும் குறிப்பிட்டது.
ஆட்சிமாற்றத்தின் பின்னர் 'போர்ட் சிற்றி' திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அது தற்போது நிதி நகரம் எனப் பெயர் மாற்றப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக பழைய உடன்படிக்கையும் புதுப்பிக்கப்பட்டு முத்தரப்பு உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.
(வ-21)

# இளைஞர்கள் இருவர் நேற்றிரவு நல்லூர் ஆலய வீதியில் கைதானர்

யாழ்ப்பாணம், ஓக.23
நல்லூர் ஆலயச் சூழலில் பாதணிகளுடன் நடமாடிய இரண்டு இளைஞர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் நேற்று இரவு கைது செய்யப்பட்டனர்.
ஆலயத்தின் வெளிப்புற மேற்கு வீதியில் பாதணியுடன் சென்றது உண்மை. அந்த வேளையில் அங்கு வந்த இருவர் பாதணிகளை கழற்றி வெளியில் எறியுமாறு தகாத வார்த்தைகளால் கூறினர்.
தகாத வார்த்தைகளால் பேசிய தன் காரணத்தினால் நீங்கள் யார்? என வினவியபோதே பொலிஸார் என அவர்கள் தம்மை அடையாளப்படுத்தினர். பொலிஸார் என்றால் அடையாள அட்டையை காண்பிக்குமாறு கோரியவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதோடு, வெளியில் சீருடையில் நின்ற பொலிஸாரை அழைத்து கைது செய்து கொண்டு சென்றனர் என்று கைதானவர்களுடன் சென்றவர்கள் தெரிவித்தனர்.
ஆலயச் சூழலில் பாதணியைக் கழற்றுமாறு சிவில் உடையில் நின்ற பொலிஸார் அவர்களிடம் தெரிவித்தனர். பொலிஸார் எனத் தம்மை அவர்கள் அறிமுகப்படுத்திய போதும், இளைஞர்கள் தாக்க முற்பட்டனர். இதன் காரணத்திற்காகவே இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (வ-101,106)

# ரூ. 150 லட்சம் பெறுமதியான ஹெரோயின் நேற்றுமாலை வெள்ளவத்தையில் சிக்கியது

கொழும்பு, ஓக. 23
கொழும்பு, வெள்ளவத்தையில் நேற்று மாலை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 150 லட்சம் ரூபா பெறுமதியான ஒரு கிலோ 500 கிராம் நிறையுடைய ஹெரோயின் மீட்கப்பட்டது. அதனை வைத்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்ட ஒருவரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
வெல்லம்பிட்டியவில் நேற்றுக் காலை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே, நேற்று மாலை போதைப் பொருள் ஒழிப்புக்கான பொலிஸ் பிரிவு வெள்ளவத்தையில் சுற்றிவளைப்பை மேற்கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (வி)

**வேலையாள் தேவை**
தின்பண்டங்கள் விநியோகம் செய்யும் நிறுவனத்துக்கு பொருள்கள் ஏற்றி இறக்கும் ஆள் தேவை.தொடர்பு - 077 4700197

**வேலை வாய்ப்பு**
எரி பொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்கு எரிபொருள் நிரப்புநர் தேவை.
தொடர்பு.0774527512

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை. யாழ். நகர எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (ஆண்கள் மட்டும்)
T.P : 021 4923724

**தேவை**
பருத்தித்துறையில் இயங்கும் உணவகத்திற்கு ரீ மேக்கர், சப்பளையர்கள் தேவை. நேரில் வரவும். (பஸ் நிலையம், பருத்தித்துறை)
077 621 4224

**வேலையாள்கள் தேவை**
இணுவில் பகுதியில் உள்ள அரைக்கும் ஆலைக்கு. (தங்குமிட வசதி உண்டு)
077 [illegible]

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 024 சீட்டிழுப்பு திகதி 2016.08.22
வெற்றி இலக்கங்கள் 03 10 12
இவ்வார இலட்சாதிபதிகள் 46
வழங்கப்பட்ட மொத்த பரிசு 8,897,660/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1290 சீட்டிழுப்பு திகதி 2016.08.22
வெற்றி இலக்கங்கள் 11 51 54 59 R
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 22,553,140/=

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 540
சீட்டிழுப்பு திகதி 2016.08.22
வெற்றி இலக்கங்கள் 16 64 69 70 H
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 46,943,040/=

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் தொழில்தேடுவோருக்கானது
ஷாம்சனின் நேரடி உரையாடற்பயிற்சி முறையான ஆங்கில பாடநெறி
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 27.08.2016
மாலை 03.00 - 05.00
3 மாதங்களில நீங்கள் சுயமாக ஆங்கிலம் பேசுவதற்கான 100 வீத பிரக்டிகல் பேச்சுப்பயிற்சி
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் முகாம்களை அகற்றும் திட்டமில்லை

## பாதுகாப்பு அமைச்சு கூறுகின்றது

கொழும்பு, ஓக. 23
கிழக்கு மாகாணத்தில் உள்ள முக்கியமான இராணுவ முகாம்கள் அகற்றப்படாது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.
கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள 64 இராணுவ முகாம்கள் அகற்றப்படவுள்ளன என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. அவற்றைப் பாதுகாப்பு அமைச்சு நேற்று நிராகரித்தது.
கிழக்கில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான படை முகாம்கள் அகற்றப்படமாட்டாது என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ந-5)

# ஊசி ஏற்றப்பட்ட விவகாரம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் ஐ.நா.

## நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன் கடிதம்

கொழும்பு, ஓக. 23
முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வின் போது ஊசி ஏற்றப்பட்டது என்று சர்ச்சை உருவாகியுள்ள நிலையில் இந்த விடயம் தொடர்பாக பன்னாட்டுப் பொறிமுறையின் கீழ் ஐ.நா. விசாரணை நடத்த வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்க முன்வர வேண்டும்.
இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவசர கோரிக்கைக் கடிதமொன்றை அனுப்பினார்.
ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன், கடத்தப்பட்டோர் விவகாரங்களுக்கான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர், உடல்நல விவகாரங்களுக்கான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் மற்றும் உண்மைக்கும் நீதிக்குமான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் ஆகியோருக்கே கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
தடுப்புக் காவலில் இருந்தவர்கள் விடுதலை செய்யப்பட்ட குறுகிய காலத்திலேயே சாவடையும் வகையில் திட்டமிடப்பட்டு ஊசி மருந்துகள் ஏற்றப்பட்டிருக்குமாயின், அது மனிதத் தன்மை அற்ற செயல் என்று அவர் குறித்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.
சுதந்திரமானதும் நம்பிக்கைக்குரியதுமானவிசாரணைகளை முன்னெடுப்பதற்கு இலங்கையின் நீதித்துறை இன்னும் தயாராக இல்லையென ஐ.நா ஏற்கனவே தெரிவித்திருந்ததை குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள உருத்திரகுமாரன், ஊசி விடயத்தில் நம்பிக்கைக்குரிய வகையில் விசாரணை நடத்தப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.
ஐ.நா. இந்த விடயத்தில் உடன் தலையிட்டு விசாணை நடத்தவேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடன் மருத்துவ உதவிகளை வழங்க வேண்டும் என்றும் உருத்திரகுமாரன் தெரிவித்தார். (ந-5)

# சூரிய ஒளி மூலம் மின்சாரம்; திட்டம் செப்ரெம்பர் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 23
சூரிய ஒளி மூலம் மின்சாரம் வழங்கும் திட்டம் செப்ரெம்பர் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விஜேராம மாவத்தையிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.
இது தொடர்பாக மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்வலு பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்ததாவது–
சூரியஒளிமூலம்மின்சக்திவழங்கும்திட்டம்நாடுமுழுவதும்அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு மில்லியன் பேருக்கு மின்சாரம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
கிராமங்கள், நகரங்களில் வாழும் மக்களும் இந்தத் திட்டத்தின் கீழ் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்காக வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவுள்ளன – என்றார். (ந-5)

# கடமைகளை நிறைவேற்ற விடுதலை செய்யுங்கள்

## ராஜீவ் வழக்கில் கைதான நளினி மனு

கொழும்பு, ஓக. 23
எனது மகள் திருமண வயதை அடைந்து விட்டாள். அவளுக்குத் திருமணம் செய்து வைப்பது உள்ளிட்ட பல்வேறு கடமைகள் எனக்கு இருக்கின்றன. என்னை விடுதலை செய்யுங்கள்.
இவ்வாறு நளினி, இந்திய தேசிய மகளிர் ஆணையத்துக்கு மனு அனுப்பியுள்ளார்.
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதான நளினி மற்றும் அவரது கணவர் முருகன் ஆகியோர் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், நளினியை அவரது சட்டத்தரணி புகழேந்தி சந்தித்தார். சட்டத்தரணி புகழேந்தி ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது நளினியின் நிலை குறித்துத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–
நளினிதன்னைவிடுதலைசெய்யக்கோரி தேசிய மகளிர் ஆணையத்துக்கு புதிய விண்ணப்ப மனுவை அனுப்பியுள்ளார்.
அந்த மனுவில் தனக்கு பின்னர் சிறையில் அடைக்கப்பட்ட கைதிகள் 2 ஆயிரத்து 200 பேர் பல்வேறு கட்டங்களில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும், தானும் விடுதலை ஆவேன் என்று நம்பி இருந்தேன் என்றும், ஆனால் இன்றும் நான் சிறையில் உள்ளேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
உடல் அளவிலும், மனதளவிலும் பாதிக்கப்பட்டு உள்ளேன் என்றும் கர்ப்பிணியாக இருந்தபோது தான் சிறையில் அடைக்கப்பட்டதனையும் சுட்டிக்காட்டியுள்ளார்.
தனக்குப் பெண் குழந்தை பிறந்தது என்றும், தனது மகள் இப்போது திருமண வயதை அடைந்துவிட்ட நிலையில், திருமணம் செய்யவேண்டும் என்பன உட்பட பல கடமைகள் தனக்கு உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தனது மகள், வெளிநாட்டில் வசிக்கின்றார் என்றும், தனது விடுதலை குறித்து தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தபோதிலும் அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளன என்றும் கவலை வெளியிட்டுள்ளார்.
அரசமைப்பின் பிரிவின் 72 ஆவது பிரிவைப் பயன்படுத்தித் தன்னை விடுதலைசெய்யவேண்டும் என்றும் நளினி தனது மனுவில் கேட்டுள்ளார் – என்றார். (ந-5)

**Procurement Notice
Vavuniya Campus of the
University of Jaffna**

**Procurement of Wooden Office Furniture**

Sealed bids are invited by Vavuniya Campus of the University of Jaffna from reputed dealers/agents for the supply of the following Items.

Bidding documents including specifications of the above items can be obtained from the Asst. Bursar/Supplies, Vavuniya Campus of the University of Jaffna, Park Road, Vavuniya up to 3.00 pm, 13th September 2016 by producing **receipt** for Rs.1,000/= as non-refundable fee for above items. Payment could be made by Cash at the Shroff Counter of the Vavuniya Campus up to 3.00pm on working days or could be credited with any branch of the Bank of Ceylon to Vavuniya Campus Account No 2364602 at BOC, Vavuniya Branch in favour of **Rector, Vavuniya Campus** and produce the receipt /deposit slip with written request for collection of bid documents.

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | Bid/3 /01 | Executive Table | 07Nos. | Bid Security Rs. 30,000.00 |
| 02 | Bid/3 /02 | Junior Executive Table | 18 Nos. | |
| 03 | Bid/3 /03 | Clerical Table | 07 Nos. | |
| 04 | Bid/3//04 | Pigeon Hole | 02 Nos. | |
| 05 | Bid/3 /05 | Clerical Chair | 07 Nos. | |
| 06 | Bid/3/06 | Lecture Hall Chairs- Type I | 125 Nos. | |
| | | Lecture Hall Chairs- Type II | 100 Nos. | |
| 07 | Bid/3/07 | Junior Executive Chairs | 50 Nos. | |
| 08 | Bid/3 /08 | Examination Table(Wooden) | 200 Nos. | |
| 09 | Bid/3 /09 | Book Self Wooden | 06 Nos. | |
| 10 | Bid/3/10 | Typist Chair | 02 Nos. | |

**Last date & time for collection of Bid Documents:**
*2016 September 13th Tuesday at 3.00pm.*

**Closing date & time for submission of bids:**
*2016 September 15th Thursday at 2.30 pm.*

**Chairman,
Regional Procurement Committee**
(C/23087)(11.17.38)

**மொத்த / சில்லறை வியாபார
போட்டோக் கொப்பி பிரதிகள்**
A4/A3/B5/B4/ Legal 70,80 - Avalon / King / IK Brands
பாடசாலை உபகரணங்கள்
அச்சகங்களுக்குத் தேவையான Typing Papers
Photo copy Services
தரமானதாகவும் மலிவானதாகவும் ஒரே கூரையின்கீழ் பெற்றிட நாட வேண்டிய இடம்
**Horizon Enterprises**
No 870 K.K.S. Road, Jaffna.
Tel: 021 492 7499, 011 434 4393, 072 784 9786

**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
J/MANIPAY HINDU COLLEGE (National School)
விடுதி மேற்பார்வையாளர் விண்ணப்பம் கோரல்**
எமது கல்லூரியில் விடுதி மேற்பார்வையாளர் பதவிக்கான வெற்றிடம் காணப்படுவதனால் தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொருத்தமானவர்கள்
**26.08.2016 வெள்ளிக்கிழமை
காலை 9.30 மணி முதல் ஒரு மணி வரை**
சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரம், கல்விச் சான்றிதழ், நற்சான்றிதழ் என்பவற்றுடன் நேரில் வரவும்.
**வயது எல்லை குறைந்தது 35 இற்கு மேல்.**
*அதிபர்.*

# பொதுக் கூட்டம்

கிளிநொச்சி, ஓக 23
கிளிநொச்சி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
மாற்றுத் திறனாளிகளின் நலன்கள் தொடர்பாக கிராம மட்டத்தில் இயங்கும் அவர்களது சுய உதவிக் குழுக்களின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் தி.சிவமாறன் அறிவித்துள்ளார். (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மீனவர் போராட்டங்களில் தெற்கு மீனவர் இணையத் தயார்

## இலங்கை கரைவலை மீனவர் சங்க தலைவர் நிமால் கூரே தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.23

வடக்கின் கடல் வளத்தை அள்ளிச் செல்லும் இந்திய மீனவர்களுக்கு எதிரான போராட்டங்களுக்கு எமக்கு முன் கூட்டியே அழைப்பு விடுக்கப்பட்டால் தென்னிலங்கையில் இருந்து ரயில்களில் வந்து வடக்கு மீனவர்களுடன் இணைந்து போராடத் தயாராக இருக்கின்றோம்.

இவ்வாறு இலங்கை கரைவலை மீனவர் சங்கத் தலைவர் நிமால் கூரே தெரிவித்தார்.

மத்திய கடற்றொழில் அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மீனவ அமைப்புக்களுடனான சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

வடக்கின் கடல் வளத்தை அள்ளிச் செல்லும் விடயம் நீண்ட காலமாக பேசப்படுகின்றது. ஆனால் தீர்வு இல்லை. இது தொடர்பில் வடக்கு மீனவர்கள் நடத்தும் போராட்டங்களுக்கு எம்மை அழைத்தால் வந்து இணைந்து போராடத் தயாராக இருக்கின்றோம்.

அதேபோன்று வடக்கு மீனவர்கள் விரும்பாத கடலட்டைத் தொழிலும் இங்குதான் நடக்கின்றது. குறித்த தொழில் அம்பாந்தோட்டையில் கிடையாது. கடலட்டைத் தொழில் செய்ய முடியாது என என்.எம்.பெரேரா காலத்திலேயே சுற்றறிக்கை உள்ளது. அவ்வாறானால் எவ்வாறு தற்போதும் அனுமதியளிக்கப்படுகின்றது?

நாட்டில் 1980ஆம் ஆண்டு கரைவலைச் சட்டம் உருவானபோது இருந்த ஐக்கியம் தற்போது இல்லை. அப்போது ஐக்கியமாகச் செயல்பட்ட மீனவர்கள் 1.5 கிலோமீற்றர் தூரம் கரைவலைத் தொழிலுக்காக ஒதுக்கினர். ஆனால் இன்று கரையோரத்திலேயே சகல தொழிலும் இடம்பெறுகின்றது. -என்றார். (ற-10)



தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்றது. வெளிக்களத் தலைவர் திருமதி. சி.குகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்டடத்தை வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா நாடா வெட்டித் திறந்தார். நிகழ்வில் போசகர் என். தெய்வேந்திரராஜர மற்றும் சக நிர்வாகக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (ற-ரி)

# போராளிகளுக்கு ஊசி ஏற்றப்பட்டால் அது பெரும் மனித உரிமை மீறலாகும்

## கல்வி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு



வவுனியா, ஓக.23

முன்னாள் போராளிகளுக்கு விச ஊசி ஏற்றப்பட்டிருந்தால் அது மனித உரிமை மீறலாகும். தமிழர்களை அழித்தொழிக்கும் இவ்வாறான செயலை நாம் கண்டிக்க வேண்டும்.

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

முன்னாள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகளுக்கு விச ஊசி ஏற்றப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது. அது உண்மையா என்பது இன்னும் யாருக்கும் தெரியவில்லை. அது இன்னமும் பரிசோதனையில் இருக்கின்ற விடயமாகும். அவ்வாறான ஒரு விடயம் நடந்திருந்தால் அது மனித உரிமை மீறலாகும் என்பதை நாம் யாரும் மறுக்கமுடியாது.

தற்போது பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. உண்மையில் அவ்வாறு இடம்பெற்றிருந்தால்அதுகண்டிக்கப்படவேண்டும். இது தமிழர்களை அழித்தொழிக்கச் செய்கின்ற செயலாக இருந்தால் நாம் அதை வன்மையாக கண்டிக்கத்தான் வேண்டும். கடந்த காலத்திலும் மலையகத்தில் கருத்தடை மூலமாக இன அழிப்பு ஏற்படுத்தப்பட்டது. இன அழிப்பு என்பது தமிழர்களுக்கு புதியது அல்ல. இது ஏற்கனவே மலையகப்பகுதியிலும் இந்தப் பகுதியிலும் இடம்பெற்றிருக்கின்றது. நடந்திருந்தால் அதை நாங்கள் கண்டிக்கவேண்டும். ஆகவே அந்த மாதிரியான சூழ்நிலைகள் எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது. இன்று புதிய அரசு தமிழ் மக்களுக்கான எண்ணக் கருத்தில் ஒரு நல்ல எண்ணத்தை உருவாக்கி வருகின்றது. பல பிரச்சினைகளுக்கு மத்தியிலே பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் செய்யப்படுகின்றன. பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் வடபகுதியை நோக்கி வந்து கொண்டிருகின்றன எதிர்காலத்திலே நாங்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்- என்றார். (ற-21)

# துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 175 குடும்பங்களுக்கு மின் இணைப்பு

## விசேட திட்டத்தின் கீழ் இலவசமாக

முல்லைத்தீவு, ஓக.23

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் கிராமங்களில் உள்ள அனைவருக்கும் விசேட திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கோட்டைகட்டியகுளம் கிராமத்திலுள்ள 119 குடும்பங்களும் அம்பலப்பெருமாள்குளம் கிராமத்திலுள்ள 97 குடும்பங்களுமாக 216 குடும்பங்கள் மின் இணைப்பு இல்லாதுள்ளன. தமது பொருளாதார நிலமையைக் கருத்தில் கொண்டு இலவச மின் இணைப்பு வழங்கி உதவுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அவர்களின் கோரிக்கை சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டது. இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டத்துக்கு ஒப்புதல் கிடைத்துள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் கோட்டை கட்டிய குளத்தைச் சேர்ந்த 92 குடும்பங்களுக்கும், அம்பலப்பெருமாள் குளத்தைச் சேர்ந்த 83 குடும்பங்களுக்குமாக 175 குடும்பங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது.

முதற்கட்டப் பணிகளை இலங்கைமின்சாரசபையினருடன் இணைந்து மேற்கொண்டுள்ளோம். அவர்கள் விரைவில் பணிகளை ஆரம்பிக்கவுள்ளனர். எதிர்வரும் 5ஆம் திகதி இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஒரு மாத காலத்துக்குள் பூர்த்தி செய்யப்படும்.

இந்தக் கிராமங்களில் வாழும் ஒரு சில அரச உத்தியோகத்தர்களும், ஓரிருவரும் மட்டுமே தற்போது மின் இணைப்புப் பெற்றுள்ளனர். இரு கிராமங்களைச் சேர்ந்த 21 குடும்பங்களுக்கு தற்போது மின் இணைப்பு உண்டு. இந்தத் திட்டத்தின் முடிவில்அனைத்து வீடுகளுக் கும் மின் இணைப்பு வழங்கப்படும்.- என்றார்.(ற-10)

**பணிப்பெண் தேவை**

துர்க்கை அம்மன் கோயிலுக்கும் மல்லாகத்துக்கும் இடையிலுள்ள வீடொன்றில் வேலை செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 502 7708, 021 720 0918

**காணி தேவை**

யாழ். நாவலர் வீதி மற்றும் அதற்கு அண்மித்த பகுதிகளில் சுமார் 10 பரப்புக் காணி தேவை. (J 3897)(12.18)

உடன் தொடர்பு: 076 907 8558

**வேலையாள்கள் தேவை**

கைதடி மற்றும் நுணாவில் பகுதியிலுள்ள இருபலசரக்குக் கடைகளுக்கு பெண் வேலையாள்கள் தேவை.

077 359 4280, 077 530 5883

**வீடு வளவு விற்பனைக்கு உண்டு**

மீசாலை வடக்கு.வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளுடன் உடன் குடியமரக் கூடிய நல்ல நிலையில் உள்ள 4 பரப்பு வீடு வளவு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
நவம்- 077 6474639
தவம்- 077 5977210

**கடை/ காணி விற்பனைக்கு உண்டு**

விசாலமான வீடு, நான்கு கடைகள் விற்பனைக்குண்டு. கட்டாப்பாலைவீதி, மானிப்பாய், (பிரபல பாடசாலைகளுக்கு அருகில்) 5 பரப்பு 9 குளி வீட்டுடன், மாதகல் வீதி பண்டத்தரிப்பு சந்திக்கு அருகில் 12 ½ பரப்பு கடையுடன் விற்பனைக்கு உண்டு. விலைகள் பேசி முடிவெடுக்கப்படும்.

077 611 0049, 076 770 1703

**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல், தளபாட காட்சி அறைக்கு
01. Electrician
02. Showroom Marketing Sales & Executives(Girls)
03. Showroom boys
- 25 Days Work for Month
- Time 9.00 AM 8.00 PM
- மாத வேதனமாக 18000/-

ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

கிங்ஸ் எலக்ரோனிக்ஸ், வேம்படி சந்தி அருகில் 12, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 454 6699

# சாலாவவில் சேதமடைந்த வீடுகளுக்கு நட்டஈடு

சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்பால் சேதமடைந்த வீடுகளுக்கு வழங்கப்பட்ட நட்டஈடு போதாது என்று மேன்முறையீடு செய்தோருக்கான நட்டஈட்டை செலுத்தும் நடவடிக்கை இந்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுமார் 650 பேர் இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளனர் என்று கொழும்பு மாவட்ட செயலாளர் சுனில் கன்னங்கர குறிப்பிட்டார்.

மேன்முறையீடுகளுக்கு அமைய நில அளவைத்திணைக்களத்தினரின் உதவியுடன் அளவீட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டமையை அடுத்து நட்டஈடு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட 700 வீடுகளுக்கான நட்டஈடு தற்போது வழங்கப்பட்டுள்ளது என்று கொழும்பு மாவட்ட செயலாளர் சுனில் கன்னங்கர தெரிவித்தார். (ற-5)

# பந்துல மற்றும் டலஸுக்கு பதிலாக புதிய அமைப்பாளர்கள் நியமனம்

கொழும்பு, ஓக. 23

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் பதவிகளிலிருந்து விலகிய மகிந்த அணி ஆதரவாளர்களான பந்துல குணவர்த்தன, டளஸ் அழகப் பெரும ஆகியோருக்குப் பதிலாக புதிய அமைப்பாளர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று நியமிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிந்த ஆதரவு அணி தொகுதி அமைப்பாளர்களை அவர்களின் பதவிகளிலிருந்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் நீக்கினார். அதையடுத்து பதவி நீக்கம் செய்யப்படாது இருந்த மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்த்தன, டலஸ் அழகப்பெரும ஆகியோர் தமது பதவிகளிலிருந்து விலகுகின்றோம் என்று அறிவித்தனர்.

வெற்றிடமாகியிருந்த தொகுதி அமைப்பாளர் பதவிகளுக்கு புதியவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று நியமிக்கப்பட்டனர்.

மாத்தறை மாவட்ட அமைப்பாளராக இதுவரை இருந்த டலஸ் அழகப்பெருமவுக்குப் பதிலாக இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன நியமிக்கப்பட்டார். ஹோமாகம அமைப்பாளராக இருந்த பந்துல குணவர்த்தனவுக்குப் பதிலாக, மேல் மாகாண சபை அமைச்சர் காமினி திலகசிறி நியமிக்கப்பட்டார். (ற-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நினைவகலா நினைவுகள்





**இந்திரராசா சங்கர்** **பூரணபாக்கியம் சங்கர்**

தோற்றம்:- 21.10.1937
மறைவு:- 23.08.2012

நேற்றுவரை எம்முடன் வாழ்ந்ததாகவே
உள்ளத்து உணர்வலைகள் ஆசையுடன்
அசைபோடுகின்றன என்றாலும் உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை இறைஞ்சி அஞ்சலிக்கின்றோம்.

தோற்றம்:- 11.02.1936
மறைவு:- 29.08.2009

505, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



03.08.2016 புதன்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

திருமதி
**செல்வராணி பஞ்சாட்சரம்**

**தோற்றம்** 06.05.1941 **மறைவு** 03.08.2016

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (23.08.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.628/5, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 03 . 05 . 1929



மறைவு 24 . 07 . 2016

**அமரர் செல்லையா கனகலிங்கம்**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

கடந்த 24.07.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் செல்லையா கனகலிங்கம் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (23.08.2016) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை குடும்பத்தினர்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
**சின்னத்தம்பி குணபூரணம்**



தோற்றம் 23 . 06 . 1933
மறைவு 25 . 07 . 2016

கடந்த 25.07.2016 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் சின்னத்தம்பி குணபூரணம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (24.08. 2016) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 43, கலைவாணி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர். 077 626 0731

# 8 ஆம் ஆண்டில் அணையாத நினைவுகளுடன்

**திருமதி தெய்வநாயகி வீரசிங்கம்**

தோற்றம் 15 . 02 . 1939



மறைவு 22 . 08 . 2008

திதி:
அபரபக்க ஷஷ்டி
23.08.2016

ஆருயிர்த் தாயே!
ஆலடியான் அடிசேர்ந்து
ஆண்டுகள் எட்டானதுவோ.
நற் பண்புகளும், நன் மக்கட் பேறும்,
சுற்றமும், சூழலும் போற்றிட வாழ்ந்து,
அணைந்த எங்கள் குடும்ப விளக்கே!
அகிலம் உள்ளவரை
அணையாத நினைவுகளுடன்....

"கௌரிக்கோட்டம்,
அல்வாய். குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவு

அமரர் திருமதி
**சந்திரா பாஸ்கரன்**

மண்ணில் 03.08.1948
விண்ணில் 25.07.2016



சந்திரா!!!
சந்திரனையொத்த எங்கள்
சாந்தியின் சுடர் விளக்கே
நொந்தழுது நாம் வருந்த
சென்றதெங்கே அம்மா- நின்
பத்தாவோ பரிதவிக்க
பற்றுடையோர் பதறியழ
பட்டதுயர் போது மென்றோ
பரலோகம் போய் மறைந்தீர்
விழி கனக்கும் நீர் சுமந்து
வழி அனுப்பி வைக்கின்றோம்
வானுறையும் தேவனுடன்
நீ உறைவாய் நித்தியமாய்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (24.08.2016) புதன்கிழமை காலை 6.00 மணிக்கு சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் கலந்து கொண்டு இறைவேண்டல் செய்ய உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

2A, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். கணவர் : பா.பாஸ்கரன்
சகோதரர்கள் , உறவினர்கள்.


## தெய்வீக நிகழ்வுகள்

நல்லூர் ஆலய பெருந்திரு விழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் தெய்வீக இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக உரைகள் என்பன நடைபெறுகின்றன. இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள 16 ஆம் நாள் திருவிழாவில் நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் மனிதனும் ஆன்மிகமும் எனும் தலைப்பில் சைவப்புலவர் தவராசாவின் தெய்வீக சொற்பொழிவு மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரைநடைபெறும். நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் துர்க்கா தேவி இல்லத்தின் அனுசரணையில் தெய்வீக இசையரங்கம் மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும். நல்லை ஆதீன மண்டபத்தில் மொடேர்ண் சர்வ தேச இந்து ஆகம கலை, கலாசார நிறுவனத்தின் தெய்வீக இசைச் சங்கமம் இரவு 7 மணிமுதல் 8 மணி வரை நடைபெறும். (ற-ரி)

## நடைபவனி

நல்லூர் கந்தன் ஆலயத்தின் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வவுனியாவிலிருந்துவேல்தாங்கிய நடைபவனி இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வு ஆறாவது தடவையாக இந்த வருடமும் இடம்பெற உள்ளது. நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீபத்திர காளியம்மன் ஆலயத்திலிருந்து ஆலய நிர்வாகியும் அறநெறிச் செல்வியுமான கு.ஜெயராணி(சாமி அம்மா) தலைமையில் இடம் பெறும்.
வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து புறப்படும் வேல் தாங்கிய பாதயாத்திரைக் குழு மன்னார் வீதியூடாக வவுனியா நகரை அடைந்து, ஏ-9 வீதியூடாக நல்லூர் கந்தன் ஆலயத்தை நோக்கிப் புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு பொருளாதார மேம்பாட்டுக்கு புலம் பெயர் தமிழர் உதவ வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா வேண்டுகோள்






யாழ்ப்பாணம், ஓக. 23
எமது பொருளாதார மேம்பாட்டுக்கு புலம்பெயர் தமிழர்கள் உதவிகளை வழங்க முன்வர வேண்டும். இங்குள்ள இளைஞர் - யுவதிகளுக்கு முதலீட்டாளர் மாநாட்டின் ஊடாக வேலை வாய்ப்புக்கள் கிடைக்க வேண்டும். இங்கு தொழிற்சாலைகள் மீள இயக்கப்படுகின்ற போது சுற்றுச் சூழல் தொடர்பில் அதி கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலீட்டாளர் சம்மேளன ஆரம்ப நிகழ்வு யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் இலங்கை நடுவண் வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், க.சிவமோகன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். வடக்கில் உள்ள முதலீட்டாளர்களும் இதில் பங்கேற்றனர்.

அங்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்ததாவது:

போருக்கு முன்னர் இங்கு இயங்கிய தொழிற்சாலைகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும். இங்குள்ள 90 ஆயிரம் கணவனை இழந்த பெண்களுக்கும், முன்னாள் போராளிகளுக்கும் இதனூடாக வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

இந்தத் தொழிற்சாலைகள் மீள ஆரம்பிக்கப்படுகின்றபோது, சுற்றாடல் தொடர்பில் அதிகளவு கரிசனை வெளிப்படுத்தப்பட வேண்டும். வடக்கு மாகாண முதலீட்டாளர் சம்மேளனம், போரால் சிதைந்து போன எமது வடக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும். இது நல்ல ஆரம்பமாக அமைய வேண்டும். 30 ஆண்டு காலப் போர் காரணமாக இங்கு முதலீட்டு வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. இருந்தவைகளும் அழிக்கப்பட்டன.

பன்னாட்டு சமூக ஒழுங்கில் நாமும் இணைந்து கொள்ள வேண்டும். அதற்குரிய பொருளாதாரப் பலத்தை நாம் பெற்றுக் கொள்வதற்கு புலம்பெயர் தமிழர்கள் உதவ வேண்டும் - என்றார்.

வடக்கு மாகாண ஆளுநர் கூரே தெரிவித்ததாவது:

இந்த நிகழ்வை ஒழுங்கமைப்பதற்கு உதவிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

நிலையான நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், துறைசார் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் அடையாளமாக வீதி அபிவிருத்தி, புகையிரதப் போக்குவரத்து, மின்சாரம் வழங்கல் உள்ளிட்ட அடிப்படை உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வேலையில்லாத இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிப்பானது, உட்கட்டமைப்பு அபிவிருத்தியைப் பயனுடையதாக்காது. மாறாக அவை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் சுமையாகவே அமையும். இந்த முதலீட்டாளர் மாநாட்டின் ஊடாகவே எமது வேலையற்ற இளைஞர் - யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க முடியும்

முதலீட்டாளர்கள் தகவல் மையம் மாவட்டச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. புதிய வியாபார முயற்சிகளை முன்னெடுக்கவும், தொழில்சார், துறைசார் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும், அவை தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் மாதம் ஒரு முறை முதலீட்டாளர்கள் ஒன்று கூடி ஆராய்வதற்கான கூட்டம் நடத்துவதற்கான அனுமதியை அரசிடம் கோரியுள்ளேன்.

வடக்கில் அன்றாடம் வாழ்வதே சவாலான விடயமாக உள்ளது. பாவனைக்குதவாத குடி தண்ணீரும், கடும் வெப்பமும் சவாலைத் தோற்றுவித்துள்ளன. ஆனால் 9 மாதங்கள் கிடைக்கும் வெப்பம் சிறந்த சக்தி மூலமாகும். அதனை நாம் உரிய வகையில் பயன்படுத்திக் கொள்ள முடியும். வடக்கில் முன்னாள் போராளிகள், கணவரை இழந்த ஆயிரம் பெண்கள் போதிய வருமானம் இன்றி வாழ்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் அவர்களுக்கான உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் - என்றார்.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்ததாவது:

வடக்கில் முதலீட்டுக்காக பல துறைகள் உள்ளன. இருப்பினும் முதலீட்டாளர்கள் கடல் வளம், விவசாயம் ஆகிய இருதுறைகளிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். வடக்கில் குறிப்பாக யாழ். குடாநாடு பல திட்டங்கள் மற்றும் கைத்தொழில் மையங்கள் இயங்கிய பிரதேசம். அவை யாவும் போர் காரணமாக அழிக்கப்பட்டு விட்டன. இன்று நாம் அவற்றைப் பூச்சியத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றோம்.

குடாநாட்டின் மீன்பிடியின் முக்கியம் கருதி துறைமுகம் மற்றும் இறங்கு துறைகள் அமைக்க நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. நல்லாட்சி அரசு ஆரம்பித்து தற்போதே ஓர் ஆண்டு கடந்துள்ளது. மிகுதி 4 ஆண்டுகால இடைவெளியில் மேலும் சமூக வலுவூட்டல்கள் இடம்பெறும்.

இந்தப் பிரதேசங்களின் அபிவிருத்திக்காக நாம் பல முதலீட்டாளர்களுடன் ஏற்கனவே பேசியுள்ளோம் - என்றார்.

(ற-5-ரி3-ரி4-101-106)

## மாணவிகளுக்காக சிறப்பு பஸ் சேவை

மட்டக்களப்பு, ஓக. 23
கிராமப் பகுதிகளில் இருந்து பிரத்தியேக வகுப்புகளுக்காக மட்டக்களப்பு நகருக்கு சென்று வரும் மாணவிகளின் நன்மை கருதி பெண்களுக்கான சிறப்புப் பஸ் சேவை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

ஆரையம்பதி, காத்தான்குடி, நாவற்குடா மற்றும் கல்லடிப் பிரதேசங்களிலிருந்து சனி, ஞாயிறு தினங்களில் பிரத்தியேக வகுப்புகளுக்காக மட்டக்களப்பு நகரத்துக்குச் சென்று வரும் மாணவிகளுக்காவே இந்த பஸ் சேவை நடத்தப்பட உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முறையாக பெண்களுக்காக ஆரம்பிப்பட்ட பஸ் சேவை இதுவாகும். சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பி.ப 2.30 மணிக்கு ஆரையம்பதியிலிருந்து மட்டக்களப்பு நகருக்கும் மீண்டும் மாலை 6 மணிக்கு மட்டக்களப்பு நகரிலிருந்து ஆரையம்பதி வரையும் பஸ் சேவை இடம்பெறும்.

இதன் மூலம் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவிகள் அச்சமின்றிப் பாதுகாப்பாகத் தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

பயணிகளது முழுமையான ஒத்துழைப்புக்கள் கிடைக்குமிடத்து இதனை நாளாந்த சேவையாக காலையிலும் மாலையிலும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று, இந்தச் சேவையை ஆரம்பித்து வைத்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்தார்.

(ற-5-ரி7)

## ஓய்வூதியப் பணத்தில் இருந்து 50 ரூபா காரணம் கூறாது அறவிடப்படுகிறது

### தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்கள் குற்றச்சாட்டு

தென்மராட்சி, ஓக. 23
தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்களின் மாதாந்த ஓய்வூதியப் பணத்திலிருந்து 50 ரூபா காரணம் எதுவும் தெரிவிக்கப்படாது அறவிடப்படுகின்றது என்று ஓய்வூதியர்கள் கவலை தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது:

மாதாந்த ஓய்வூதியப் பணம் வங்கிகளுக்கு அனுப்பப்படுகின்றது. ஆனால் ஓய்வூதியப் பணத்தில் என்ன காரணத்துக்காக மாதாந்தம் 50 ரூபா அறவிடப்படுகிறது என்ற விவரம் தெரியவில்லை. முன்னைய காலத்தில் ஓய்வூதிய வவுச்சர் வந்த வேளையில் எதற்காகப் பண அறவீடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறியக் கூடியதாக இருந்தது.

தற்போது நேரடியாக ஓய்வூதியத் திணைக்களத்தினால் வங்கிகளுக்கு ஓய்வூதியப் பணம் அனுப்பப்படுவதால் அறவிடப்படும் தொகை என்ன தேவைக்காக அறவிடப்படுகிறது என்பது தெரியாதுள்ளது - என்றனர்.

சங்கத்தில் இணைந்து உரிய படிவத்தைப் பூர்த்தி செய்து சம்மதம் தெரிவித்தவர்களிடம் மட்டும் சந்தாவாக மாதாந்தம் 50 ரூபா அறவிடப்படுகிறது எனவும் அங்கத்துவத்தில் இணையாத எந்தவொரு ஓய்வூதியரிடமிருந்தும் பணம் அறவிடப்படுவதில்லை- என்று ஓய்வூதிய சங்க நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

ஓய்வூதியர்களிடம் ஓய்வூதியர் சங்கத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ளீர்களா எனக் கேட்டபோது எந்தவொரு சங்கத்திலும் தாங்கள் இணையவில்லையெனவும் அது தொடர்பாக எந்தவொரு படிவமும் பூர்த்தி செய்து வழங்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

இவ்வாறான முறைப்பாடு எதுவும் இதுவரை பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கவில்லை. பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் நேரடியாகத் தன்னுடன் தொடர்பு கொண்டால் உரிய தீர்வு வழங்கப்படும்- என்று பிரதேச செயலகக் கணக்காளர் தெரிவித்தார்.

(ற-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## தென்னைசார் கைத்தொழில் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23
தென்னை சார் கைத்தொழில் தொடர்பான ஒரு நாள் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 27 ஆம் திகதி சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.
தென்னை அபிவிருத்தி அதிகார சபையும், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையும், லங்றட் நிறுவனத்துடன் இணைந்து தேசிய தென்னை தினத்தை முன்னிட்டு பயிற்சி வகுப்பை நடத்துகின்றன.
ஆர்வமுள்ளவர்கள், கைத்தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள், புதிய தொழில் முயற்சியாளர்கள், தொழில் முயற்சியாளர்கள், தொழில் வழங்குநர்கள், சந்தைப்படுத்துபவர்கள் கலந்து பயன்பெற முடியும்.
பயிற்சி நெறியில் செய்முறை விளக்கத்துடன் கூடிய தூரிகைகள், துடைப்பங்கள், கயிற்றுப் பாய்கள், தும்புத்தடி, சிரட்டைக்கரி, சிரட்டையை உபயோகித்து செய்யும் பல்வேறு விதமான அழகு சாதனப் பொருள்கள் போன்றவற்றின் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.
இது தொடர்பில் மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவர்கள், தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தனுடன் 021222 6014 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5-36)

## வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 23
நாகர்கோவில் வடக்கு முருகையா தேவஸ்தான வருடாந்த திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (ற-ரி)

## குடிதண்ணீர் கிணறுகள் சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23
அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் எல்லைக்குட்பட்ட அலுக்கை, குருவளை பகுதிகளில் உள்ள குடிதண்ணீர் கிணறுகள் இரண்டு இரண்டரை லட்ச ரூபா செலவில் சீரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளன. (ற-5-36)

# காக்கைதீவில் அமையவுள்ளது கழிவு நீர் பரிகரிப்பு நிலையம்

### உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில்

யாழ்ப்பாணம், ஓக. 23
யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட வீடுகளில் இருந்தும், விடுதிகளில் இருந்தும் சேகரிக்கப்படும் கழிவுநீரைப் பரிகரிக்கும் நிலையத்துக்கான அடிக்கல் காக்கைதீவில் நேற்று திங்கட்கிழமை நடப்பட்டது. மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அடிக்கல் நட்டார்.
யாழ். மாநகரசபையினது நிதியிலிருந்தும், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து 18.5 மில்லியன் ரூபா இதற்காக ஒதுக்கப்பட்டது.
யாழ். மாநகரசபையின் எல்லைக்கு உட்பட்ட 23 வட்டாரங்களில் இருந்தும் கழிவு நீர்த் தாங்கிகளின் மூலம் எடுத்து வரப்படும் கழிவு நீர் கல்லுண்டாய்ப் பகுதியில் உரிய முறையில் பரிகரிக்கப்படாமல் இதுவரை கழிக்கப்பட்டு வந்தது. பரிகரிப்பு இயந்திர வசதி மாநகர சபையில் இல்லாததே அதற்கான காரணமாக அமைந்தது.
தற்போது 30 ஆயிரம் லீற்றர் வரையான கழிவு நீர் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அகற்றப்படுகிறது. எதிர்காலத்தில் சுற்றுலா காரணமாக விடுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் 50 ஆயிரம் லீற்றர் கழிவுநீரைப் பரிகரிக்கக்கூடிய வகையில் இந்த நிலையம் அமைக்கப்படவுள்ளது.
கழிவுநீர் பரிகரிப்பு நிலையத்தில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட பின்னர் வெளியேறும் நீர், இந்த நிலையம் அமையவுள்ள பகுதிகளில் அமைந்திருக்கும் தென்னந் தோட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட உள்ளது என்றும், திண்மப் பொருள்கள் சேதனப் பசளைகள் தயாரிப்பில் பயன்படுத்தப்பட உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.
கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் அமையவுள்ள இந்த நிலையத்தின் கட்டுமானப்பணிகள் நான்கு மாதங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ற-5)



## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,.ஓக.23
தாவடி வடக்கு ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் உற்சவம் இடம்பெறும். எதிர்வரும் 4ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை சங்காபிசேகம் நடைபெறும்.(ற)

## தெய்வீக இசை சங்கமமும் நடன நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஓக. 23
நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீனகுருமூர்த்த ஆலய முன்றிலில் நாளை புதன் கிழமை மாலை 3 மணிக்கு வவுனியா வேப்பங்குளம் அன்பகத்தைச் சேர்ந்த மாணவர்கள் வழங்கும் தெய்வீக இசைச் சங்கமும், ஆசிரியர் சுஜி சிற்றம்பலத்தின் நெறி யாள்கையில் நடன நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.
வவுனியா கோயில்குளம் அகிலாண்டேஸ்வரர் அருளகத்தைச் சேர்ந்த மாணவர்கள் வழங்கும் தெய்வீக இசைச்சங்கமம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற இருப்பதுடன் ஆசிரிய ஆலோசகர் சூரியாழினி வீரசிங்கத்தின் நெறியாள்கையில் உருவான நடன இசை நாட்டிய நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ற-5-ரி7)



## யாழ். இந்து சாரணர் நூற்றாண்டை முன்னிட்டு சிறப்புப் பயிற்சிப்பாசறை

யாழ்ப்பாணம், ஓக. 23
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் சாரணர் நூற்றாண்டை முன்னிட்டு புதிதாக இணைந்து கொண்ட சாரணர்களுக்கான விசேட பயிற்சிப்பாசறை அண்மையில் நடைபெற்றது. யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை வளாகத்தில் மூன்று நாள்கள் கல்லூரி அதிபரின் வழிகாட்டலில் நடத்தப்பட்டது.
முதல் நாள் நிகழ்வு கல்லூரியின் பிரதி அதிபர் சதா. நிமலன் தலைமையிலும், இரண்டாம் நாள் நிகழ்வு யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபரின் வாழ்த்துரையுடனும் மூன்றாம் நாள் நிகழ்வு குழுச் சாரணப் பொறுப்பாசிரியர் க.சுவாமிநாதன் தலைமையிலும் நடைபெற்றது.
நிகழ்வுகளில் கல்லூரி சாரணர் தலைமைச் சங்க ஆணையாளர் ந. சௌந்தரராஜன், மாவட்ட ஆணையாளர் செ. தேவரஞ்சன், அயற்பாடசாலை சாரணர் பொறுப்பாசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் பங்குகொண்ட சாரணர்களுக்குச் சாரணர்சார் பயிற்சிகள் வழங்கப்பட்டதோடு துறைசார் நிபுணர்களின் பல்வேறு செயலமர்வுகளும் நடைபெற்றன. (ற-ரி)

## சாவகச்சேரி பொதுச் சந்தையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம்

### 12 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது

தென்மராட்சி, ஓக. 23
சாவகச்சேரி பொதுச் சந்தையில் 12 லட்சம் ரூபா செலவில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான இடத்தை அடையாளப்படுத்தும் நடவடிக்கையை சாவகச்சேரி நகரசபையினர் முன்னெடுத்துள்ளனர். 2014 ஆம் ஆண்டு சந்தை வளாகத்தில் புதிய விற்பனைப் பிரிவுக் கட்டடம் அமைக்கப்பட்ட வேளையில் சந்தையில் இயங்கிய பாதுகாப்பு நிலையங்களும் அகற்றப்பட்டன. தற்போது பாதுகாப்பற்ற நிலையில் சந்தைக்கு உள்ளேயும் வெளியேயும் தமது சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் தரித்துவிடப்படுவதால் வாகனங்களின் பாதுகாப்புக் கருதி பாதுகாப்பு நிலையத்தை அமைக்குமாறு பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் வேண்டுகோள் விடுத்தனர்.
பாதுகாப்பு நிலையம் அமைக்க 12 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், நிலையத்தை சந்தைக்கு வருவோரின் வசதிக்கேற்ற விதத்தில் அமைப்பதா அல்லது சந்தை வளாகத்தில் பொதுவான இடத்தில் அமைப்பதா என்பது ஆராயப்பட்டு இடத்தேர்வு இடம்பெற்று வருகிறது என்று நகரசபையின் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார்.
முன்னர் சந்தையில் மூன்று இடங்களில் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. பெருமளவு வருமானமும் சபைக்குக் கிடைத்தது. தற்போது மீன்சந்தையில் மட்டும் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிலையத்திலிருந்து மட்டுமே வருமானம் கிடைக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-5-9)

# கொட்டாம்பிட்டி கிராமத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் விரைவில்

தென்மராட்சி, ஓக. 23
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மீசாலை மேற்கு கொட்டாம்பிட்டி கிராமத்துக்குத் தினமும் 2 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் சாவகச்சேரி நகர சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இந்தக் கிராமத்தில் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. அந்த மக்கள் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையால், தூர இடங்களுக்குச் சென்றே குடிதண்ணீரைப் பெறுகின்றனர். தமது குடி தண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் இந்தப் பகுதி மக்கள் தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். அந்த மக்களின் கோரிக்கைக்கு அமைவாக, உரிய நடவடிக்கை எடுக்குமாறு, சாவகச்சேரி நகர சபையின் செயலரிடம், சாவகச்சேரி பிரதேச செயலர் கேட்டுள்ளார். குடிதண்ணீர் விநியோகிப்பதற்காக பவுசர் கொள்வனவு செய்யப்பட்டு, விரைவில் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது என்று நகர சபையின் செயலர் கா. சண்முகதாசன் தெரிவித்தார். சபையில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள இரண்டு நீர்த்தாங்கிகள் துருப்பிடித்து பழுதடைந்து காணப்படுகின்றன.
புதிதாக நீர்த்தாங்கி கொள்வனவு செய்து குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. நகர சபைக் கிணற்றிலிருந்து, சாவகச்சேரி சந்தியிலிருந்து பிரிந்து செல்லும் 7 வீதிகளுக்கு தலா ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு தற்போது குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது எனவும் குறித்த கொட்டாம்பிட்டிப் பகுதி 3 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படுவதால் நீர்த்தாங்கி மூலம் குடி தண்ணீர் வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனோர் படகுத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

## மீள் நிர்மாணத்துக்கான அடிக்கல்லை கடற்றொழில் அமைச்சர் நேற்று நட்டார்

யாழ்ப்பாணம், ஓக. 23

காரைநகர் சீனோர் படகுத் தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு 26 வருடங்களின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. படகுத் தொழிற்சாலை மீள் நிர்மாணத்துக்கான அடிக்கல் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவால் நேற்று நடப்பட்டது.

காரைநகர் சீனோர் படகுத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்காக, மீன்பிடி அமைச்சு 285 மில்லியன் ரூபாவை ஒதுக்கியது. தொழிற்சாலையிலிருந்து பன்னாட்டுத் தரத்திலான படகுகள் உற்பத்தி செய்யப்படவுள்ளன. இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பும் வழங்கப்படும்.

அடிக்கல் நடும் நிகழ்வில், கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அங்கஜன், யாழ்.மாவட்டச் செயலக மேலதிக செயலர் பா.செந்தில்நந்தனன், காரைநகர் பிரதேச செயலர் திருமதி பாபு தேவநந்தினி ஆகியோர் கலந்து கொண்டனர்.



> 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் வரையில் படகு உற்பத்தித் தொழிற்சாலை இயங்கி வந்தது. வட பகுதியைச் சேர்ந்த ஆயிரத்து 500 பேர் வரையில் வேலை செய்தனர்.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரையில் படகு உற்பத்தித் தொழிற்சாலை இயங்கி வந்தது. வட பகுதியைச் சேர்ந்த ஆயிரத்து 500 பேர் வரையில் வேலை செய்தனர். போரின் பின்னர் மக்கள் மீள்குடியமர்வு இடம்பெற்ற போதும் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

26 வருடங்களின் பின்னர் தற்போதே அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு ஜூலை மாதத்துக்குள் இதன் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து தொழிற்சாலை மீளச் செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5-250)

## சிவமகாராசாவின் நினைவு தினம் தெல்லிப்பழையில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஓக.23

சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசாவின் 10 ஆவது ஆண்டு நினைவு தினம் கடந்த சனிக்கிழமை தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

அவரது சிலைக்கு மலர்மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில்வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி. வடக்கு பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும், சிவமகாராசாவின் சகோதரியுமான அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன் மற்றும் யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் மோகன், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க தலைவர் உமாகாந்தன், உப தலைவர் தனபாலசிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சிவமகாராசாவின் சிலையை நிர்மாணித்த இந்தியாவைச் சேர்ந்த சிற்பி மற்றும் கூட்டுறவுத்துறையில் பணியாற்றிய மூத்த கூட்டுறவாளர்கள் என்போர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமகாராசா அவரது வீட்டில் வைத்துத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். (ற-5)

## தேர்தல் தொகுதி வாரியாக உட்கட்டுமான அபிவிருத்தி

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ். மாவட்டத்தில் தேர்தல் தொகுதிவாரியாக உட்கட்டுமான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகள் பிரதேச செயலகங்களுடன் இணைந்த வகையில் பல மில்லியன் ரூபாவுக்கான திட்டங்களை முன்மொழிந்துள்ளன. திட்டங்கள் யாவும் அதற்குரிய முன்மொழிவுப் பத்திரங்கள், மதிப்பீடுகள் வரைவுகள், காலஅட்டவணைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக முன்வைக்கப்பட வேண்டும். உள்ளூராட்சிச் சபைகளால் முன்வைக்கப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகளைப் பிரதேச செயலாளரின் ஒப்பந்தத்துடன் மாவட்டச் செயலர் ஊடாக கொழும்புகொள்கைத்திட்டமிடல் அமைச்சுக்கு வழங்கப்படும்.

மாவட்டசெயலரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சகல திட்டங்களுக்குமான உட்கட்டுமான அபிவிருத்திகள் யாவும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்குள் முடிவுறுத்தப்பட வேண்டும்.

மேற்படி திட்டத்தின் கீழ் வலி.மேற்கில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் முயற்சியால் சங்கானையில் 80 மில்லியனுக்கான நவீன கடைத்தொகுதிக்கான முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது. (ற-50)

## பொதுக் கிணறுகள் மலகூடங்கள் பயனாளிகளிடம் கையளிப்பு

தென்மராட்சி, ஓக.23

வேள்ட் விசன் லங்கா நிறுவனத்தின் ஒருங்கிணைந்த கிராமிய குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் கீழ் பொதுக் கிணறுகள், மாற்று வலுவுள்ளோருக்கான மலகூடம் என்பன அமைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்படுகின்றது.

தனங்களப்பில் குடிதண்ணீர் பற்றாக்குறை காணப்படும் இடங்கள் இனங்காணப்பட்டு நான்கு பொதுக் கிணறுகள் சாவகச்சேரிப் பிரதேச சபையின் மதிப்பீட்டுக்கு அமைவாக 40 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா வரையான செலவில் அமைக்கப்பட்டன. அந்தப் பகுதிகளில் காணப்பட்ட இரு கிணறுகள் புனரமைக்கப்பட்டன.

பிரதேசத்தில் உள்ள 17 மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டுக்கென ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா தொடக்கம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையான செலவில் மலகூடங்கள் அமைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

மாற்றுத் திறனாளியின் அணுகு வசதிகள் உள்ள மலகூடங்கள் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும், சாதாரண மலகூடங்கள் 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவிலும் அமைக்கப்படுகின்றது என்று நிறுவனத்தின் பிராந்திய இணைப்பாளர் சி.குகன் தெரிவித்தார். (ற-9)

# தீர்வுத் திட்டத்தில் அம்பாறை புறக்கணிக்கப்படக் கூடாது

## கவீந்திரன் கோடீஸ்வரன் எம்.பி. வலியுறுத்து

அம்பாறை, ஓக.23

முன்வைக்கப்படுகின்ற தீர்வுத் திட்டத்தில் அம்பாறை மாவட்டம் புறக்கணிக்கப்படுமாக இருந்தால் இன்னும் 10 வருடங்களில் இங்குள்ள தமிழர்கள் வேறு இனத்தவர்களாக மாறும் சாத்தியம் இருக்கின்றது. இதற்கு எந்த அரசியல் தலைவர்களும் உறுதுணையாக இருக்கக் கூடாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

காரைதீவு கண்ணகி சனசமூக நிலையத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்டமானது வடக்கு - கிழக்கை பொறுத்த வரையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்புக்கு அடுத்ததாக அதிகளவான தமிழ் மக்களை மூன்றாவதாக கொண்ட மாவட்டமாக திகழ்கின்றது. அம்பாறை மாவட்ட தமிழர்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் புறக்கணிக்கப்பட முடியாது.

இன்னுமின்னும் நாங்கள் மற்ற இனத்தவர்களுக்கு அடிமையாகிக் கொண்டு போக முடியாது. அடிமையாகிக் கொண்டு போவோமாக இருந்தால் இன்னும் 10 வருடங்களில் இங்குள்ள தமிழர்கள் வேறு இனத்தவர்களாக மாறும் சாத்தியம் உள்ளது. எந்த அரசியல் தலைவர்களும் இதற்கு உறுதுணையாக இருக்கக் கூடாது.

கடந்த காலப் போர் வடுக்களால் பெரிதும் இன்னல்களை அனுபவித்தவர்கள், பல தியாகங்களை செய்தவர்கள் அம்பாறை மாவட்டத்தில் உள்ளனர். இந்த இழப்புக்களில் இருந்து எமது மக்களை மீளெழுச்சி பெற வைக்க வேண்டுமாக இருந்தால் அவர்களுக்குரிய தீர்வுத் திட்டத்தை உரிய முறையில் வழங்க வேண்டும்.

காலாகாலமாக இன்னல் உற்ற மக்களைத் தீர்வுத்திட்டத்தில் புறக்கணிப்பதென்பது மிகவும் பாரதூரமான விடயமாகும். இந்த விடயமானது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த உலகத்தமிழர்களுக்கும் ஏமாற்றத்தைக் கொடுக்கின்ற ஒரு விடயமாகவே அமையும்.

தென்கிழக்கு என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீகத்தை, தமிழர்கள் வாழ்ந்த வாழ்வாதாரங்களை அழித்தொழிக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற எந்த அரசியல் தீர்வுத் திட்டங்களையும் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை, ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள் என்பதுதான் உண்மை.

வரையப்படுகின்ற எந்தவொரு தீர்வுத்திட்டமாக இருந்தாலும் அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களைக் கருத்திற் கொண்டு தீர்வுத்திட்டங்கள் வரையப்பட வேண்டும். அம்பாறை மாவட்ட தமிழர்களைக் கருத்தில் எடுக்காத எந்தத் தீர்வுத் திட்டத்தினையும் இங்குள்ள தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள், அங்கீகரிக்கவும் மாட்டார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற ஒவ்வொரு தமிழர்களையும் கருத்திற் கொண்டு ஒற்றுமையுடன் செயற்பட வேண்டிய காலம்தான் இப்போது கனிந்திருக்கின்றது. அதனை நாங்கள் ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இனிவரும் காலங்களிலும் ஒவ்வொருவராக பிரிந்து, பிரிந்து செயற்படுவோமாக இருந்தால் எந்தச் செயற்றிட்டங்களும் வெற்றியளிக்கப் போவதில்லை - என்றார். (ற-5-40)

## செயலமர்வு

அச்சுவேலி, ஓக .23

தேசிய மீளிணக்க நிகழ்ச்சித் திட்டச் செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பொது மண்டபத்தில் நடைபெறும்.

"கடந்த காலங்களைக் குணப்படுத்துவதன் ஊடாக எதிர் காலத்தைக் கட்டியெழுப்புதல்" என்னும் தொனிப் பொருளில் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் அனுசரணையுடன் வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தால் செயலமர்வு நடத்தப்படுகின்றது. (ற-11)

## வதிவிடப் பயிற்சி

வைத்தியசாலை உளநல விடுதிகளில் பணியாற்றும் பரிசாரகர்கள் மற்றும் சுகாதார சேவை உதவியாளர்களுக்கான இரண்டு நாள் வதிவிடப் பயிற்சி நெறி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை உளநல விடுதி மண்டபத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்தப் பயிற்சி நாளையும் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

உளநல விடுதிகளில் கடமை புரியும் பரிசாரகர்கள், சுகாதார பணி உதவியாளர்கள் பயிற்சி பெறுநர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் உள்ள உளநலசிகிச்சை தொடர்பான விடுதியில் பணியாற்றும் பணியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-5-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் உண்மைகளை அம்பலப்படுத்த வேண்டும்

## வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக. 23

மகிந்த ராஜபக்சவின் மறைக்கப்பட்ட உண்மைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டுக்கும், மக்களுக்கும் பகிரங்கப்படுத்த வேண்டும்.



இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின்தலைவரும்எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸநாயக்க வலியுறுத்தினார்.

தங்காலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவின் போது மாத்தறையில் உரையாற்றிய ஜனாதிபதி, சிலர் புதிய கட்சி உருவாக்கினால் அவர்களது மறைக்கப்பட்ட இரகசியங்களை எல்லாம் வெளியிடுவேன். அதன் பின்னர் அவர்கள் வீதி வீதியாக அலைந்து திரியும் நிலை உருவாகும் எனவும் குறிப்பிட்டார்.

உண்மையில் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டது மகிந்த ராஜபக்சக்களையே தான் என்பதை அனைவரும் அறிவார்கள். ஜனாதிபதியின் இந்த உரை வெறும் உரையாக மாத்திரமே வரையறுக்கப்படக் கூடாது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மோசடிகளை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அது மக்களுக்கு இருக்கும் அரசியல் ஜனநாயக உரிமையாகும்.

மகிந்த ராஜபக்சவின் மறைக்கப்பட்ட உண்மைகள் என்ன என்பதை நாட்டுக்கும் மக்களுக்கும் ஜனாதிபதி பகிரங்கப்படுத்த வேண்டும் -என்றார். (ற-5)

# எம்.பிக்களின் ஒழுக்கக் கோவை விரைவில் நடைமுறைக்கு வரும்

கொழும்பு, ஓக. 23

தேசிய நல்லாட்சி அரசு உருவாக்கியுள்ள நடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவை விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இந்த ஒழுக்கக்கோவை பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டன. ஒழுக்கக்கோவை விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது என்றுஅரசின் மூத்த பேச்சாளர் ஒருவர் கூறினார்.

ஒழுக்கக்கோவையை நடைமுறைப்படுத்துவது குறித்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த வாரம் பேசப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒழுக்கக் கோவையில் சில திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்என்பதனைப்பரிந்துரைசெய்யும் வகையில் இந்த ஒழுக்கக் கோவை அமைந்துள்ளது. (ற-5)

# கார் சாரதி வரவுக்காக காத்திருந்த ஜனாதிபதி!



கொழும்பு, ஓக. 23

திருப்பதி ஏழுமலையான் ஆலயத்தில் வழிபாடு நடத்தச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கார் சாரதி காணாமற் போனதால் 12 நிமிடங்களுக்கு மேலாகக் காரில் காத்திருந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த சனிக் கிழமை இரவு பெங்களூர் வழியாகத் திருப்பதிக்குச் சென்றார். பத்மாவதி விருந்தினர் மாளிகையில் இரவைக் கழித்த அவர், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணியளவில் சுப்ரபாத சேவையின் போது திருப்பதி தேவஸ்தானத்துக்குக் குடும்பத்தினருடன் சென்று வழிபாடு நடத்தினார்.

மைத்திரிபால சிறிசேன வழிபாடு முடித்துக் கொண்டு திரும்பி வந்து காரில் அமர்ந்த போது சாரதி அங்கு இருக்கவில்லை. அதனால் பரபரப்பு ஏற்பட்டது. அவசர அவசரமாக திருப்பதி தேவஸ்தான பாதுகாப்பு அதிகாரிகள் அவரைச் சூழ்ந்து பாதுகாப்பு வழங்கினர்.

12 நிமிடங்களுக்குப் பின்னர் சாரதி வந்து சேர்ந்தார். அவர் ஏழுமலையானை வழிபடச் சென்றதே பரபரப்புக்குக் காரணமாகும்.

பத்மாவதி மாளிகைக்குத் திரும்பிய ஜனாதிபதி மீண்டும் 6.30 மணியளவில் குடும்பத்தினருடன் ஏழுமலையான் ஆலயத்துக்குச் சென்றார். மிக முக்கிய பிரமுகர்கள் வழிபடும் நேரத்தில் அவர் குடும்பத்தினருடன் சென்று வழிபாடு நடத்தினார்.

விருந்தினர் விடுதிக்குத் திரும்பிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பெங்களூருக்குப் பறப்பட்டுச் சென்றார். (ற-5)

## இலங்கை வரவுள்ளார் ஐ.நா. பொதுச் செயலர்

கொழும்பு, ஓக.23

ஐ.நா. பொதுச் செயலாளர் பான்- கீ மூன் எதிர்வரும் முதலாம் திகதி இலங்கை வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது அவரின் இலங்கைக்கான இரண்டாவது பயணமாக அமையும்.

எதிர்வரும் முதலாம் திகதி வரும் அவர் 3ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந் தன், அரச பிரதிநிதிகள், ஐ.நா. மற்றும் அனைத்துலகத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள்எனப்பலதரப்பினரையும்சந்தித்து அவர் கலந்துரையாடுவார். இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், ஜெனீவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் எட்டியுள்ள முன்னேற்றங்கள் என்பவற்றில் அவர் அதிக கவனம் செலுத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா. பொதுச் செயலாளர் பதவியில் இருந்து பான் கீ-மூன் இந்த ஆண்டு இறுதியில் ஓய்வு பெறுகிறார். (ற-5)

# இலங்கையின் நன்மதிப்பை உயர்த்த வெளிநாட்டு நிறுவனத்திடம் உதவி

## ஆங்கில ஊடகம் கூறுகின்றது

கொழும்பு, ஓக.23

பன்னாட்டு அரங்கில் இலங்கை தொடர்பில் நன்மதிப்பை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் அரசு பொதுசன உறவு நிறுவனங்களின் உதவிகளை நாடியுள்ளது என்று கூறப்படுகின்றது. முக்கிய அமைச்சர் ஒருவர் இது விடயத்தில் கடந்த மகிந்த ராஜபக்ச அரசின் பாணியைப் பின்பற்றுகின்றார் என்று குற்றம் சுமத்தப்பட்டது.

அமெரிக்காவின் பரப்புரை நிறுவனமொன்றின் ஊடாக இலங்கையின் நன்மதிப்பை மேம்படுத்திப் பரப்புரையைச் செய்ய குறித்த அமைச்சர் முயற்சித்துள்ளார் என்று ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டது.

உதவி பெறப்பட்டுள்ள அமெரிக்க நிறுவனத்தின் இணையத் தளத்தில் இந்த விடயங்கள் பற்றிய விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பரப்புரைப் பணிகளுக்கான செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்றும், இதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

நாட்டின் நன்மதிப்பை மேம்படுத்த வெளிநாட்டுப் பரப்புரை நிறுவனங்களுக்குபெரியளவில் பணம் வழங்கினார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ற-5)

# விமானத்தைத் தாமதமாக்கியதால் தலைமை விமானி இடை நிறுத்தம்

## சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் நடவடிக்கை

கொழும்பு, ஓக. 23

சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான விமானமொன்று 15 மணித்தியாலங்கள் தாமதமாகப் பயணத்தை ஆரம்பிக்கக் காரணமாக இருந்த தலைமை விமானி உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

சிறிலங்கன் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் சனிக்கிழமை பிற்பகல் 3.20 மணிக்கு ஜேர்மனியின் பிரங்போர்ட் விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்கவுக்கான பயணத்தை ஆரம்பிக்கவிருந்தது. விமானத்தில் கட்டுநாயக்க நோக்கிப் பயணிப்பதற்காக, 259 பயணிகள் தயாராகவிருந்தனர்.

விமான நிலையத்தின் தலைமை விமானி மதுபானப் பரிசோதனையில் தோல்வியடைந்ததால் அவரால் விமானத்தைச் செலுத்த முடியாது போனது. 15 மணி நேர தாமதத்தின் பின்னர் பிறிதொரு விமானியைப் பயன்படுத்தி விமானம் இலங்கை வந்தது என்று சிறிலங்கன் எயார் லைன்ஸ் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளுக்காகவே பணி இடைநிறுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளது.

தாமதம் தொடர்பில் பயணிகளிடம் மன்னிப்பு கேட்டுள்ள விமான நிறுவனம், ஐரோப்பிய ஒன்றிய ஒழுங்கு விதிகளுக்கமைய தாமதத்திற்காகப் பயணிகளுக்கு நட்ட ஈடு வழங்கப்படும் என்றும் தெரிவித்தது.

பயணியொருவருக்கு 600 யூரோக்களைச் சிறிலங்கன் விமான நிறுவனம் செலுத்த வேண்டியேற்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய சிறிலங்கன் விமான நிறுவனம் பயணியொருவருக்குச் செலுத்த வேண்டிய தொகை 96 ஆயிரத்து 960 ரூபாவாகும். (ற-5)

## நவம்பர் 10 வரவு- செலவு திட்டம் நாடாளுமன்றுக்கு

கொழும்பு, ஓக. 23

2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் டிசெம்பர் 10 ஆம்திகதிவரைநடைபெறும்என்றும் அவர் தெரிவித்தார். (ற-5)

## 800 கோடி ரூபா மாதாந்தம் இழப்பு

கொழும்பு, ஓக. 23

வற்வரி அதிகரிப்புக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்ததால் அரசுக்கு மாதாந்தம் 800 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று இறைவரித் திணைக்களம் தெரிவித்தது.

கடந்த மே மாதம் 2ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 11 ஆம் திகதி வரை உள்நாட்டு இறை வரித் திணைக்களம் 15 வீத வரியை அறவிட்டது. ஜூலை மாதம் 11 ஆம் திகதியிலிருந்து வரி அறவீட்டுக்கு நீதிமன்றம் தடைவிதித்ததால் இந்த வருமானம் இழக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றின் தடைக்குப் பின்னர் புதிய வற்வரி சட்ட வரைவு இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் இரத்த மாதிரி அனுமதி பெற்று பெறப்பட்டதா?

## தேசிய பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் கேள்வியெழுப்புகின்றது

கொழும்பு, ஓக. 23
யாழ்ப்பாணத்தில் அமெரிக்க விமானப்படை மருத்துவர்கள் நடத்திய மருத்துவ முகாமில் பொது மக்களிடம் இருந்து இரத்த மாதிரிகளை பரிசோதனைக்காகப் பெறுவதற்கு இலங்கையின் உரிய அதிகாரிகளிடம் நெறிமுறை அனுமதி பெறப்பட்டதா?.
இவ்வாறு தேசிய பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.
சங்கத்தின் தலைவர் மருத்துவ கலாநிதி சன்ன ஜெயசூரிய தெரிவித்ததாவது:
புனர்வாழ்வின் போது முன்னாள் புலிப் போராளிகள் சிலருக்கு விச ஊசி செலுத்தப்பட்டது என்று கூறப்படுவது தொடர்பான பரிசோதனைகளுக்காக, முன்னாள் போராளிகளிடம் அமெரிக்க மருத்துவர்கள் இரத்த மாதிரிகளைப் பெற்றனர் என்று சங்கத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.
சிகிச்சைக்கு அப்பாற்பட்ட தேவைக்காக தனி நபர்களிடம் இருந்து இரத்த மாதரிகளைப் பெறுவதற்கு நெறி முறை அனுமதி பெறப்படவேண்டும்.
இந்த நடைமுறை பின்பற்றப்பட்டதா என்று மருத்துவர் சங்கம் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றிடம் அறிந்து கொள்ள விரும்புகிறோம் – என்றார். (ற-5)

## லஞ்சம் பெறுவோர் தொடர்பான முறைப்பாடுகள் குறைகின்றன

### லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கூறுகின்றது

கொழும்பு, ஓக. 23
லஞ்சம் பெறுவோர் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் குறைவடைந்துள்ளன என்று லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்தது.
லஞ்சம் என்ற சொல்லை நாட்டிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம். லஞ்சம் பெறுவது போன்றே லஞ்சம் கொடுப்பதும் தண்டனைக்குரிய குற்றம் என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியது.
அரச அதிகாரிகள் லஞ்சம் பெறுவது தொடர்பான முறைபாடுகள் குறைவாகக் கிடைப்பதற்குக் காரணம் லஞ்சம் பெறும் அரச அதிகாரிகள் தொடர்பில் முறையிட பொதுமக்கள் அக்கறை காட்டாமையே என்றும் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு குறிப்பிட்டது.
ஆணைக் குழுவுக்கு முறைபாடுகளைத் தெரிவிக்கும் நபர்கள் தொடர்பில் இரகசியங்கள் பாதுகாக்கப்படும். எவ்வித பயமும் இல்லாமல் ஆணைக் குழுவிற்கு லஞ்சம் பெறுவோர் தொடர்பில் முறையிடலாம் என்றும் ஆணைக்குழு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டது. (ற-5)

## அணிசேரா நாடுகள் மாநாட்டில் பங்கேற்க மாட்டார் மைத்திரி

கொழும்பு, ஓக. 23
வெனிசுவேலாவின் கராகஸ் நகரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்கும் திட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கைவிட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. அணிசேரா நாடுகளின் தலைவர்களின் 17 ஆவது உச்சிமாநாடு, அடுத்த மாதம் 17, 18 ஆம் திகதிகளில் கராகஸ் நகரில் நடைபெறவுள்ளது. அணிசேரா நாடுகளின் அமைப்பின் ஆரம்ப கால உறுப்பு நாடுகளில் ஒன் றான இலங்கையின் சார்பில் இந்த மாநாட்டில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழு பங்கேற்க முன்னர் திட்டமிடப்பட்டது. தற்போது மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்கமாட்டார் என்று முடிவு செய்யப்பட் டுள்ளது. இலங்கைக் குழுவுக்கு அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையேற்கலாம் என்றும் கூறப்படுகிறது.
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இந்த மாநாட்டைப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளார் என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஐ.நா. பொதுச் சபையின் 71 ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அடுத்த மாதம் 19 ஆம் திகதி நியூயோர்க் செல்லவுள்ளார். செப்ரெம்பர் 24 ஆம் திகதியே கொழும்பு திரும்புவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-5)

# தாஜுதீன் உடற்பாகங்களுக்கு பொறுப்புத் தெரிவிக்க முடியாது

## கொழும்பு மாவட்ட முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி கைதை தடுக்குமாறு நீதிமன்றில் மனுத் தாக்கல்

கொழும்பு, ஓக. 23
பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுதீன் உடற்பாகங்கள் காணாமற் போனமைக்கு நான் பொறுப்புக் கூற முடியாது.
இவ்வாறு கொழும்பு மாவட்ட முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி மருத்துவர் ஆனந்த சமரசேகர, நீதிமன்றில் சமர்பித்த மனுவில் குறிப்பிட்டார்.
முதலாவதாக தாஜுதீனின் உடற்கூற்றுப் பரிசோதனையை முன்னெடுத்த கொழும்பு முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர தான் கைது செய்யப்படுவதை தடுக்கக் கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்தார். அந்த மனுவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டது.
தாஜுதீனின் உடற் பாகங்கள் சில மேலதிக ஆய்வுக்காக எடுக்கப்பட்ட பின்னர் காணாமற் போனமை தொடர்பில், சுகாதார அமைச்சு விசாரணை ஒன்றை நடத்தியது. அந்த விடயத்துக்கு ஆனந்த சமரசேகரவே பொறுப்புக்கூற வேண்டும் என்று அமைச்சு மன்றுக்கு விசாரணை அறிக்கையை சமர்ப்பித்தது.
அதையடுத்து ஆனந்த சமரசேகர மனுத் தாக்கல் செய்துள்ளார். தாஜுதீன் விவகாரத்தில் இதுவரை செய்யப்பட்டுள்ள விசாரணைகள் குறித்த அனைத்து விடயங்களையும் மன்றில் சமர்ப்பிக்க பொலிஸ் மா அதிபர், குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோருக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனவும் மனுவில் கோரப்பட்டுள்ளது.
தாஜுதீன் விவகாரத்தில் 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான் உடற்கூற்றுப் பரிசோதனை செய்தேன். 2013 ஜூன் மாதம் 3 ஆம் திகதி சட்ட வைத்தியத் துறையில் இருந்து ஓய்வு பெற்றேன். அதனால் உடற் பாகங்கள் காணாமற் போனமை தொடர்பில் என்னால் பொறுப்புக் கூற முடியாது. இதை மையப்படுத்தி என்னை கைதுசெய்ய முயற்சிகள் முன்னெடுக்கப்படு வதால் அதனை உடனடியாக நிறுத்த உத்தரவிடவேண்டும் என்று அவர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.
தனக்கு முன் பிணை தருமாறு கோரி பிறிதொரு மனுவையும் மருத்துவர் ஆனந்த சமரசேகர கொழும்பு நீதிவான் நீதிமன்றிலும் தாக்கல் செய்துள்ளார்.

### சி.சி.ரிவி பதிவுகள் கனடாவுக்கு

தாஜுதீன் விவகாரத்தில் திருப்புமுனையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் சி.சி.ரி.வி. கண்காணிப்புக் கமரா பதிவுகள் அடங்கிய 10 இறுவட்டுக்கள் கனடாவின் இரசாயனப் பகுப்பாய்வு நிறுவனத்துக்கு நேற்று எடுத்துச் செல்லப்பட்டன.
கொழும்பு நீதிவான் நீதிமன்றின் கட்டுப்பாட்டில் இருந்த சி.சி.ரி.வி. காட்சிகள் குற்றப் புலனாய்வுப் பிரிவால் நேற்று கனடாவுக்கு கொண்டு செல்லப்பட்டன.
இது தொடர்பில் 36 கேள்விக் கொத்தைத் தயார் செய்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவு அது தொடர்பில் மன்றுக்கு அறிவித்துள்ளது. அந்த கேள்விக் கொத்துக்கான பதில்களையே சி.சி.ரி.வி. ஆய்வுகளில் இருந்து எதிர்பார்க்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-5)


பதினைந்தாம் நாள் உள்வீதியுலா

பதினாறாம் திருவிழா

## அருள்புரிவார் வடிவேலன்

நல்லை நகர் வடிவேலனுக்குப் பெருவிழா
நற்றமிழ் அதிபதியாம் முருகனுக்குத் திருவிழா
தெருவீதியெங்கும் குதூகலம் குமரனுக்கு அருள்விழா
பெருமை மிகு அலங்காரக் கந்தனுக்குப் பக்திவிழா

வரலாற்றுப் புகழ் நல்லூர் வளநகர்
வந்து தொழுவோருக்குக் கோடி புண்ணியம்
சரவணப்பொய்கையில் உதித்த சரவணபவன்
கார்த்திகேயப் பெண்கள் வளர்த்த கார்த்திகேயன்

அறுபடைவீடுடைய பெருமான் கடம்பன்
நல்லூர்ப் பதியில் அலங்காரக் கந்தன்
வேலாக காட்சிதரு மூலமூர்த்தி வேலாயுதர்
வேண்டும் வரம் யாவும் அருள்வார்

வள்ளி, தெய்வானை சக்திகளை உடையவர்
அள்ளித் தருவார் செல்வங்கள் யாவும்
சிவசக்தியின் மைந்தனாம் முருகன்
சிவனுடன் சோமஸ்கந்தர் எங்கள் பெருமான்

முருகா முருகா எனும் வாழ்த்தொலியுடன்
கற்பூரச்சட்டிகளும் பலநூறு
கருணை பொழியும் எங்கள் கருணாமூர்த்தியைக்
காண ஆயிரம் கண்கள் வேண்டும்

அங்கப்பிரதட்சணம் வீதி நிரப்பும்
பொங்கு தமிழ் பாமாலை முருகப் பெருமானுக்கு
தங்கமயிலேறி வருவார் வீதிவலம்
பாங்குடன் கலாசாரம் பேணி பணிவோம்.

சுழிபுரம் சரோஜினி கனகரத்தினம்

## பெற்றிட வேண்டும் தண்டம்

அந்தப் பிரணவத்தின் அற்புதப் பொருளதனை
தந்தை அறிந்திடவே உரைத்திட்டகந்தையா
குற்றமிலா எம்மவரை கூண்டதனில் அடைப்பித்தார்
பெற்றிடவே வேண்டும் தண்டம்.

மயில் வேலாயுதப்பிள்ளை
புளியம்பொக்கணை.

நல்லைக்கந்தனுக்கு
இன்று (23.08.2016) செவ்வாய்க்கிழமை
பதினாறாம் திருவிழா
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
அன்னை முத்துமாரி பஸ்சேவை
கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை
12.08.2016 முதல் பகல் சேவை ஆரம்பம்
நான்கு புதிய A/C பஸ்களுடன்
இரு வழிச் சேவையை பகல், இரவு என விஸ்தரித்துள்ளது
BUS BOOKING

| | | | காலை | இரவு |
|---|---|---|---|---|
| கொழும்பு | + 94 77 544 9251 | | | |
| யாழ்ப்பாணம் | + 94 77 544 8503 | | | |
| வல்வெட்டித்துறை | + 94 21 226 1977 | பருத்தித்துறை | 7.00 am | 7.00pm |
| | + 94 77 544 7359 | யாழ்ப்பாணம் | 8.00 am | 8.00pm |
| நெல்லியடி | + 9477 285 0285 | வெள்ளவத்தை | 7.30 am | 7.30pm |
| பருத்தித்துறை | + 9477 555 2973 | கொட்டஹேனா | 8.30 am | 8.30pm |

Web www.annaimuthumari.com
www.valvaitourism.com
Bus booking || Courier || Boating

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சூழலுடன் இணைந்த வாழ்வுக்கு வழி ஏற்படுத்தல் அத்தியாவசியம்

போரின் பின்னரான காலத்தில், வடக்கின் பல பிரதேசங்களில், பகுதிகளில், கால் நடைகளின் எண்ணிக்கை மிகப் பெரிய அளவில் தேய்ந்து போய்விட்டது. குறிப்பாகக் கூறின், அவற்றின் தேவையைப் பூர்த்தி செய்யவல்ல ஆதாரங்கள் அழிந்துவிட்டன. அவற்றை மீளக் கட்டி எழுப்பும் பணிகள் மிகக் குறைந்து விட்டன.

கால்நடைகளின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவேற்ற இயலாத, பாரதூரமான பாதிப்புகள் அதிகரித்து வருவதாகக் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் கவலை தெரிவிக்கின்றனர்.

அதற்கான பிரதான காரணங்களில் ஒன்றாக, ஊருக்கு ஊர் கட்டப்பட்டிருந்த கேணிகள் மற்றும் நீர்நிலைகளைப் பேணிப் புதுப்பிக்கும் செயற்பாடுகள் மிகப் பெரிய அளவில் கைவிடப்பட்டு விட்டதாகக் கால்நடை வளர்ப்போர் சுட்டிக் காட்டுகின்றனர்.

பல பகுதிகளில், கேணிகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் தண்ணீர் ஓரளவு இருந்தாலும் கூட, கால்நடைகள் இலகுவாகத் தண்ணீர் அருந்துவதற்கான படிகள் உடைந்து தூர்ந்து போய் விட்டதால் --

கால்நடைகளின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாத செயற்கைப்பாதிப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அதனால் கால்நடை வளர்ப்போர் பெரிதும் பாதிப்புற்று மனம் சலிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வலி.கிழக்குப் பிரதேசத்தில் இந்த நிலை உயர்ந்து நிற்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

எமது முன்னோர் சூழலுடன் இணைந்து வாழ்ந்தவர்கள். அதற்கு இயைபுபட்டு தமது தேவைகளை நிறைவேற்றியவர்கள். தமது விவசாய தேவைகளை மட்டுமன்றி கால்நடை வளர்ப்பையும் கண்ணாகக் கருதிச் செயற்பட்டவர்கள்.

ஒவ்வொரு ஊரிலும், கிராமங்களிலும் கேணிகளைவெட்டி நீரேந்தி வைக்கும் வழக்கம் அவர்களின் இயல்பான செயற்பாடுகளாக அமைந்து இருந்தன. அதனால் ஆநிரைகள் அவர்களின் உறவுகளாக வளர்ந்து பயன் தந்தன.

காலம் மாற மாற, காணிகளின் பெறுமதி உயர்ந்து செல்லச் செல்ல கேணிகள் குளங்கள் தூர்ந்து போக விடப்பட்டன.

அவை பின்னர் வீடுகளை நிர்மாணிக்கப் பயன்படுத்தப்பட்டன.

எமது வாழ்க்கைக்கு வீடுகள் எந்தளவுக்குத் தேவையோ, அந்த அளவுக்கு ஆநிரைகளும், குளங்கள், கேணிகளும் அத்தியாவசியம் என்பதனை மறந்துவிடலாகாது.

மக்களின் வாழ்வியலை உயர்த்துவதை எந்தக் காரணம் கொண்டும் நிறுத்தவோ சப்பளிக்கச் செய்யவோ எவருக்கும் உரிமை இல்லை.

நடுவண் அரசாயினும் சரி, மாகாண அரசாயினும் சரி மக்களின் வாழ்வாதாரத்தை மேலுயர்த்தப் பாடுபட வேண்டும், சூழலுடன் இணைந்து செயற்பட வேண்டுமேஅன்றி, தத்தமது சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் மேலுயர்த்திக் கொடிகட்டிப் பறக்க முற்படுவது எந்த வகையிலும் பொருத்தமுடையது அல்ல. அது ஜனநாயகப் பண்பைக் கடாசி எறிவதற்கு ஒப்பானதாகும்.-

# புரிந்துணர்வுப் பாலம்தான் நாட்டின் இன்றைய தேவை


சேரலாதன்

"சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்" என்று பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதியார். ஈழவள நாட்டை ஒரு சிங்களத் தீவாக அவர் வர்ணித்ததை ஈழத் தமிழர் எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. புரட்சிக் கவிஞர் ஏன் இவ்வாறு பாடினாரென வருந்திய தமிழ் உள்ளங்கள் ஏராளம்.

இலங்கை இந்தியாவுக்கு மிக அண்மையில் உள்ளதொரு நாடு. கடல்தான் இரண்டு நாடுகளையும் குறுகிய தூரம் பிரித்து நிற்கின்றது. முன்பொரு காலத்தில் இலங்கை இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்ததாகவும், இயற்கை இடர் காரணமாக இரண்டு நாடுகளின் நிலத் தொடர்பு கடலால் துண்டிக்கப்பட்டதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இதற்கு ஆதாரமாக இந்தியாவின் தென் கோடியில் உள்ள தமிழ் நாட்டிலும், இலங்கையின் வட கோடியிலும் தமிழர்கள் வாழ்வதைக் கூறமுடியும்.

இன்று இலங்கையின் வட பகுதியில் உள்ளவர்கள் தமக்கு மிக அருகிலுள்ள தமிழ் நாட்டுக்குச் செல்ல வேண்டுமென்றால், வெகுதொலைவில் உள்ள கொழும்பு சென்று அங்கி ருந்து விமான மூலம் பயணமாக வேண்டியதொரு நிலை காணப்படுகின்றது. பலாலியில் ஒரு விமான நிலையம் உள்ள போதிலும் அதனூடாக இந்தியாவுக்கான விமானசேவை எதுவும் நடத்தப்படுவதில்லை. போருக்கு முந்திய காலப்பகுதியில் பலாலி விமான நிலையத்தினூடாக தமிழ்நாட்டின் திருச்சி விமான நிலையத்துக்குச் செல்ல முடிந்தது. இதனால் வட பகுதி மக்களின் இந்தியாவுக்கான பயணம் இலகுவாகக் காணப்பட்டது. போரைக் காரணம் காட்டி பலாலி விமான நிலையம் பொது மக்களின் பாவனைக்கு மூடப்பட்டிருந்தது. தற்போது இந்த நிலையில் பெரிய மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. பலாலி விமான நிலையத்தைச் சர்வதேச விமான நிலையமாக மாற்றுகின்ற யோசனை இலங்கை அரசிடம் உள்ளபோதிலும், இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பலாலி விமானநிலையம் அபிவிருத்தி செய்யப்பட்டுச் சர்வதேச போக்குவரத்துக்கள் இடம்பெறுமாயின், அதனால் வடபகுதி மக்கள் அனுபவிக்கக்கூடிய நன்மைகள் ஏராளம். போர் காரணமாக ஏராளமான ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்த நிலையில் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பலர் அவ்வப்போது தமது விடுமுறையைக் கழிப்பதற்காகவும், தாம் பிறந்த இடங்களைப் பார்ப்பதற்காகவும் தமது தாய் நாட்டுக்கு வந்து செல்வதுண்டு. ஆனால் இவர்கள் கொழும்புக்கு வந்து அங்கிருந்தே தமது சொந்த ஊர்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் நேரம் விரயமாவதுடன் அதிக பணச் செலவும் ஏற்படுகின்றன. பலாலி விமான நிலையத்தைத் தரமுயர்த்துவதன் மூலமாக இத்தகைய சிரமங்களைக் குறைக்க முடியும்.

இந்தியாவையும், இலங்கையையும் கடல் வழியாக இலகுவாக இணைக்கும் வகையில் பாலமொன்று அமைக்கப்பட வேண்டுமென்ற யோசனை தெரிவிக்கப்பட்டு நீண்ட காலமாகிவிட்டது. இதையே தான் பாரதியாரும் சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்ற தமது பாடல் வரிகளில் குறிப்பிட்டார்.




ஆனால் தென்பகுதி இனவாதிகள் இதைக்கூடப் பொறுத்துக் கொள்ளமுடியாத நிலையில் கூச்சல் இடுகின்றனர். பாலம் அமைக்கப்படுமாயின், அதைக் குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாகவும் அவர்கள் பகிரங்கமாகத் தெரிவிக்கின்றனர். இவ்வாறு கூறுவதற்கு இவர்களுக்கு எங்கிருந்து துணிவு வந்தது? என்பது தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகின்றது. தமிழர்கள் எந்தவிதமான சுகத்தையும் அனுபவிக்கக்கூடாது என்பதில் இனவாதிகள் விழிப்பாக இருக்கிறார்கள் என்பது தான் அது. அது மட்டுமல்லாது தமிழ் நாட்டுடன் இலங்கைத் தமிழர்கள் இலகுவான தொடர்புகளைக் கொண்டிருக்கக் கூடாது எனவும் இந்த இனவாதிகள் எண்ணுகின்றனர். இரண்டு நாடுகளையும் சேர்ந்த தமிழர்கள் இணைந்து விட்டால் தமக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமென்பது இவர்களின் பயமாகும்.

அதைவிட இறுதிப்போரில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழர்கள் இளக்காரமாகவே பார்க்கப்படுகின்றனர். எதைப் பற்றியும் கோரிக்கை விடும் தகுதி தமிழர்களிடம் இல்லையெனப் பெரும்பான்மையின மக்கள் கருதுகின்றனர். விடுதலைப் புலிகள் இருக்கும்வரை தமிழர்களைத் தீண்டுவதற்கு அஞ்சியவர்கள், தற்போது எல்லா வகையிலும் தமது எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டனர்.

தமிழர்கள் பரம்பரையாக வாழ்ந்த காணிகள் பலாத்காரமாகப் பிடுங்கப்பட்டு வருகின்றன. பௌத்தர்கள் வசிக்காத இடங்களில் புத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தமிழர் பிரதேசங்களில் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோத மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். சிங்களக் குடியேற்றங்கள் தமிழர் பகுதிகளில் பெருமளவில் இடம் பெற்று வருகின்றன. போரினால் இடம்பெயர்ந்த ஏராளமான தமிழர்கள் இன்னமும் அகதி வாழ்வு வாழ்கின்றனர்.

சுருக்கமாகக் கூறினால், தமிழர்களுக்கு விரோதமான நடவடிக்கைகளே இந்த நாட்டில் இடம்பெற்று வருகின்றன.

ஆகவே சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்பதை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டுத் தமிழர்களுக்கும் பெரும்பான்மையின மக்களுக்கும் இடையில் புரிந்துணர்வுப் பாலமொன்றை அமைத்துத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே இன்றுள்ள தேவையாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவுக்கு பின்னாளில் பிறந்த ஞானம் ஏனையோருக்கு எந்நாளில் பிறக்குமோ?

வந்தியத்தேவர்

இந்த நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் பதவியில் இருந்த அரசுகள் தமிழ் மக்கள் விடயத்தில் நேர்மையாக நடந்து கொண்டதில்லை என்பது தமிழர் தரப்புக்களால் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அந்த உண்மை இப்போது முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்கவால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. வேலணை யில் சமீபத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் வைத்து அம்மையார் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருதடவைகள் பதவியில் இருந்த சந்திரிகா அம்மையாருக்கு அப்போது புரியாத உண்மை இப்போது புரியத்தொடங்கியுள்ளதுபோலும். அவர் தற்சமயம் நல்லிணக்க செயலகத்தின் தலைவியாக இருக்கிறார்.

இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அவர் பதவிக்கு வர முக்கிய அனுசரணையாளர்களாக விளங்கிய சந்திரிகா அம்மையாரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், இதர ஆதரவாளர்களும் இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டுக்கு ஒரு நல்லாட்சியை வழங்கமுடியும் என ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நம்பிக்கை வெளியிட்டனர். அந்த நம்பிக்கை வீணாகாத வகையில் அனைத்து மக்களும் குறிப்பாக சிறுபான்மை மக்களும் அவர்களுக்கான தமது நல்லாதரவை வழங்கி உதவினர். புதிய அரசு பதவிக்கு வந்து ஒரு வருடம் கழிந்த நிலையிலும், இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உருவாக்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக இல்லை. நல்லிணக்கச் செயலணியும் அதற்காக முயற்சிகளை முன்னெடுத்ததாக இல்லை. வடக்கு கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் சிலவற்றை மேற்கொள்வதால்மட்டும் இனங்களுக் கிடையிலான நல்லிணக்கம் ஏற்படும் என்று கணக்குப்போடுவது தவறு. வடக்கு கிழக்கு மக்களும் ஏனைய பகுதி மக்களைப் போன்று அரசுக்கு வரி செலுத்தி வருகின்றனர். வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளை அபிவிருத்தி செய்வதில் காட்டும் அக்கறை போன்று, சிறுபான்மை மக்கள் வாழும் பகுதிகளிலும் அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டியது அரசின் கடமை. இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசு முதலில் இனவாதக் கோட்பாடுகளைக் களைய வேண்டும். காணி அபகரிப்புக்கள், பௌத்த சிங்கள மக்கள் இல்லாத இடங்களில் விகாரைகளை அமைத்தல், தமிழ் மக்களின் தொழில் வளங்களை அழித்தல், வடபகுதியில் உள்ள துறைமுகங்களில் கடற்படையினர் மேற்கொள்ளும் இனரீதியிலான செயற்பாடுகள், அரசியல் கைதிகள் மீதான அராஜக ஒடுக்கு முறைகள், போர்க்குற்றவாளிகளைப் பாதுகாக்கும் இனரீதியிலான சிந்தனைகள், எல்லாவற்றுக்கும் மேலாக சிறுபான்மை இனங்களின் அரசியல் உரிமைகள், மனித உரிமைகளைப் புறக்கணிக்கும் நிகழ்வுகள், போதாக்குறைக்கு இப்போது போராளிகளைத் துன்புறுத்தும் விச ஊசி விவகாரங்கள் என சிறுபான்மைத் தமிழ்மக்களை நாலாதிசையாலும் நசுக்கி வைத்துக் கொண்டு, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளாக றோட்டுப் போடுகிறோம், மழை நீரைத் தேக்க தொட்டிகளை அமைக்கிறோம் என்று வடக்கு கிழக்கு மக்களிடம் கூறினால் இரு இனங்களுக்குமிடையில் நல்லெண்ணம் ஏற்பட்டுள்ளதாக அர்த்தமாகிவிடுமா?

> நாட்டில் பதவி வகித்த எந்தவொரு தமிழர் விடயத்தில் நியாயமாக நடந்து கொண்டதில்லை என்பது முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா பண்டார நாயக்கவால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. வேலணையில் சமீபத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் அம்மையார் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இரு தடவைகள் பதவியில் இருந்த சந்திரிகா அம்மையாருக்கு அப்போது புரியாத உண்மை இப்போது புரியத் தொடங்கியுள்ளது போலும். அவர் தற்சமயம் நல் லிணக்க செயலகத்தின் தலைவியாக இருக்கிறார்.

மகிந்தவின் குடுமி தனதுகையில் இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நம்பிக்கொண்டிருக்க, கடந்த தேர்தலில் தனக்கு எதிராக மைத்திரிக்கு ஆதரவளித்த மக்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் கால் தேய நடந்தவர் மகிந்த. பரமசிவன் கழுத்தில் இருந்து கொண்டு கருடா சௌக்கியமா என்று கேட்ட பாம்பைப்போன்று, இனவாதத்தின் உச்சியில் அமர்ந்து கொண்டு ஆட்சியைத்தா, எதிர்க்கட்சித்தலைவர் பதவியைத்தா என்று மகிந்த உச்சரித்தபடி உள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நிலையிலும்கூட மகிந்தவின் குடுமியைக் கையில் வைத்துத் தடவிக் கொடுத்துக் கொண்டிருப்பது புத்திசாலித்தனமல்ல. குடுமியை உலுப்பி, அதனோடு இணைந்த இனவாதப் பேன்களான விமல் வீரவன்ச, உதயகம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, ஜீ.எல். பீரிஸ், தினேஸ் குணவர்த்தன போன்றவர்களை நசுக்கி வீசவேண்டும். அதன் மூலம் இனங்களுக்கிடையிலான நல்லெண்ணத்தை உருவாக்கக்கூடிய முதல் முயற்சி வெல்லப்படவேண்டும். தவறின் மைத்திரியின் குடுமி இப்போது என் கையில் என்ற ஒலியும் எழலாம். முதல் கோணல் முற்றிலும் கோணலாகிவிடலாம். பொறுமைக்கும் எல்லையுண்டு. எல்லையை நீட்டிக் கொண்டிருப்பதும் ஆபத்தானதே.

வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவமே எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை மழுங்கடிக்கிறது எனவும் பொதுமக்கள் சந்திரிகா அம்மையாரிடம் எடுத்துக் கூறியுள்ளனர். இராணுவம், கடற்படையினரைத் தற்போது உள்ள இடங்களில் இருந்து வெளியேற்றுவதும் மதசார்பற்ற அரசை உருவாக்குவதும், நல்லிணக்கம் ஏற்பட ஏதுவாகலாம். மக்களுக்கு சில நிவாரணங்களை வழங்குவதன் மூலமும், அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதன் மூலமும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படும் என்று ஆளாளுக்குப் பிதற்றிக் கொண்டிருக்க, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தம் பங்குக்கு கலப்புத்திருமணம் செய்தால் நல்லிணக்கம் ஏற்படும் என்று தனது கண்டுபிடிப்பை வெளியிட்டுள்ளார்.

இது ஓர் இனத்தை அதன் கலாசாரத்தைச் சிதைக்க வழியமைக்குமேயன்றி, நல்லிணக்கம் உருவாகச் சாத்தியமே இல்லை என்ற உண்மை ஆளுநருக்கு விளங்காததல்ல.

சுதந்திரத்தின் பின்னர் பதவியில் இருக்கும் தாங்களும் தமது முன்னைய அரசியல் தலைமைகளும் இனவாதத்தை வளர்ப்பதுடன் தமிழ் மக்கள் விடயத்தில் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்ற யதார்த்தத்தையும் மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டு, சாதாரண சிங்கள மக்களுக்கும் தமது தவறுகளை எடுத்துக்காட்டி தமிழ் மக்களின் நியாயமான கோரிக் கைகளை அரசமைப்பில் இணைத்துக் கொண்டு புதிய வழித்தடத்தில் நடக்க முன்வரும் பட்சத்திலேயே இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்பமையும். சந்திரிகா அம்மையாருக்கு பின்னாளில் பிறந்த ஞானம், இன்றைய சிங்களத் தலைமைகளுக்கு எந்நாளில் பிறக்குமோ?

## தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே

உள்ளம் என்பது ஆமை, அதில் உண்மை என்பது ஊமை, சொல்லில் வருவது பாதி, தேங்கிக் கிடப்பது மீதி என்பது கவியரசு கண்ணதாஸனின் பாடல். தனது கருத்துக்கள் முழுவதையும் வெளிப்படுத்த முடியவில்லையே என்பது கவியரசரின் மன வருத்தம்.

பொதுவாகப் பத்திரிகையாளர்கள், பத்திரிகைக்கு எழுதுபவர்கள் சமூகத்திலுள்ள சிலரால் சந்தேகக் கண்ணோடு பார்க்கப்படுகிறார்கள். இவர் ஏன் எழுதுகிறார், எவரைக் கிண்டலடிக்கிறார் என விமர்சித்து பூதக் கண்ணாடி போட்டு எதிர்பாராத தவறுகள் கண்டுபிடித்துச் சிண்டுமுடிவர். 10.08.2016 புதன் பொய்கை உதயன் பதிப்பில் வாசகர் திருமுகத்தில் 'சகலரும் சைவ சமயப் பண்பாட்டை பேணிப் பெருமை கொள்வோம்,' என்றதலைப்பில் பொதுவாக வெளிப்படுத்திய உண்மைகள் மூன்று.

ஒன்று, சைவப் பாரம்பரியம் மிக்க புத்தூர், ஆவரங்கால் சிவன் ஆலயங்களில் தீர்த்தோற்சவம், ஆனி உத்தரம், ஆடிப் பூரம் ஆகிய தினங்களில் மாற்றமில்லாது ஆலயம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை நடப்பது பாராட்டுக்குரியது. சில ஆலயங்களில் சனி ஞாயிறு தேர், தீர்த்தம் மாற்றப்படுவது பாரம்பரியத்தைச் சிதைக்கும் செயல்.

இரண்டாவது, தீர்த்த உற்வசவத்தில் சகலரும் ஒத்துழைத்து மற்றவர்களது சுதந்திரத்தை பாதிக்கும் வகையில் நீர் அள்ளி விசுக்காது, சைவ ஒழுக்கத்தைக் கடைப்பிடித்மை பாராட்டுக் குரியது. சைவ ஆசாரங்கள், ஒழுக்கங்களை வற்புறுத்திய நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்த மண்ணில் நல்லூரான் திரு விழா தற்போது வெகுசிறப்பாக நடைபெறுகிறது.

மூன்றாவதாக, நான் தெரிவித்த கருத்து, ஆவரங்கால் சிவன் ஆலயத்தில் குறுகிய காலப்பகுதியில் இரு கோபுரங்களையும், இருமண்டபங்களையும் அமைத்து பெருவளர்ச்சி பெறவைத்தமை. அவர்கள் ஒற்றுமையாக, சனநாயகமாக, சமத்துவமாக, சமாதானமாக காரியங்களைச் சிறப்புறச் செய்தமை பாராட்டுக்குரியது.

எனது கட்டுரையில் பெயர்க் குழப்பம் இடம்பெற்றமைக்கு மன்னிப்புக் கேட்கிறேன். செய்நன்றிமறப்பது சைவப் பாரம்பரியமாகாது. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது. பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலிற் பெரிது ஆகிய வான்புகழ் வள்ளுவன் வாய்மொழிக்கமைய, அமரர் வே.சுப்பிரமணியம் பெண் கதிராசிப்பிள்ளை குடும்பத்தவர்கள், மக்கள், பேரப் பிள்ளைகள், அனைவரும் தம் பெற்றோரின் பெருமையை அன்னதான மடம் அமைத்து பேணிக்காத்த பெருமைக் குரியவர்கள். தர்மம் தலைகாக்கும். மண்டபங்கள், கோபுரங்கள் உயர்வதுபோல உள்ளத்தாலும் உயர் வடைவோம். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே.

செ.விசுவலிங்கம்.

## ஒவ்வொரு வாரமும் அடிக்கடி தடைப்படும் பஸ்சேவை

சங்கானையில் இருந்து புத்தூர், வீரவாணி, மட்டுவில் ஊடாக சாவகச்சேரி செல்லும் 775ஆம் இலக்க இலங்கைப் போக்குவரத்துச் சபையால் நடத்தப்படும் பஸ் சேவை, அடிக்கடி தடைப்படுகிறது. முன்பெல்லாம் இடைக்கிடையே தடைப்படும் பஸ் சேவை தற்போது சில மாதங்களாக ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களிலும் தடைப்படுகிறது. இதனால் பொதுமக்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

கேட்டால், சாரதி, நடத்துநர் லீவு, வேறு சாரதி, நடத்துநர் இல்லை என்கின்றனர். சிலவேளைகளில் பஸ் இயந்திரக் கோளாறு காரணமாக பழுதடைந்து விட்டது என்கின்றனர். குறித்த வழித்தடத்தில் இந்த பஸ்சேவையைத் தவிர வேறு பஸ் சேவை எதுவும் கிடையாது. அத்துடன் வேறு பஸ்ஸில் செல்வதற்கு சில மைல்கள் தூரம் நடந்து சென்று புத்தூர்ச் சந்தியில் தான் பஸ் ஏற வேண்டும். எங்கள் கிராமம் ஒரு பின்தங்கிய கிராமம். எங்கள் 775 ஆம் இலக்க பஸ் சேவை வாரம் தவறாமல் தடைப்படுவது ஏன் என இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கேட்கின்றனர்.

எனவே தயவு செய்து ஒழுங்காக பஸ்சேவையை நடத்த நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகின்றோம். இதனால் மாணவர்கள் அரச ஊழியர்கள் உட்பட அனைத்து பயனிகளும் பயன் அடைவார்கள்.

எஸ்.எஸ்.ராஜன்
வீரவாணி மக்கள் சார்பாக

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். [illegible] வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக ஜாம்பவான் என்பதை ரியோவிலும் நிரூபித்தது அமெ.

ரியோ ஒலிம்பிக் தொடர் நிறைவடைந்த நிலையில் பதக்கப்பட்டியலில் முதலிடம் பிடித்து உலக ஜாம்பவான் என்பதை மீண்டும் நிரூபித்தது அமெரிக்கா.

46 தங்கப் பதக்கங்கள், 37 வெள்ளிப் பதக்கங்கள், 38 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 121 பதக்கங்களுடன் அமெரிக்கா முதலிடம் பிடித்தது. 2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் தொடரிலும் அமெரிக்கா 46 தங்கங்களுடன் முதலிடம் பிடித்திருந்தது. ஆனால் ஒட்டுமொத்தமாக 104 பதக்கங்களையே பெற்றது. இம்முறை வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை அதிகம் பெற்றுள்ளது.

வழக்கமாக இரண்டாவது இடத்துக்கு வரும் சீனாவைப் பின்னுக்குத்தள்ளி பிரிட்டன் இரண்டாம் இடத்தைப் பிடித்தது. இதன்படி 27 தங்கம், 23 வெள்ளி, 17 வெண்கலம் என ஒட்டுமொத்தமாக 67 பதக்கங்களை பிரிட்டன் பெற்றுள்ளது. லண்டன் ஒலிம்பிக் தொடரில் பிரிட்டன் நான்காம் இடத்தைப் பெற்றிருந்தது. இம்முறை இரு இடங்கள் முன்னேறி யுள் ளது. பிரிட்டனை விட ஒரு தங்கத்தைக் குறைவாகப் பெற்று மூன்றாமிடத்தில் உள்ளது சீனா. இதன்படி சீனா 26 தங்கம், 18 வெள்ளி, 26 வெண்கலம் என மொத்தம் 70 பதக்கங்களைப் பெற்றுள்ளது. பிரிட்டனை விட அதிக பதக்கங்களைப் பெற்ற போதிலும் தங்கப் பதக்கத்துக்கே பதக்கப் பட்டியலில் முன்னுரிமை என்பதால் சீனாவுக்கு இந்தச் சறுக்கல் நிலை ஏற்பட்டது.

19 தங்கம், 18 வெள்ளி, 19 வெண்கலம் என மொத்தம் 56 பதக்கங்களைப் பெற்று ரஷ்யா நான்காம் இடத்தில் உள்ளது. லண்டன் ஒலிம்பிக் தொடரிலும், 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற பீஜிங் ஒலிம்பிக் தொடரிலும் ரஷ்யாவின் சார்பாகக் களமிறங்கிய வீரர், வீராங்கனைகளில் 70 சதவீதமானவர்கள் ஊக்கமருந்தை உபயோகித்தமை கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் அனைவருக்கும் ரியோ ஒலிம்பிக் தொடரில் தடை விதிக்கப்பட்டது. இதனால் வழங்கமான ஒலிம்பிக் தொடரில் கிட்டத்தட்ட 450 பேரைக் களமிறக்கும் ரஷ்யா இம்முறை கிட்டத்தட்ட 150 பேரையே களமிறக்கியது. பதக்கப்பட்டியலில் ரஷ்யாவுக்குப் பெரும் வறட்சி நிலவும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அந்த அணி 56 பதக்கங்களை வென்றமையே பெரிய விடயமாகக் கருதப்படுகிறது. இந்த அணி லண்டன் ஒலிம்பிக்கில் 82 பதக்கங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

17 தங்கம், 10 வெள்ளி, 15 வெண்கலம் என 42 பதக்கங்களுடன் வழக்கம் போல ஜேர்மனி ஐந்தாம் இடத்தைப் பெற்றது. ஆனால் லண்டன் ஒலிம்பிக்கில் அந்த அணிக்கு 11 தங்கங்களே கிடைத்தன. இம்முறை 17 தங்கங்களை வென்றமை பெரியதொரு அடைவு மட்டமாகக் கருதப்படுகிறது. அடுத்த ஒலிம்பிக் தொடர் 2020 ஆம் ஆண்டு ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ளது. (ம-ரி4)



ரியோ ஒலிம்பிக் தொடர் நி
தொடரை நடத்தவுள்ள ந
மேளனத்தால் ஒலிம்பிக்

## இறுதிநாளில் சுவிற்ச
## சைக்கிளோட்டத்தில்

ரியோ ஒலிம்பிக் தொடரின் இறுதிநா
நடைபெற்ற ஆண்களுக்கான நகருக்
சைக்கிளோட்டத்தில் சுவிற்சர்லாந்து
கிடைத்தது.சுவிற்சர்லாந்தின் சார்பாகச்
நினோ ஸ்குளுச்செர் 1 மணித்தியால
கள், 28 மில்லி செக்கன்களில் இலக்கை
கத்தை வென்றார். செக்குடியரசின்
மணித்தியாலம், 34 நிமிடங்கள், 18 மி
களில் இலக்கை அடைந்து வெள்ளி
வென்றார். ஸ்பெய்ன் வீரர் கார்லோஸ்
மணித் தியாலம், 34 நிமிடங்கள், 51 மி
களில் இலக்கை அடைந்து வெண்கல
வென்றார்.



# நாடுகளுக்கு இடையிலான பகைமைகள் ஒலிம்பிக் தொடரில் பாராட்டப்படவி

## தோமஸ் பெச் பெருமிதம்

ரியோ ஒலிம்பிக் தொடர் முடிவடைந்த நிலையில், நாடுகளுக்கு இடையிலான பகைமைகள் ஒலிம்பிக் தொடரில் பாராட்டப்படாமையைக் குறிப்பிட்டு பெருமிதம் தெரிவித்துள்ளார் பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனத்தின் தலைவரான தோமஸ் பெச்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமான இந்தத் தொடர் நேற்று அதிகாலை நிறைவடைந்தது. நிறைவு விழாவில் உரையாற்றுகையிலேயே பெச் இவ்வாறு தெரிவித்தார்.



விளையாட்டு வேறொரு உலகைச் சார்ந்தது. விளையாட்டில் பகைமைகள் கிடையாது. ரியோ ஒலிம்பிக் தொடரும் இதற்குத் தக்க சான்று. குறிப்பாக ரஷ்ய, உக்ரைன் போட்டியாளர்கள் தமது நட்பைப் பகிர்ந்துகொண்டமையும், வடகொரியா, தென் கொரியா போட்டியாளர்கள் இணைந்து செல்பி எடுத்தமையையும் நான் மிகையாகவே பாராட்டுகின்றேன். அமெரிக்க வீராங்கனைக்கு நியூசிலாந்து வீராங்கனை உதவிய விவகாரம் பலராலும் பேசப்பட்டது. உலகைத் திரும்பிப் பார்க்க வைத்தது. ஒவ்வொரு விளையாட்டுக்களிலும் பல புதிய வீரர், வீராங்கனைகள் இனங்காணப்பட்டனர். அவர்களுக்கு

அந்தந்த நாடுகள் பெ
களைத் தொடர்ந்து வழ
இந்த ஒலிம்பிக் தொ
பிரேஸில் ஏகப்பட்ட
துள்ளது. போக்குவரத்
மானங்கள் என்பன
வளர்ச்சியடைந்துள்ள
ஒலிம்பிக் தொடரை ந
தென்னமெரிக்க நாடு
லும், இந்தளவுக்கு பிர
தொடரை நடத்திய
பிரேஸிலும், ரியோ
நகரும் வரலாற்றில்
ளன என பெச் மே
தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தொடர் நிறைவடைந்த நிலையில் அடுத்ததாக ஒலிம்பிக் ...வுள்ள நாடான ஜப்பானிடம் பன்னாட்டு ஒலிம்பிக் சம ...லிம்பிக் கொடி கையளிக்கப்பட்டது. (ம-ரி4)

# வலைப்பந்தாட்டத்தில் பிரேஸிலுக்குத் தங்கம்

ரியோ ஒலிம்பித் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் பிரேஸிலுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

தங்கப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் பிரேஸிலை எதிர்த்து இத்தாலி மோதியது. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. இருப்பினும் முதல் மூன்று செற்களையும் கைப்பற்றிய பிரேஸில் 3:0 என்ற நேர் செற் கணக்கில் இத்தாலியை வீழ்த்தித் தங்கம் வென்றது. இத்தாலிக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் அமெரிக்காவை எதிர்த்து அதன் ஒலிம்பிக் எதிரியான ரஷ்யா பலப்பரீட்சை நடத்தியது. முதலிரு செற்களையும் அமெரிக்கா கைப்பற்றியது. இதனால் மூன்றாவது செற்றும் அமெரிக்காவின் சார்பாக அமைந்து விட்டால் அந்த அணிக்கு நேர் செற் வெற்றியென்ற நிலைமை. ஆனால் மூன்றாவது, நான்காவது செற்களைக் கைப்பற்றி சவாலை வழங்கியது ரஷ்யா. இறுதிச் செற்றில் வெற்றிபெறும் அணியே வெண்கலத்தை வெல்லும் என்ற நிலையில் அந்த செற்றை கைப்பற்றிய அமெரிக்கா 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-ரி4)



# கூடைப்பந்தாட்டத்தில் தங்கத்தை இலகுவாகக் கைப்பற்றியது அமெ.

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் கூடைப்பந்தாட்டத்தில் இலகுவாக தங்கத்தை வென்றது அமெரிக்கா. தங்கப் பதக்கத்துக்காக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அமெரிக்காவை எதிர்த்து சேர்பியா மோதியது. ஆரம்பம் முதல் தனித்து ஆதிக்கம் செலுத்திய அமெரிக்க அணி 96:66 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. சேர்பியாவுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில், ஆஸ்திரேலியாவை எதிர்த்து ஸ்பெய்ன் மோதியது. மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் 89:88 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்ற ஸ்பெய்ன் வெண்கலத்தை வென்றது. (ம-ரி4)

## ...விற்சர்லாந்து ...த்தில் சாதிப்பு

... இறுதிநாளான நேற்று ...ன நகருக்குக் குறுக்கான ...சர்லாந்துக்குத் தங்கம் ... சார்பாகக் களமிறங்கிய ...த்தியாலம், 33 நிமிடங் ... இலக்கை அடைந்து தங் ...யரசின் ஜரோஸ்லாவ் 1 ...கள், 18 மில்லி செக்கன் ... வெள்ளிப் பதக்கத்தை ...ார்லோஸ் நிக்கோல்ஸ் 1 ...கள், 51 மில்லி செக்கன் ...வெண்கலப் பதக்கத்தை (ம)



# உயரம் பாய்தலில் ஸ்பெய்ன் போராடி தங்கத்தை வென்றது

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான உயரம் பாய்தலில் ஸ்பெய்ன் வீராங்கனை தங்கம் வென்றார்.

ஸ்பெய்னின் சார்பாகக் களமிறங்கிய ருத் பெய்டியா ஒரு மிற்றர் 97 சென்ரிமீற்றர் உயரத் துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைத் தனதாக்கினார். பல்கேரிய வீராங்கனை மிரில்லாவும் ஒரு மீற்றர் 97 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். இவர் ருத் பெய்டியாவை விட அதிக வாய்ப்புக்களை எடுத்துக்கொண்டார். வெண்கலப் பதக்கத்தை குரோசிய வீராங்கனை விலாசிக் தனதாக்கினார். (ம)



# மரதனில் சாதித்தது கென்யா




ரியோ ஒலிம்பிக் தொடரின் இறுதிநாளான நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான மரதனோட்டத்தில் கென்யாவுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது. கென்யாவைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய எலைட் கிளிச்கோவ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை 2 மணித்தியாலயம், 08 நிமிடங்கள், 44 செக்கன்களில் ஓடிமுடித்து தங்கம் வென்றார். எத்தியோப்பியாவின் பெய்சா லெசா 2 மணித்தியாலயம், 09 நிமிடங்கள், 54 செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கம் வென்றார். ஐக்கிய அமெரிக்காவின் கிளேன் 2 மணித்தியாலயம், 10 நிமிடங்கள், 05 செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலம் வென்றார். (ம)

## ...டவில்லை

...ாடுகள் பெரும் வாய்ப்புக் ...ர்ந்து வழங்க வேண்டும். ...ம்பிக் தொடரின் மூலம் ...ஏகப்பட்ட பயனடைந் ...பாக்குவரத்துக்கள், கட்டு ... என்பன ஆகச்சிறந்த ...டைந்துள்ளன.

...தாடரை நடத்திய முதல் ...ரிக்க நாடு என்ற முறையி ...ாவுக்கு பிரம்மாண்டமாக ...நடத்தியதன் பேரிலும் ..., ரியோ டி ஜெனிரோ ...லாற்றில் இடம்பிடித்துள் ...பெச் மேலும் தெரிவித் (ம-ரி4)




பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமான ஒலிம்பிக் தொடர் நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) நிறைவடைந்தது. தொடரின் நிறைவு விழாவையும் பிரமிக்கத்தக்க வகையில் பிரேஸில் ஏற்பாடு செய்திருந்தது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

## விருச்சிகம்

குருப் பெயர்ச்சி, ஒகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18, ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை-தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் - இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுபப் பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.



### விசாகம் 4ஆம் பாதம், அனுசம், கேட்டை வரை

வீடு கட்டிக் குடியேறும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தாய்வழி ஆதரவு உண்டு. வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். பிரயாணங்களால் நன்மை கிடைக்கும். அரசுப் பணியில் உள்ளவர்களால் ஆதாயம் உண்டு. அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். குருபகவான், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 26.6.2017 முதல் 1.9.2017 வரை): ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். செயற்பாடுகளில் வெற்றி கிட்டும். சொத்துக்கள் வாங்குவதில் மும்முரம் காட்டுவீர்கள். உங்கள் குடும்ப உறுப்பினர்களில், யார் ஜாதகத்தில் செவ்வாய் வலிமை பெற்றிருக்கின்றதோ, அவர்கள் பெயரில் சொத்துக்கள் வாங்குவது நல்லது. உத்தியோக மாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்**

விருச்சிக ராசியில் பிறந்த பெண்களுக்கு இக்காலம் ஒரு பொற்காலமாகும். எடுத்த காரியங்களை எளிதில் முடிப்பீர்கள். உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். உடல்நலம் சீராகும். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். இருவரும் சம்பாதிக்க இனிய வழிபிறக்கும். வங்கிச் சேமிப்பு வரலாறு காணாத வகையில் உயரும். மங்கள நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். தாய்வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புக்களும் உதவிக்கரம் நீட்டுவர். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்க குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பர். திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குரு வக்ரம் பெறுவதோடு அதிசாரமாக துலாம் ராசிக்கு இடையில் செல்கிறார். அதிசாரமாகச் செல்லும்பொழுது, உங்கள் ராசிக்கு 4,6,8 ஆகிய இடங்களைப் பார்க்கிறார்.

எனவே சந்தோசம் கூடும். சேமிப்புக் கரையும். வரவு வந்த மறுநிமிடமே செலவாகும். உத்தியோக வாய்ப்புக்கள் கைகூடி வரும். குருவின் வக்கிரக காலத்தில் குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்ல்து.

கொடுக்கல் வாங்கல்களில் கூடுதல் கவனம் தேவை. யாரையும் பகைத்துக் கொள்ளாமல் இருப்பது உங்கள் புத்திசாலித்தனம். குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. இது போன்ற காலங்களில் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகரையும், திருச்செந்தூர் முருகனையும் வழிபட்டு வருவது நல்லது.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

ராசிநாதன் செவ்வாய் என்பதால் செவ்வாய்க்கிழமை தோறும் ஆனைமுகப்பெருமானையும், ஆறுமுகப் பெருமானையும் வழிபட்டு வாருங்கள். பௌர்ணமி தோறும் மலைவலம் வருவதன் மூலமும் மகத்துவம் காண இயலும்.

(தொடரும்)

---

# மாணவப் பருவத்தில் நினைவாற்றல்

வ.சி. ஸ்ரீஸ்கந்தராசா



எமது உள்ளத்தில் சேமித்து வைக்கப்படும் அனுபவங்களை எமக்குத் தேவைப்படும் போது பயன்படுத்தப்படும் நிலையே நினைவாற்றல். அதாவது மீட்டுணர்வு நிலைக்குக் கொண்டு வரப்படும் நிலையே நினைவாற்றல். இது மாணவத்தின் வெற்றிக்கு அடித்தளம். கல்வி கற்பதில் இது பெரும் பங்களிப்புக் காரணியாக அமைகின்றது.

*"கற்க கசடு அற கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

மாணவத்தில் கற்கும் விடயங்களை ஐயம் திரிபின்றிக் கற்க வேண்டும், பின்னர் ஏற்றபடி நிற்றல் கடமை. எனவே கற்றவை யாவும் மனதில் பதிந்து நினைவில் இருந்தால் மட்டுமே பரீட்சையில் சித்திபெற முடியும். சிறந்த கல்வியாளனாகக் கீர்த்தி பெறமுடியும்.

*"நெடு நீர் மறவி மடி துயில் நான்கும்*
*கெடுநீரார் காமக்கலன்"*

கவனத்துடனும், ஊக்கத்துடனும் இருப்பதே சிறப்பு. வெறுமனே புத்தகப்பூச்சியாக இருப்பதும் கூடாது. விரும்பிய விளையாட்டுக்கள், சாரணீயம், சமூக சேவை, ஆலயசேவை ஆகியவற்றில் இயலுமான் வரை பங்களிப்புச் செய்யின் சகலகலா வல்லபம் பெற்ற மாணவத்தைப் பெறலாம். "நன்றே செய், இன்றே செய், ஒன்றே செய்" என்பதால் எதிலும் காலம் நீடிக்கும் நிலை மாறும்.

ஒரு குறிப்பிட்ட நேர எல்லைக்குள் மட்டுமே ஆசிரியரினால் பாடவிதானத்தைக் கற்பிக்கமுடியும். இதனை முழுமையாகப் பயின்று தெளிவு பெறல் அவசியம். மனதில் இருத்திக் கொள்வது சிறப்பு. இத்தகைய திறமை உடைய மாணவம் பார்வைக்கு அங்குமிங்கும் ஓடியாடித் திரிந்தாலும் பரீட்சையில் திறமைச் சித்திபெற உரிய நினைவாற்றல் உதவுகின்றது. கல்வி கற்கும்போது விருப்பத்தோடும், ஆர்வத்தோடும், மகிழ்ச்சியோடும் இருப்பின் மட்டுமே கல்லும் கனியாகும். அதாவது கல்வி மனதில் கனியும். மேலும் பொருளுணர்ந்து கற்கும்போது அந்த விடயம் சுலபமாக மனதில் பதிந்து விடுகிறது. இக்காலகட்டத்தில் வீட்டில் வறுமை, தீய நட்பு, உறவினர் புறக்கணிப்பு, இடப்பெயர்வு போன்றவை எதிர் கொள்ளலாம். அந்த நிலையில்,

*"விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம்*
*சொன்ன வழிக்கே வழிபட*
*நெஞ்சுண்டு எமக்கு"*

என நினைந்து தெய்வ பக்தியுடன் ஊக்கம் பெற்று எழுச்சி பெறுங்கள். மாணவம் சீவியத்தின் விதை நிலம். இதுவே ஒவ்வொரு குடும்பத்தின் விளை நிலம். இறுதியாகக் கற்றவற்றைக் கால இடைவெளி விட்டு மீட்டிப் பார்ப்பதும், கற்றவிடயங்கள் நினைவில் உறுதியாக நிலைத்து நிற்க உதவும். மாணவத்தில் நினைவாற்றலை வளர்த்து, கல்வியில் முன்னேற்றம் பெற்று

*" ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்*
*மகனை*
*சான்றோன் எனக் [illegible] தாய்*
*[illegible]"*

**கவனத்துடனும், ஊக்கத்துடனும் இருப்பதே சிறப்பு. வெறுமனே புத்தகப் பூச்சியாக இருப்பதும் கூடாது. விரும்பிய விளையாட்டுக்கள், சாரணீயம், சமூகசேவை, ஆலய சேவை ஆகியவற்றில் இயலுமானவரை பங்களிப்புச் செய்யின் சகலகலா வல்லபம் பெற்ற மாணவத்தைப் பெறலாம். "நன்றே செய், இன்றே செய், ஒன்றே செய்" என்பதால் எதிலும் காலம் நீடிக்கும் நிலை மாறும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையில் சீரழிகின்றது நாட்டின் இளைய சமுதாயம்



அருள்பணி. செ.அன்புராசா,
அமதி, மாங்குளம்

முல்லா நசுருதீன் பற்றிச் சொல்லப்படுகிற அருமையான சம்பவங்களுள் இதுவும் ஒன்று. வேலைமுடிந்து வீடு திரும்புகின்ற வழியில் ஒரு மதுபானசாலை இருந்தது. சிறிது காலமாக கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கப் பழகிய முல்லா நாளடைவில் நன்றாகவே குடிக்கத் தொடங்கினார். குடிப்பதால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் கூறிய போது குடிப்பதை முற்றாக விட்டுவிட வேண்டும் எனத் தீர்மானித்தார். குறிப்பிட்ட அந்த நாளில் குடிப்பதில்லை என்ற முடிவுக்கு முல்லா வந்தாலும் வழியிலுள்ள அந்த மதுபானசாலையைக் கடந்து செல்வது முல்லாவுக்கு மிகத் துன்பமான – கஷ்டமான காரியமாக இருந்தது. காரணம் அவ்விடத்தைக் கடக்கின்றபோது மதுவின் நெடி முல்லாவின் மூக்கைத் துளைக்கும்! இருப்பினும் ஒருவாறு மதுக்கடையைக் வெற்றிகரமாகக் கடந்து ஒரு கிலோமீற்றர் வரை சென்ற முல்லா தன் முயற்சியின் வெற்றியைக் கொண்டாடவேண்டும் எனத் தன் மனதுக்குள் நினைத்துக் கொண்டார்.

எவ்வாறு கொண்டாடலாம்?என யோசித்துக் கொண்டு நடந்த முல்லா திடீரெனத் திரும்பி மதுபானசாலைக்கு நேரடியாக வந்தார். ஒரு போத்தல் மதுவைத் தருமாறு கேட்டார். மது விற்பவனோ,'முல்லா, வழமையாக அரைப் போத்தல் மதுதான் குடிப்பீர்கள். அதுவே உங்களுக்கு அதிகமானது. இன்று ஒரு போத்தல் கேட்கிறீர்களே!' என வினவியபோது,'உனது மதுக் கடையைக் கடந்து செல்கின்றபோது குடிப்பதில்லை எனத் தீர்க்கமான முடிவு எடுத்திருந்தேன். அதனை இன்று வெற்றிகரமாக செய்தும் முடித்தேன்! அதனைச் சிறப்பாகக் கொண்டாடவேண்டும் அல்லவா! அதனால் தான் இன்றைக்கு ஒரு போத்தல்' என்றார் முல்லா.

### கஞ்சாவின் ஆதிக்கம்

கடந்த ஓரிரு ஆண்டுகளாக கஞ்சாக் கடத்தலைப் பற்றிய செய்திகளை ஊடகங்களில் காணாத நாளே இல்லை என்று சொல்கின்ற அளவுக்கு வடபுலத்து நிலமை மாறியிருக்கிறது. கஞ்சாக் கடத்தல் ஒரு பக்கம், கஞ்சாக் கைது மறுபக்கம் எனத் தொடர்ந்த வண் ணமாகவே இருக்கின்றன. ஜனாதிபதி உட்பட, வடமாகாண முதலமைச்சர், வடமாகாண ஆளுநர், நீதிபதிகள் எனப் பலத் திறத்தாரும் இந்தச் சமூக தீமையைப்பற்றித் தங்கள் கரிசனையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

### 12 ஆண்டுகளுக்கு முன்

போதைப்பொருள் பாவனையில் சிக்கிச் சீரழிந்த குடும்பங்களின் கண்ணீர்க் கதைகளையும் அதனால் ஏற்படும் மிகப் பயங்கரமான பாதிப்புக்களையும் அனைவரும் அறியவேண்டும் என்பதற்காகவும் ஏனையவர்கள் இந்தத் தீமையில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்குடனும் ஒரு விளக்க விவரணக் கட்டுரையை காலத்தின் அவசிய, அவசரத் தேவை கருதி எழுத விழைகிறேன். காரணம் போதைப் பொருள் பாவனையில் குடும்பங்கள் சின்னாபின்னப்பட்டு சீரழிந்து போகின்ற நிலையை வெவ்வேறு பணிகளுக்காக நாட்டின் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று வருகிறபோது பார்த்திருக்கிறேன். இந்தப் பழக்கத்துக்கு உள்ளான பலரை நேரடியாகச் சந்தித்திருக்கிறேன்.

ஆகவேதான் இப்போதைபொருள் அடிமைத்தனத்திற்குள் சிக்கித் தவிக்கும் சகோதரங்களின் குரலாக நின்றுகொண்டு அவர்களின் அன்பான இரண்டு வேண்டுகோள்களை முன்வைத்து பாதிப்புற்றவர்களின் சில அனுபவங்களை விவரிப்பதன் வழியாக போதைப் பொருள் பாவனையை எப்படித் தவிர்க்கலாம் – தடுத்து நிறுத்தலாம் என்பதைப் பற்றிச் சிந்திக்க அழைக்கிறேன்.

போதை என்றால் ஒரு மயக்க நிலை, அடிமை நிலை, பழகிப்போன பழக்கம் என்று சாதாரணமாக விளங்கிக் கொள்ளலாம். உளவியலா ளர்களின் கருத்துப்படி போதை என்பது மனிதர் தமது தற்போதைய உணர்வுகளை மறந்து, மறுத்து, மறைத்து தாம் விரும்பும் உணர்ச்சி நிலைக்கு உடனடியாகச் செல்ல விளையும் ஒரு மன நிலை என்கிறார்கள்.

போதைப் பொருளாகப் பல பொருள்களைப் பயன்படுத்துகிறார்கள். அவற்றில்

மதுவும் மதுபானங்களும் (சாராயம், கசிப்பு, விஸ்கி, பிராண்டி, பியர் போன்றவற்றைக் குறிப்பிடலாம்)

புகையிலையும் புகையிலைப் பொருள்களும் (கஞ்சா, புகையிலை, சுருட்டு, சிகரெட், பீடி, மூக்குத்தூள் அல்லது மூக்குப்பொடி போன்றவற்றைக் குறிப்பிடலாம்)

மருத்துவப் பொருள்கள் (மயக்கமூட்டிகள் - Narcotics), மந்தமாக்கிகள் (Depressant), தூண்டிகள் (Stimulants) கொக்கெயின் போன்றவை.

ஹெரோயின், அபின், கஞ்சா போன்றவை வேறொரு வகையான பாரதூரமான போதைப் பொருள்கள் ஆகும். மேற்கூறப்பட்ட நான்கு வகையான போதைப்பொருள்களில் கஞ்சா, அபின், ஹெரோயின் போன்ற போதைப் பொருள்களால் ஏற்படும் மிகப் பாரதூரமான பாதிப்புக்கள் பற்றியே இங்கு கவனம் செலுத்தவேண்டி உள்ளது.

> உலகில் போதைப் பொருள் பாவனையில் சிக்கியுள்ள நாடுகளில் 80 வீதமான நாடுகள் வுளர்ச்சியடைந்து வரும் வரிசையில் உள்ளவை என்று சொல்லப் படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரை போதைப் பொருள் பாவனையாளர்கள் 1980இல் 580பேர் எனக் கணக்கெடுப்புக் காட்டியது. ஆனால் 2013இல் 65938பேர் என ஓர் கணக்கெடுப்புக் கூறினாலும் இத்தொகையைவிட மிக அதிகமானவர்கள் பாவனையாளர்களாக உள்ளார்கள் என்றே அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

### போதையின் இன்றைய யதார்த்த நிலை

உலகில் போதைப் பொருள் பாவனையில் சிக்கியுள்ள நாடுகளில் 80 வீதமான நாடுகள் வளர்ச்சியடைந்து வரும் வரிசையில் உள்ளவை என்று சொல்லப்படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரை போதைப் பொருள் பாவனையாளர்கள் 1980இல் 580பேர் எனக் கணக்கெடுப்புக் காட்டியது. ஆனால் 2013இல் 65938பேர் என ஓர் கணக்கெடுப்புக் கூறினாலும் இத்தொகையைவிட மிக அதிகமானவர்கள் பாவனையாளர்களாக உள்ளார்கள் என்றே அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்சொன்ன எண்ணிக்கையானது பல இலட்சங்களைத் தாண்டிவிட்ட மதுப் பாவனையாளர்களை உள்ளடக்கவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கது. மேலும், 2009-2013ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் போதைப் பொருளின் பாவனையும் விற்பனையும் மிக அதிகரித்திருக்கிறது என்பதை புள்ளிவிவரங்களில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

கஞ்சா, ஹெரோயின், அபின் என்ற போதைப் பொருள்களின் தாக்கம் எமது நாட்டையும் குறிப்பாக எமது பிரதேசங்களையும் மிகப் பயங்கரமாகப் பாதிக்கின்ற உயிர்க் கொல்லியாகவும் ஏனைய சமூக விரோதச் செயல்களுக்குக் காரணமான ஒன்றாகவும் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. 2003ஆம் ஆண்டு போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தில் தொலைக்காட்சியில் ஒரு நேர்காணலைக் கொடுத்திருந்த போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்த வேளையில் இலங்கையில் சுமார் ஒரு இலட்சம் பேர் போதைப்பொருள் பாவனையாளர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். நாள் ஒன்றுக்குச் சுமார் 50 லட்சம் ரூபா அநியாயமாக போதைப்பொருளுக்காக வீண்விரயம் செய்யப்படுகின்றது என்ற அதிர்ச்சிதரும் தகவலையும் தெரிவித்திருந்தார்.

இவ்வதிகாரியின் தகவலில் போதைப்பொருள் பாவனை என்பதில் மதுப்பாவனையும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டியது. போதைப்பொருளுக்காக நாட்டின் தேசிய வருமானத்தில் மிகப்பெரிய தொகையொன்று அநியாயமாகச் செலவிடப்படுகிறது என்பது வேதனைக்குரிய ஒன்றாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோசித்து முடிவெடு

மோகன், ரவி இருவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். இருவரும் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்கள். இருவரும் படிப்பில் கெட்டிக்காரர்கள். கொடுத்த வேலையைச் செய்வதிலும் மற்றவர்களுக்கு உதவுவதிலும் எப்போதும் முன்னிற்பவர்கள்.

மோகன் ரவியை விட வேகமாகச் செயலாற்றுவான். யாராவது உதவி வேண்டிப் பணிப்புரை விடுத்தால் மறுபேச்சில்லாமல் உடனுக்குடன் அதைச்செய்து முடிப்பதில் ஆர்வமாக இருப்பான். இதனால் எல்லோரையும் விட பாடசாலையில் அவனுக்கு நல்ல பெயர். ரவியும் மோகனைப்போல் மற்றவர்களுடைய கட்டளையை ஏற்றுச் செயற்பட்டாலும் கேட்டதை உடனுக்குடன் செய்து தரமாட்டான். மற்றவர்கள் சொல்பவற்றைப் பற்றி நன்கு யோசித்த பின்னரே அவற்றைச் செய்வது பற்றி யோசிப்பான்.

மோகனுடைய பெற்றோரும் "மோகன் நீ இப்படி எதையும் யோசிக்காமல் காரியங்களில் இறங்கக் கூடாது. நாம் செய்யப்போகும் காரியங்களில் ஆபத்தும் இருக்கலாம். எதையும் ஆழ்ந்து யோசித்துச் செய்யவேண்டும்" என்று சொல்வார்கள். மோகன் உடனே தலையாட்டி விடுவானே தவிர வழக்கம் போலவே நடந்து வந்தான்.

ஒரு நாள் மோகன் கடைத் தெருவுக்கு வீட்டுச் சாமான்கள் வாங்குவதற்காகச் சென்று கொண்டிருந்தான். சைக்கிளில் சென்று கொண்டிருந்த அவனை இடையில் நடந்து சென்று கொண்டிருந்த ஒரு மனிதன் மறித்து "தம்பி கடைத்தெருவுக்குத் தானே போகிறீர்" என வினவினான். மோகன் "அங்கேதான் போகிறேன்" என்றதும் "தம்பி நான் தாற இந்தப் பார்சலை நான் சொல்லுகிற கடையில் கொடுத்து விடுகிறீரா? நான் நடந்துவர நேரம் செல்லும், இந்தப் பார்சல் அவசரமாக பஸ்மூலம் அனுப்பப்பட வேண்டும். நீர் நான் சொல்லுகிற கடையில் கொடுத்தால் அவர்கள் அனுப்பி விடுவார்கள்" என்றதும், மோகன் அந்த மனிதன் சொன்ன விலாசத்தைக் கேட்டுக் கொண்டு சைக்கிளில் எறிச்சென்றான். குறிப்பிட்ட விலாசத்தைக் கண்டு பிடிப்பது மிகவும் சிரமமாக இருந்தது. பலபேரிடம் விசாரித்து ஒரு குறுகிய ஒழுங்கைக்குள் இருந்த இடத்துக்குள் போகவே, அவனுக்கு அச்சமாக இருந்தது. தயங்கித் தயங்கி உள்ளே சென்றதும் உள்ளே இருந்து வந்த மனிதனிடம் வழியில் ஒருவர் வந்து தந்து விட்டதாகச் சொல்லிப் பார்சலைக் கொடுத்தான். வந்தவர் அதைச் சந்தோசமாகப் பெற்றுக் கொண்ட அதேநேரம் பொலிஸார் உள்ளே புகுந்து பார்சலைக் கைப்பற்றிக் கொண்டனர்.

பார்சலை வாங்கியவன் திரு திரு என விழிக்க பொலிஸார் அவனைப் பிடித்துக் கொண்டனர். ஒரு பொலிஸார் அதிகாரி பார்சலைப் பார்த்துவிட்டு "நான் நினைச்சது சரியாப்பபோச்சு இந்தப் பெடியன்தானா உனக்குச் சாமான் கடத்தித் தாறவன்" என்று மிரட்ட "சேர் நான் கடைக்குச் சாமான் வாங்க வந்தனான். சேர், நான் வழியில் வந்து கொண்டிருக்கும்போது வழியில் நடந்து வந்து கொண்டிருந்த ஒருவர் இந்தப் பொதியை இங்கே கொடுக்கச் சொல்லி விலாசம் தந்துவிட்டார் சேர், அவர் இங்கே தான் வந்துகொண்டிருக்கிறார்'' என்று சொல்லவும் "சரி சரி எல்லோரும் மறைந்து கொள்ளுங்கள்" என்று உத்தரவிட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கடைக்காரனையும், மோகனையும் இழுத்துக் கொண்டு மறைந்து விட்டார். சிறிது நேரத்தில் மோகனிடம் பொதியைக் கொடுத்த மனிதன் உள்ளே வந்தான்.



அவனைச் சுற்றி வளைத்த பொலிஸாரிடம் அவன் மோகனிடம் போதைப் பொருள் பொதியைக் கொடுத்தனுப்பியதாக ஒப்புக்கொண்டான். மோகனை விடுவித்த பொலிஸ் அதிகாரி குற்றவாளிகள் இருவரையும் கைது செய்தார்கள்.

இப்போது மோகன் எந்தக் காரியத்திலும் தீவிரமாக யோசித்த பின்பே ஈடுபடுகின்றான்.

சிறுவர்களாகிய நாமும் மோகனைப்போல் எந்த விடயத்திலும் யோசித்து செயலாற்ற வேண்டும்.

-சரண்யா

## வரலாற்றில் இன்றைய தினம்

1614 - டச் குடியரசில் குறொனிஞ்ஜன் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டது.

1765 - பர்மா-சியாமி போர் தொடங்கியது.

1799 - முதலாம் நெப்போலியன் எகிப்திய ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக பிரான்ஸிலிருந்து புறப்பட்டான்.

1873 - லண்டன் செல்சீயில் அல்பேட் பாலம் திறக்கப்பட்டது.

1914 - முதலாம் உலகப்போர்; ஜேர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்த ஜப்பான் சீனாவின் கியுங்டோ மீது குண்டுத் தாக்குதல் மேற்கொண்டது.

1921 - பிரித்தானிய வான் கப்பல் R-38 இங்கிலாந்தில் பறப்பில் ஈடுபட்டபோது அமைப்புத் தவறு காரணமாக விபத்துக்குள்ளாகியதில் 49 பிரித்தானியா மற்றும் அமெரிக்க பயிற்சி விமானமோட்டிகளில் 4பேர் மட்டும் உயிர் பிழைத்தனர்.

1927 - இத்தாலிய புரட்சியாளர்கள் சாக்கோ மற்றும் வாஷெற்றி ஆகியோர் நீண்ட விசாரணையின் பின்னர் சாவுத் தண்டனைக்கு உள்ளாகினர்.

1948 - உலக திருச்சபைக் கவுன்சில் உருவாக்கப்பட்டது.

1954 - ஹேர்குலிஸ் சரக்கு விமானம் கன்னிப் பறப்பு.

1966 - சந்திரனைச் சுற்றிய லூனர் ஒபிற்றர் 1, பூமியைப் படம் எடுத்தது.

1989 - எஸ்டோனியா, லத்வியா மற்றும் லுதுவேனியாவைச் சேர்ந்த 2 மில்லியன் மக்கள் விலினியஸ்-ரல்லின் வீதியில் மனிதச் சங்கிலி கைகோர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

1990 - மேற்கத்தைய விருந்தினர் பலருடன் (உண்மையில் பணயக் கைதிகள்) சதாம் ஹூசைன் ஈராக்கிய தேசிய தொலைக் காட்சியில் தோன்றினார்.

1994 - முதலாவது உலகப் போரின்போது பணியாற்றிய ஒரே ஒரு கறுப்பின விமானியான ஈஜீன் புல்லாட் தமது சாவின் பின்னர் இரண்டாம் லெப்டினன்ட் ஆக அமெரிக்க விமானப் படையால் அறிவிக்கப்பட்டார்.

2011 - லிபிய சிவில் போரின்போது லிபியத் தலைவர் கடாபி தேசிய இடைக்கால சபையால் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டார்.


2013 - பொலிபியா பல்மசோலா சிறைச்சாலை வளாக வன்முறையில் 31 பேர் உயிரிழந்தனர்.

1992 - திருமலைக்குத் திரும்பி வந்த அகதிகள் சொந்த இடங்களில் குடியமர முடியாது தவிப்பு.

1995 - உணவுத் தடை நீக்கம் குறித்துப் பேசமுன்வந்த யாழ்.அரச அதிபரைச் சந்திக்க ஜனாதிபதி சந்திரிகா மறுப்பு.

2005 - சுடரொளி செய்தியாளரை வீதியில் தள்ளி உதைத்தது ஜே.வி.பி. அவரது கமெரா, தொலைபேசி என்பன அபகரிப்பு.

2006 - பல்குழல் பீரங்கியால் குண்டு வீசி - தமிழர்களை [illegible] பலிக்காதென சபையில் மாவை தெரிவிப்பு.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## ஒட்டகமே ஒட்டகமே

ஒட்டகமே ஒட்டகமே
உயரமான ஒட்டகமே
ஊரில் உமைக் காண
எம்மால் முடிவதில்லை ஒட்டகமே
பாலைவனத்தில் வாழும் தாங்கள்
பல கதைகள் சொல்லுங்களேன்
நீர் குடிக்க நீங்களும்
நீண்ட தூரம் செல்வதால்
நீண்டு போன கழுத்தினால்
நீர் குடிக்க உதவுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சாமிர்தம் போல் நெஞ்சில் பண்புடன் இனிப்பவன்

கே.எஸ்.சிவஞானராஜா

எங்கள் குருநாதன்
எழில் நல்லைவாசன்
இங்கும் அங்கும் எங்கும்
பிரகாசன்

ஆம்! ஒளிமயமாகி எல்லோரையும் வசீகரிப்பவன் நல்லூர் முருகன்.
மங்களகரமான வாக்கியப்பிரசாதனாக மாறாத மௌன தியானப்பிரவேசனாக வியாபிப்பவன் நல்லூர் முருகன்.
அன்பர்களின் சகாயனாக ஆனந்தசாகரனாக அல்லும் பகலும் நல்லை வீதியில் சேகரனாக உலாவந்து எம்பிழை யாவும் பொறுத்து எமையாள்பவன், இரவும் பகலும் எம்தன் மனதினில் தாண்டவம் புரிகின்றான் முருகன்.
வஞ்சம், பொறாமை, கோபம் வைத்திடும் மாந்தர்க்கும் அஞ்சாதே என்று அருளையீந்து எம்மைத் திருந்தி வாழச் செய்பவன் நல்லூர் முருகன்.
ஆதலால் பஞ்சாமிர்தம் போல் இனிக்கின்றான். இதனாலன்றோ கோடான கோடி பக்தர்கள் நல்லூரில் திரள்கின்றார்கள். தவத்திரு செல்லப்பா சுவாமிகளும் தவத் திரு யோகர் சுவாமிகளும் முருகனோடு தேரடியில் கூடிக் குலாவி சுகித்திருந்த இடம் நல்லூர்.

**மருந்து**

நல்லூர் ஒரு சர்வரோக நிவாரணியாகத் திகழ்கிறது. நல்ல மருந்தான குரு மருந்தைநல்லூரில்கண்டுதரிசிக்கலாம்.
எல்லை இல்லாத பிணிக்கும்
இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்ற மருந்து நல்லூர் என்ற முருக மருந்து உன்குடும்பத்துக்கு அளவாக இல்லையெனாது கொடுப்பதும் ஏழை அடியார்களுக்கு இரங்குவதும் நல்லூராகிய முருக மருந்தாகும். வல்லவன் செல்லப்பன் தந்த அந்த மருந்தே
வாழ்த்தும் கணபதிக்கு வந்த மருந்து
புல்லர்கள் கண்டு புசியாத மருந்து
புண்ணியன் யோகன் புசிக்கும் மருந்து
அந்த நல்ல மருந்தொரு குருமருந்தை நல்லூரிலே காணலாம். வாருங்கள் இலங்கையில் சிறப்பாக நல்லூரிலும் சந்நிதியிலும் கதிர்காமத்திலும் முருகனானவன் அடியார்களோடு அடியாராக் கூடிநின்று மருந்தாகவும் பஞ்சாமிர்தமாகவும் இனிப்பதனால் அனைவரும் சுகம் பெறலாம்.
திருவிழாக்காலங்களில் மாத்திரமல்ல எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்களாயினும் என்ன வில்லங்கமாயினும் சட்டென விலகிச் செல்லுமே என்பது யோகர் வாக்கு.

**அதிசயம்**

எந்நாளும் நல்லூரை
வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே
அந்நாளில் ஆசான் அருந்தவம்
செய்த இடம்
அதுவாதலாலே அதிசயம்
மெத்தவுண்டு
வேதாந்தம் சித்தாந்தம்
கற்றதனாலென்ன
வேடிக்கைக் கதைகள்
பேசினாலென்ன
வீதியில் வந்தொருக்கால்
விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம்
இல்லாமற் போமே

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம் நித்தியாநித்தியம் தெரியும் நிபுணர் பக்தி செய் உத்தமர், பரவும் நல்லூரில் நித்தியம் வந்து பார்த்தால் முத்தி நிச்சயமே! இடுக்கண் பலப்பல எய்தியபோதும் தடுக்கப்படார்கள் நல்லடியார்கள். ஆதலால் அடைக்கலமாக உன்திருவடி அடைந்தேன். விடைக்கு உகந்த கந்த வேளே இலங்கை வேந்தனே சரணம் ஐயா! எமக்கு அதிசயமாகும்படியாக காவல் செய்கின்ற முருகா! எம்மீது காதலும் செய்கின்றீர். எம்மை இனிக்க வாழ்வளிப்பீராக.
பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை போக்கும் முருகா யாழ்ப்பாணம் பழைய நிலைக்குத் திரும்பும்போது இந்த மண் மாசுபடாமல் இனிக்கச் செய்வாயாக. கி.பி.948 இல் புவனேகபாகுவினால் ஆரம்பிக்கப்பட்ட சங்கிலித்தோப்பிலே தோற்றம் கொண்டு சிங்கை பரராஜசேகரனால் பேறாக்கப்பட்டு கிருஷ்ணையர் சுப்பையர் ஆகியோரால் அருச்சிக்கப்பட்டு 1734 இல் இரகுநாத மாப்பாண முதலியாரால் வரமாக்கப்பட்டு ஆறுமுகமாப்பாண முதலியார் அவர் தம் பரம்பரையினர் சிறப்பாகப் போற்றப்பட்டு இன்றும் ஒருரூபாவோடு முருகனோடு பஞ்சாமிர்தமாய் வாழ்கின்றோம். செல்லப்பர்யோகர் மற்றும் நாவலர், பண்டிதமணி, சோமசுந்தரப்புலவர், அருட்கவி, குமாரசாமிப்புலவர், சின்னத்தம்பிப் புலவர், முதுபெரும்புலவர், வீரமணிஐயர், பார்வதி நாதசிவம், சோ. பத்மநாதன், கல்வயல் குமாரசாமி, நமசிவாயத்தேசிகர், சா.வே.பஞ்சாட்சரம், வித்துவான் ஆறுமுகம், சைவப்புலவர் செல்லத்துரை, கவிஞர் கதிரேசர் பிள்ளை, லலீசன், சிற்பி சிவசரவணபவன் போன்ற பல பெரியார்கள் நல்லூரானை மனம் உருகி இனிக்க இனிக்கப்பாடி நெக்குருக வைத்திருக்கிறார்கள். அதனாலன்றோ முருகன் பஞ்சாமிர்தம் போல் இனிக்கின்றான். ஒரு ரூபாவோடு அவனை நாமும் உண்டு இரசித்து அனுபவிப்போமாக.
நல்லூரைக்கும்பிட்டு நீ பாடு அதனாலே நாட்டிலுள்ள [illegible] ஓடும்

# பிள்ளைகளிடம் உள்ள கனவுகளை மதியுங்கள்

உலகின் மிகச்சிறந்த விளையாட்டுப்போட்டியான ஒலிம்பிக் வெகு விமர்சையாக நடைபெற்று முடிந்தது. வழமை போல ஆசிய நாடுகளும் தமது பங்களிப்பைச் செய்திருந்தன. உலக சனத்தொகையில் இரண்டாவது இடத்தில் உள்ள இந்தியா வெள்ளி, வெண்கலம் என இரு பதக்கங்களை மாத்திரமே பெற்று திருப்தி அடைந்தது. ஏனைய நாடுகள் தங்கப்பதக்கத்தை எடுப்பதிலும் இவற்றை வரிசைப்படுத்துவதிலும் முண்டியடித்தன. ஆனால் தெற்காசிய நாடுகள் ஒரு வெண்கலப்பதக்கத்தை வெல்வதையே இலட்சியமாகக் கருதி வருகின்றன. தகுதிகாண் சுற்றில் தேர்வாவதற்குத் தகுதியற்ற நிலையில் தான் இந்த நாடுகளின் வீரர்கள் உள்ளனர். உண்மையில் இந்த நாடுகளில் வீரர்கள் இல்லையா? விளையாட்டுக்கு சமுதாயம் கொடுக்கும் முக்கியத்துவம் தான் என்ன? ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீர, வீராங்கனைகள் 4 வருடங்களாக முழு மூச்சாகத் தம்மைத் தயார்படுத்தவதுடன், பதக்கம் வெல்லும் இலட்சியத்துடனும் களம் இறங்குகின்றனர். உடலில் அதீத கவனத்துடன் வாழ்க்கையை வாழ்கின்றனர். எமது நாடுகளைப் பொறுத்த வரை விளையாட்டு பிரதான விடயமாகவோ, இலாபகரமான தொழிலாகவோ கருதப்படுவது இல்லை. விளையாட்டுத் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் இல்லை என்பது தான் உண்மை. ஆனால் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசிலால், ஊக்குவிப்புத் தொகையையும், பெருமைப் பேச்சுக்களையும் விட வேறு எந்த வகையில் இலாபம். ஆனால் 9, 10 பருவ வயதினரின் அனைத்துச்செயற்பாடுகளும் முற்றாக தடுக்கப்பட்டுப் புலமைப்பரீட்சைக்கான வகுப்புகளுக்கும் திணிக்கப்படுகின்றனர். கல்வி கற்பது, அறிவுக்காகவே, அறிவின் மூலம் ஞானத்தைப் பெருக்கி தகுதியான வேலைகளைப் பெற்று பணம் சம்பாதிப்பது தான் குறிக்கோள். தற்போது அனைவரும் பணம் என்ற ஒரு அடிப்படை அலகை நோக்கியே நகர்கின்றனர்.
சேவை நோக்கத்துடன் யாரும் வேலையில் இணைவது இல்லை. சம்பளப்பேரத்தை தக்கவைக்க கல்வித் தகைமைகள் உதவுகின்றன. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு என எந்த விளம்பரங்களையும் நாம் பார்த்ததில்லை. அதே நேரம் வேலையில்லாப் பட்டதாரிகளையும், அவர்களின் பிரச்சினைகளையும் கண்டிருக்கிறோம். அத்துடன் புலமைப்பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துகிறோம் என்று முளைத்த கல்வி நிறுவனங்களும் அவற்றின் உரிமையாளர்களும் நன்கு தேறி வளர்ந்து நிமிர்ந்து இருப்பதையும் காணக் கூடியதாக உள்ளது. இவற்றின் பொறிமுறைகளைப் பெற்றோர் புரிந்து கொண்டு பிள்ளைகளைத் தயார்ப்படுத்த வேண்டும். வாழ்க்கையில் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும் என்று பிள்ளைகளுக்குப் போதிக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் எத்தனை ஜிம்னாஸ்டிக் வீர, வீராங்கனைகள் உள்ளனர்? எமது சிறுவர்களுக்கு அவ்வாறான கனவுகள் இல்லையா? நூற்றாண்டுகால ஒலிம்பிக்கில் ஆசியாவிலேயே இம்முறைதான் ஒற்றைப்படகோட்டப் போட்டியில் ஒரு வெண்கலப்பதக்கத்தை ஜப்பான் வீரர் பெற்றார். அவற்றுக்கான சூழல், சாதனங்கள், பயிற்சியாளர்கள் என்பன எமது நாடுகளில் இல்லை. ஆபாசப் படங்களும், போதைப் பொருள்களும் சட்ட விரோதமான விடயங்களாக உள்ளபோதும், தடைகள் சோதனைச் சாவடிகள், கட்டுப்பாடுகள் கண்காணிப்புகளை மீறி எமது இளையவர்களை இவை வந்தடைகின்றன. இதற்குக் காரணம் வெறும் கடத்தல் காரர்களின் திறனா? அல்லது எம்மவர்களின் தேடலின் விளைவா? எதிர்க்க நினைத்தால் எதிர்க்கலாம். இவற்றில் இருந்த தேடல்கள் ஏன் கல்வியிலோ, விளையாட்டிலோ, துறைசார் விடயங்களிலோ இருக்கவில்லை. மேம்பட்ட சூழலுடன் பிள்ளைகள் வளர்க்கப்படுவது அவசியம். இதைச் செய் என்றால் இதைச் செய்வதற்கு அர்த்தம் கீழ்ப்படிவு அல்ல மாறாக அடிமைத்தனம். பிள்ளைகளை வளர்க்கின்றோமா? அடிமைகளாக நடத்துகின்றோமா?.
பதக்கங்களைக் குவிக்கும் நாடுகளில் சட்டவிரோதமாக உள்ள விடயங்கள் அங்கும் காணப்படுகின்றன. ஆனால் அவற்றைக் கடந்து தான் சாதிக்கின்றார்கள். சாதிக்க வேண்டும் என்ற உணர்வு இருந்தால் போதும் பிள்ளைகள் தமக்கான பாதையைத் தேடுவார்கள்.




கலாசாரத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் பின்னடைவான உணர்வுகளுடன் இருப்பதும், பிள்ளைகளை வழிநடத்துகின்றோம் என்ற போர்வையில் அடிமைத் தனத்தைத் தொடர்ந்தும் திணிக்காமல், வாழ்வதற்கானவற்றைக் கற்றுக் கொடுப்பது அவசியம். தலைமுறைகளின் மாற்றத்தை ஏற்றுக் கொள்வதும் மாற்றங்களுக்கான புரிதலுடன் பிள்ளைகளை வழிநடத்துவதும், சுயமாகச் செயற்பட அனுமதிப்பதும், தனக்கான சுதந்திரத்தைப் பிள்ளை தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதும் வளர்ப்பின் வெளிப்பாடுகள்.
ஒவ்வொரு பிள்ளைகளும், தான் முன்னேற வேண்டும் என்ற ஆசை கட்டாயம் மனதில் இருக்கும். எனக்கு விருப்பமானவற்றில் தான் நீ முதலிடம் பெற வெண்டும் எனப் பெற்றொர் திணிப்பது தான் பிள்ளைகளின் இலட்சியங்களைச் சிதைக்கின்றன. அடுத்த ஒலிம்பிக்கிலாவது யாழில் இருந்து ஒரு வீரர் ஒலிம்பிக் நிகழ்வில் கலந்து கொள்வாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** உங்களின் நற்செயலை, சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரம் செழிக்க, கூடுதல் உழைப்புத் தேவைப்படும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு உயரும். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது.

**இடபம்:** திறமையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், சாதனை படைப்பீர்கள். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**மிதுனம்:** தாமதித்த செயலும் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெற்றோரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். மனைவியின் அன்பைக் கண்டு நெகிழ்வீர்கள்.

**கடகம்:** உறவினர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். உணவுப் பொருள் தரமறிந்து உண்ணவும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும்.

**சிங்கம்:** தகுதிக்கு மீறி எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறை தாமதமின்றி சரிசெய்வது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**கன்னி:** பேச்சில் அன்பும், பண்பும் மிகுந்திருக்கும். உறவினர் உங்களை மதிப்புடன் நடத்துவர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்களுக்கு நகை, புத்தாடை வாங்க யோகமுண்டு.

**துலாம்:** மனதில் கலை உணர்வு அதிகரிக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், அமோக இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவீர்கள். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**விருச்சிகம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி தாமதமாகலாம். குடும்பத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச்செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** வெளி வட்டாரத் தொடர்பால், தொந்தரவுக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபார நடைமுறை சீராக, புதிய உத்தியைப் பயன்படுத்துவது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**மகரம்:** உழைப்பிற்கான நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**கும்பம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்ய கூடுதல் மூலதனம் தேவைப்படும். உடல்நலம் சீராகும். பெண்கள், பொருள்கள் இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது.

**மீனம்:** செயல்களில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.



# த்ரிஷாவின் ஆசை நிறைவேறுமா?

'ஜோடி' படத்தில் சிம்ரனின் தோழியாக வந்து தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் த்ரிஷா. இவர் சினிமாவில் நடிக்க வந்து 17 வருடங்கள் ஆகிவிட்டது. இன்னும் இளமை மாறாமல் முன்னணி நடிகர்களுக்கு ஜோடியாகத் தான் இவர் நடித்து வருகிறார். இந்த நிலையில் இவர் தமிழ் சினிமாவில் கமல், அஜித், விஜய், விக்ரம், சூர்யா, சிம்பு, தனுஷ், ஆர்யா, ஜீவா, ஜெயம் ரவி, விஷால் என அனைத்து முன்னணி நடிகர்களுக்கும் ஜோடியாக நடித்து விட்டார்.

ஆனால், இன்னும் சூப்பர் ஸ்டாருக்கு ஜோடியாக நடிக்க முடியவில்லை என மிகவும் வருத்தத்தில் இருக்கிறாராம் எனச் சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.













## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | 6 | | |
| | | | | 8 | 5 | 7 | | |
| | 8 | | | | | | | |
| 1 | | 5 | | 9 | | 3 | | 8 |
| 6 | | | 1 | | | | | 7 |
| 8 | | | 2 | | | 9 | | |
| | | | | 7 | | 8 | 5 | |
| | 4 | | | | | | | |
| | 9 | | | | | | | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 2 | 5 | 6 | 7 | 8 | 4 | 3 |
| 3 | 7 | 6 | 1 | 4 | 8 | 2 | 5 | 9 |
| 5 | 8 | 4 | 9 | 3 | 2 | 1 | 6 | 7 |
| 8 | 2 | 9 | 7 | 5 | 6 | 3 | 1 | 4 |
| 7 | 4 | 3 | 2 | 8 | 1 | 5 | 9 | 6 |
| 6 | 5 | 1 | 4 | 9 | 3 | 7 | 8 | 2 |
| 4 | 3 | 7 | 8 | 1 | 9 | 6 | 2 | 5 |
| 2 | 9 | 8 | 6 | 7 | 5 | 4 | 3 | 1 |
| 1 | 6 | 5 | 3 | 2 | 4 | 9 | 7 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிலக்கம் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**சௌமியா** @sowmya_16

வேலைக்குப் போகாமல் சாப்பிடக் கூட காசு இல்லாமல் இருந்த நிம்மதி வேலைக்குப்போய்ச் சம்பாதித்த பிறகு இருப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது புதுசு





வர்ண போடர்களுடனான ஒட்டு வேட்டிகள் மற்றும் பொக்கற் வேட்டிகள் அறிமுகமாகியுள்ளன. இவை, 2 ஆயிரத்து 200 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## மிக்ஸி பராமரிப்பு



- மிக்ஸியில் அரைக்கும்போது சூடு உண்டாகிறதா என்பதைக் கவனித்து இடைவெளி விட்டு அரைக்கவேண்டும். மிக்ஸி ஓடும்போது மூடியைக் கையினால் அழுத்திக் கொள்ளவேண்டும்.
- அரைக்கும்போது பிளேடுகள் லூசாகி உள்ளதா என்பதைக் கவனித்து டைட்டு செய்து கொள்ளவேண்டும்.
- மிக்ஸியில் ஜாரின் அடிப்பாகத்தில் ரப்பரால் ஆன இணைக்கும் பகுதி அதற்கென்று மிக்ஸியில் அமைக்கப்பட்டுள்ள பள்ளமான பாகத்துடன் சரியாகப் பொருத்தப்படவேண்டும் இல்லையெனில், மிக்ஸி பழுதாகிவிடும்.
- அரைக்கும் பொருள்களுடன் பிளேடு சுலபமாகச் சுற்றக்கூடிய அளவு தண்ணீர்விட்டு அரைக்கவேண்டும். இல்லையெனில், பிளேடு உடையவோ, மோட்டர் எரியவோ நேரலாம்.
- மிக்ஸி ஓடும்போது திறந்து பார்க்கக் கூடாது.
- இட்லிக்கு மிக்ஸியில் புழுங்கல் அரிசி அரைக்கும்போது இரவே ஊற வைத்துவிட்டால் மிக விரைவில் அரைத்து விடலாம். மிக்ஸி சூடாவதையும் தடுக்கலாம்.

## நாளை

ஆவணி-08
புதன்கிழமை
-24.08.2016
திதி: ஸப்தமி பி.இ.01.34
நட்சத்திரம்: பரணி பி.ப. 5.22
ராகுகாலம்:
12.05-01.35 வரை
சுபநேரம்:
04.35-06.05 வரை
கார்த்திகை விரதம்



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 400–600 | 700 | 800 | – | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 200 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500–600 | 600 | 800 | 700 | – |
| பாரை | 550 | 500 | 600 | 800 | 600 | 600 | – |
| சுறா | 500 | 500 | – | 800 | 1000 | – | 700 |
| சீலா | 300 | 400 | 350 | 600 | 800 | 500 | 400 |
| விளை | 650 | 600 | – | 600 | 500 | – | 450 |
| முரல் | 300 | 400 | 400 | 500 | 500 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | – | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | 400 | – | 450 | 500 | 400 |
| திரளி | 300 | 300 | 300 | 150 | 300 | – | 330 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 400 |
| சூடை | 150 | 200 | 120 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 300 | – | 350 | 200 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 300 | 200 | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 200 | 100 | 70 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 500 | 400 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 400 | 200 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 60 | 80 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 80 | 50 | 60 | 80 | 60 | 60 | 90 | 40 |
| கரட் | 120 | 120 | 140 | 140 | 100–120 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 100 | 90 | 100 | 80 | 60–70 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 60 | 50 | 80 | 100 | 50–60 | 40 | 100 | 60 |
| பாகல் | 120 | 80 | 120 | 100 | 120 | 80 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 140 | 140 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 80 | 100 | 80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 50 | 70 | 80 | 90 | 70 | 80 | 90 | 60 |
| பூசணி | 50 | 40 | 50 | 50 | 50–60 | 80 | 70 | 40 |
| தக்காளி | 50 | 60 | 60 | 60 | 40–50 | 60 | 120 | 40 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 100 | 80–100 | 40 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 15 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 50 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 160 | 120 | 120 | 120–140 | 200 | 200 | 140 |
| புடோல் | 40 | 40 | 60 | 50 | 60 | 40 | 70 | 40 |
| கோவா | 100 | 100 | 120 | 120 | 100–120 | 160 | 90 | 80 |
| வெண்டி | 40 | 50 | 60 | 80 | 60–80 | 80 | 70 | 20 |
| போஞ்சி | 160 | 160 | 160 | 160 | 140–160 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120–160 | 120 | 100–120 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 25–30 | 25–30 | 40 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 | 90–100 | 100 | 85 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 180 | 240 | 240 | 120–140 | 120 | 120 | 150 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 120 | 160 | 160 | 140 | 240 | 200 | 100 |
| இராசவள்ளி | 160 | – | – | 180 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 60 | 40 | 80 | 120 | 120 | 50 |



## அன்னாசிப்பழ பொரியல்



### தேவையான பொருள்கள்


பொடியாக நறுக்கிய அன்னாசிப் பழம் - 1 கப்
வெங்காயம் - 2
மிளகாய்த் தூள் - 1 தேக்கரண்டி
மஞ்சள் தூள் - 1 சிட்டிகை
இஞ்சி - 1 துண்டு
கடுகு, உளுந்து, கறிவேப்பிலை - தாளிக்க தேவையான அளவு
மிளகாய் - 3
உப்பு, எண்ணெய் - தேவைக்கு ஏற்ப
தேங்காய்த் துருவல் - 1 தேக்கரண்டி

### செய்யும் முறை


சட்டியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுந்து வறுத்து, கறிவேப்பிலை, காய்ந்த மிளகாய் தாளித்து, வெங்காயத்தை நறுக்கிச் சேர்த்து, நன்கு வதக்கவும். இஞ்சியைப் பொடியாக நறுக்கி அதையும் வதக்கி, மிளகாய்த் தூள், மஞ்சள் தூள் சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். பின்பு அன்னாசிப் பழத்தையும் போட்டு நன்கு வதக்கி, உப்புச் சேர்த்துக் கிளறவும். கடைசியாகத் தேங்காய்த் துருவலைச் சேர்த்து இறக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிசக்தி வாய்ந்த சூரியசக்தி முறையை பெறும் செலிங்கோ



சுற்றாடல் மாசடைவதை குறைக்க மேலதிக முதலீடுகளைச் செய்யும் 'ஆயுள் காப்புறுதித் தலைவர்' சுற்றாடலுக்கு இசைவான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் புதிய சாதனை படைக்கவுள்ளதாக செலிங்கோ தெரிவித்துள்ளது.

கொழும்பில் இதுவரை நிர்மாணிக்கப்படாத மிகப் பெரிய அளவு சக்தி கொண்ட சூரிய சக்தி, மின்சக்தி முறை செலிங்கோ தலைமையகத்தில் அமைக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஆயுள் காப்புறுதிக்குத் தலைமை தாங்கும் செலிங்கோ லைப்பின் கொழும்பு ஐந்தில் உள்ள தலைமையகத்தில் இந்த அதிசக்தி கொண்ட சூரிய சக்தி மின் உற்பத்தி முறை நிர்மாணிக்கப்பட்டு வருவதாகக் கம்பனி அறிவித்துள்ளது. இதன் மூலம் இந்தத் தலைமையகம் முழுவதும் சூரிய சக்தி மின்வலு கொண்டதாக மாற்றமடையும்.

தேசிய மின் இணைப்புத் திட்டத்தின் மூலமும் ஏனைய திட்டங்கள் மூலமும் மின்இணைப்பைப் பெற்று பாவிப்பதை விட இது சூற்றாடலுக்குப் பெரும் நன்மைகளைப் பெற்றுத் தரக் கூடியது என நிறுவனம் கூறியுள்ளது. செலிங்கோ தலைமையகத்தில் நிர்மாணிப்பட்டு வரும் இந்தச் சூரிய சக்தி மின் திட்டத்தின் மூலம் மாதாந்தம் 7,200 அலகு மின்சாரத்தை சேமிக்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது.

உற்பத்திகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளைப் போன்று நாம் மின்சாரத்தைப் பாவிக்காவிட்டாலும் கூட மீள் சுற்று மின் சக்தி வளங்களைப் பாவிப்பதில் நாம் அதிக அர்ப்பணத்தோடு செயற்பட்டு வருகின்றோம். நிலைத் தன்மை கொள்கைக்கான எமது கட்டுப்பாட்டின் ஒரு அங்கமாக நாம் இதனைச் செய்து வருகின்றோம் என்று கூறினார் செலிங்கொ லைப்பின் முகாமைத்துவப் பணிப்பாள ரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன். ஏற்கனவே நிறுவனத்துக்குச் சொந்தமான காணிகளில் கட்டப்பட்டுள்ள எல்லாக் கிளைகளும் பசுமைக் கட்டடங்களாகவே வடிவமைக்கப்பட்டுள்ளன. இங்கு சூரிய சக்தி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அவற்றின் காபன் படிவுகளைக் குறைக்க கணிசமான பங்கிப்புச் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (நி)

# சியெட் இலங்கைச் சுற்றுலாவில் 3 நாடுகளின் வாடிக்கையாளர்கள்

வணிகம்

இந்தியாவின் வரையறுக்கப்பட்ட சியெட் நிறுவனத்துக்கும் களனி டயர்ஸ் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனத்துக்கும் இடையில் கூட்டு முயற்சியாகச் செயற்படும் சியெட் ஸ்ரீ லங்கா நிறுவனம் அண்மையில் தனது கடல் கடந்த நாடுகளைச் சேர்ந்த மூன்று நாடுகளின் வாடிக்கையாளர்களை ஐந்து நாள்கள் பயணமாக இலங்கைக்கு அழைத்து வந்ததாகத் தெரிவித்துள்ளது.


விநியோகஸ்தர்களுக்கு இடையிலான ஊக்குவிப்பாக இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. சிங்கப்பூரில் உள்ள டக்ஸ்டெராதனியார்வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் ஷிவி கல்ரா தலைமையிலான விற்பனை குழு மற்றும் பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த டக்ஸ்டெரா வாடிக்கையாளர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் இந்தப் பயணத்தில் பங்கேற்றனர். சியெட் ஸ்ரீ லங்காவின் மூத்த முகாமைத்துவ உறுப் பினர்களை இந்தக் குழு சந்தித்தது. அத்தோடு நிறுவனத்தின் களனி உற்பத்தி நிலையத்தையும் அவர்கள் சுற்றிப் பார்வையிட்டனர். நீர்கொழும்பு பின்னவெல, கந் தலம, சிகிரியா, மின்னேரியா, பொலனறுவை மற்றும் கண்டி ஆகிய இடங்களுக்கும் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

சிங்கப்பூரும் பிலிப்பைன்ஸும் சியெட்டின் முக்கிய ஏற்றுமதி சந்தைகளாகும். குறிப்பாக இலகு டயர் பிரிவில் இவை முக்கிய இடம்பிடித்துள்ளன என்று சியெட் லங்கா முகாமைத்துவப் பணிப்பாளர் விஜய் காம்பீர் கூறினார். பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு டிரக் மற்றும் ரேடியல் டயர்களை ஏற்றுமதி செய்வதில் நாம் தற்போது கூடிய கவனம் செலுத்தி வருகின்றோம். அந்த நாடுகளுக்கான எமது ஏற்றுமதி தொகையை அதிகரிக்கும் வகையிலேயே நாம் இந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

| 22/8/2016 www.cse.lk | | | |
|---|---|---|---|
| சுட்டிகள் | | இன்று | நேற்று |
| ASPI | -7.65 | 6,594.59 | 6,602.24 |
| S&P SL20 | 4.28 | 3,637.14 | 3,632.86 |
| வியாபாரப்புரள்வு | | 643,877,824 | 1,452,436,864 |
| உள்நாடு:- கொள்வனவு | | 474,389,472 | 971,224,576 |
| விற்பனை | | 522,970,560 | 705,256,192 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 169,488,336 | 481,212,192 |
| விற்பனை | | 120,907,256 | 747,180,608 |




| அதிகூடிய புரள்வு கம்பனி | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| எக்ஸ்போ லங்கா | EXPO.N | 7 | 10,181,970 | 71,310,857 |
| அக்ஸஸ் இஞ்சினியரிங் | AEL.N | 26 | 2,027,458 | 52,711,941 |
| டிஸ்டில்லரிஸ் | DIST.N | 270 | 171,509 | 46,345,346 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N | 910 | 41,259 | 37,750,313 |
| செவ்ரோன் லூபிரிக்கன் | LLUB.N | 167.8 | 180,406 | 30,308,043 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 158 | 178,942 | 28,314,530 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.X | 45.9 | 517,177 | 23,744,341 |
| லாப்ஸ் காஸ் | LGL.N | 37.1 | 551,490 | 20,406,435 |
| சொஃப்ட்லொஜிக் கேப்பிடல் | SCAP.N | 6 | 3,326,400 | 19,948,570 |
| சம்பத் வங்கி | SAMP.N | 249.9 | 68,072 | 16,951,604 |

அறிவித்தல்கள் - பங்குலாபம்
சி ம் கோல்டிங்ஸ் (COLO)- பங்கு ஒன்றிற்கு Rs. 6.00
கார்கோ போட் டெவெலப்மென்ட் (CABO)- பங்கு ஒன்றிற்கு Rs. 1.00
ரேணுகா சிட்டி ஹோட்டல் (RENU)- பங்கு ஒன்றிற்கு Rs. 6.00
ஹன்டர்ஸ் & கம்பெனி (HUNT)- பங்கு ஒன்றிற்கு Rs. 5.00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| [illegible] | 222 |
| விலை உழைப்பு | 13.6 |
| [illegible] | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

# நுட்பம்



## 2017ஆம் ஆண்டு ஆய்வுகளை சந்திராயன் – 2 ஆரம்பிக்கும்

சந்திரனில் ஆய்வு மேற்கொள்வதற்காக விண்ணில் ஏவப்பட்ட சந்திராயன்–2 விண்கலம் 2017 இறுதியில் தனது ஆய்வுகளை ஆரம்பிக்கும் என்று இந்திய விண்வெளி ஆய்வு மைய இயக்குநர் மயில்சாமி அண்ணாத்துரை தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:–

சந்திரனில் ஆய்வு மேற்கொள்ள அனுப்பப்பட்ட சந்திராயன்–1 விண்கலம் தனது ஆய்வை முடித்துவிட்டது. அது சந்திரனின் சுற்றுவட்டப் பாதையில் 100 கிலோ மீற்றர் தொலைவில் இருந்து ஆய்வு மேற்கொண்டு தகவல்களை அனுப்பியது. அதன் தொடர்ச்சியாக, நிலவில் இறங்கி ஆய்வு செய்யும் வகையில்அனுப்பப்பட்டுள்ளசந்திராயன்–2 விண்கலம் 2017ஆம் ஆண்டு இறுதிக்குள் தனது ஆய்வை ஆரம்பிக்கும்.

சந்திராயன்–2 விண்கலம் சந்திரனில் உள்ள கற்கள், மண் ஆகியவற்றை பரிசோதித்து அங்கிருந்தே தகவல்களை அனுப்பும். அந்த விண்கலத்தில் சிறிய வேதியியல் ஆய்வகம் உள்ளது.

நிலவில் மாதத்துக்கு 14 நாள்கள் மட்டுமே சூரிய ஒளி இருக்கும். அதனால் நிலவில் 14 நாள்களும், அதைச் சுற்றி ஓராண்டுக்கும் சந்திராயன்–2 விண்கலம் ஆய்வு மேற்கொள்ளும். சந்திரனுக்குச் சென்று திரும்பும் வகையில் அடுத்தக்கட்ட ஆய்வு விண்கலம் இருக்கும்– என்றார்.

## நீருக்கடியில் செல்லும் சீனாவின் ரோபோ

தமது நாட்டின்தயாரிப்பான நீருக்கு அடியில் செல்லும் ஆளில்லா தானியங்கி ரோபோ வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளது என்று சீனா தெரிவித்துள்ளது. இதன் சோதனை நடவடிக்கைகள் வடமேற்கு சீனாவின் ஷாங்ஸி மாகாணத்தில் நடைபெற்றது.

சீனாவின் கடல்சார்ந்த ஆய்வுகள், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான விடயங்களுக்கு பயன்படுத்த முடியுமான விதத்தில் இந்த ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளது. வடமேற்கு பாலிடெக்னிக்கல் பல்கலைக்கழகம் பல நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இதை வடிவமைத்துள்ளது. நீருக்கடியில் 100 மீற்றர் ஆழத்தில் பயணிக்கும் இந்த ரோபோ, மணிக்கு 5.4 கிலோ மீற்றர் வேகத்தில் பயணத்தை மேற்கொள்ளும் வல்லமை பொருந்தியது. இது பல நவீன தொழில்நுட்பங்களும் பொருத்தப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. சீன பொறியியல் பீடத்தின் கல்வியியலாளர் ஸு டெமின் இந்த ரொபோ குறித்து தெரிவித் ததாவது:–

உலகளாவிய ரீதியில் மிக முன்னேற்றகரமான ரோபோ தொழிநுட்பமாக இந்த தானியங்கி ரோபோ விளங்குகின்றது. கணினி மூலம் குறித்த ரோபோவின் நீருக்கு அடியிலான ஊடுருவல் பாதை மற்றும் அதன் செயற் பாடுகள் கட்டுப்படுத்தப்படுகின்றது.– என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதி கேட்டு...

அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த நீதிக்கான நடைப் பயணத்தின் போது, போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணை மேற்கொள்ள வேண்டும், காணாமற்போனவர்களுக்கு நீதிவேண்டும் - அவர்கள் கண்டறியப்பட்ட வேண்டும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் பௌத்தமயமாக்கலை நிறுத்த வேண்டும், தமிழர் தாயகத்தில் புதிதாக முளைக்கும் புத்தர் சிலைகள் அகற்றப்பட்ட வேண்டும், இடப்பெயர்வுக்கு உள்ளான மக்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

உமையாள்புரம் அம்மன் கோவில் முன்றிலில் ஒன்று கூடிய காணாமற்போனவர்களின் உறவினர்கள், அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் கோவிலில் தேங்காய் உடைத்து நடைப்பயணத்தை ஆரம்பித்தனர். இதன்போது நடைப்பயணத்தில் கலந்துகொண்டவர்கள் "விடுதலை கோரினால் விச ஊசியா?, நல்லாட்சி அரசா? - நயவஞ்சக அரசா?, நல்லிணக்கத்தின் அடையாளம் அத்துமீறிய புத்தர் சிலையா?, எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நீதி வழங்கு நீதி வழங்கு காணாமற்போனவர்களுக்கு நீதி வழங்கு, இரணைதீவு எங்கள் இதயம், விடுதலை செய் விடுதலை செய் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய், கொள்ளை அடிக்காதே கொள்ளை அடிக்காதே கொக்கிளாயை கொள்ளை அடிக்காதே", போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை கைகளில் ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் சென்றனர்.

இறுதியில் கிளிநொச்சியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா. அலுவலகத்தில் ஐ.நா. பொதுச் செயலாளருக்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிப்பட்டது.

இந்த நடைப் பயணத்தில் தமிழரசுகட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சி. சிறிதரன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, விவசாய அமைச்சர் பொ.ஜங்கரநேசன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (வ-21,ரி3)

## பேராதனை...

நேற்றாகும். இதனை முன்னிட்டு பேராதனையில் உள்ள குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் நிகழ்வு இடம்பெற்றது. இதில் இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த தமிழ் - முஸ்லிம் மாணவ மாணவியர் 17 பேர் பங்கேற்றனர். இந்த நிகழ்வு முடிந்து பல்கலைக்கழக விடுதிக்கு மாணவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர்.

"மாலை 6 மணியளவில், திடீரென மோட்டார் சைக்கிளில் சிங்கள மாணவர்கள் 20 பேர் வந்தனர். அவர்கள் இரண்டாம் வருட இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தின் மாணவர்கள். எங்களை கைகளை உயர்த்திக் கொண்டு நிற்குமாறு பணித்தனர். பின்னர் தாங்கள் அணிந்திருந்த தலைக்கவசங்களால் எங்களைத் திடீரென தாக்கத் தொடங்கினர். தடிகளாலும் எம்மை அடித்தனர். எங்களுக்கு மொழிபெயர்ப்புச் செய்யும் மாணவனை தனியாக அழைத்துச் சென்று கடுமையாகத் தாக்கினர்" என்று காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவன் ஒருவர் தெரிவித்தார்.

மிதிலாசன் (பருத்தித்துறை), பிரிய தர்சன் (கிளிநொச்சி), நவீர் (பொத்துவில்), குரூஸ் (மன்னார்) ஆகிய நான்கு பேரும் சிகிச்சைக்காக விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 8 மாணவர்களும், வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றனர்.

இதேவேளை இந்த ஆண்டு ஆரம்பத்தில், இதே பீடத்தின் இரண்டாம் வருட தமிழ் மாணவர்களுக்கும், சிங்கள மாணவர்களுக்கும் இடையில் மோதல் நடைபெற்றிருந்தது. இதில் இரண்டு தமிழ் மாணவர்கள் காயமடைந்திருந்தனர். இது தொடர்பில் பேராதனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதன் பின்னர், இரு தரப்பு மாணவர்களுக்கு இடையேயும் பேச்சு நடைபெற்று இனி மேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்று சிங்கள மாணவர்களினால் உறுதிமொழி வழங்கப்பட்ட பின்னர், சிங்கள மாணவர்களுக்கு எதிராக தமிழ் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு மீளப் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## மரத்துடன்....

இடம்பெற்றது. யாழ்ப்பாணம், இளவாலைப் பகுதியைச் சேர்ந்த மேரி அன்னரத்தினம் (வயது 66) என்றவயோதிபப்பெண்ணே இந்த விபத்தில் உயிரிழந்தவராவார்.

இந்த விபத்துத் தொடர்பில் நாச்சிக்குடா பொலிஸார் தெரிவித்ததாவது:

மடுவில் இருந்து முழங்காவில் ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மினி பஸ் மண்டைக்கல்லாறு-நாளாவெளி பகுதியில் வேகமாகப் பயணித்த போது, திடீரென மரம் ஒன்றுடன் மோதுண்டு தலைகீழாகப் பாலம் ஒன்றின் மீது தடம்புரண்டது. மினிபஸ் கட்டுப்பாட்டை இழந்த காரணத்தினாலேயே விபத்து ஏற்பட்டது. இதன்போது வயோதிபப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார்.

மேலும் 16 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் பூநகரிவைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகிறது - என்றனர் பொலிஸார். (வ-21, 106,101)

## ரசியல்...

விடுதலைக்கான தேசிய இயக்கம்.

இது தொடர்பில் அந்த இயக்கம் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகள், தொழிற்சங்கத்தினர், சிவில்சமூகத்தினர் உட்பட அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக ஒன்றுக்கொன்று முரணான கருத்துகள் வெளியாகிவரும் நிலையிலேயே இந்தக் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் அமைச்சர்களும், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வெளியிடுகின்றனர். இந்த விடயத்துக்கு நீதி மன்றம் மூலம் தீர்வைக் காண முடியாது.

இந்த நிலையில், தென்பகுதியில் தமிழ் அரசியல்கைதிகள் விடுதலையின் அவசியம் குறித்த கருத்தை உருவாக்குவதற்காக இந்தக் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப் படுகிறது. அத்துடன், ஐ.நா.மனித உரிமைகள் சபையின் அடுத்த அமர்வுக்கு முன்னதாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மாபெரும் பேரணி முன்னெடுக்கப்படும் என அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கம் தெரிவித்தது. (வ-21)

## நாமல்...

மன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ச தனியார் நிறுவனம் ஒன்றின் 125 மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளை கொள்வனவு செய்தமை தொடர்பிலேயே, நிதி மோசடிச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். (வ-5)

## ஊசி விவகாரம்...

இடம்பெறவுள்ளது. இதன் போது, முன்னாள் போராளிகளுக்கு ஊசி ஏற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் பேசப்படவுள்ளது. அத்துடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் ஆராயப்படும் என முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சருக்கும், பிரதமரின் ஆலோசகரான பாஸ்கரலிங்கத்துக்கும் இடையில் கொழும்பில் மற்றுமொரு சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் வடக்கின் தேவை மதிப்பீடு தயாரித்தல் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டது. (வ-5)

## மீண்டுவரும்...


சுமைகளை ஏற்படுத்தும். உற்பத்தி வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சிகளும் இதன் மூலம் ஏற்படுத்த வேண்டும். இன்றைய சூழலில் தனியார்துறை ஊக்குவிப்புச் செய்யப்படவேண்டும்.

ஏனைய நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 90 சதவீதம் ஏற்றுமதி வருமானம் மூலம் கிடைக்கப் பெறுகின்றது. ஆனால் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 17 சதவீதமே ஏற்றுமதி வருமானம் மூலம் கிடைக்கின்றது. இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் வடக்கு மாகாணம் 3.5 சதவீதப் பங்களிப்பையே வழங்குகின்றது.

இலங்கையானது, இந்தியா பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் ஏற்கனவே சுதந்திர வர்த்தக வலயங்களைப் பேணி வருகின்றது. இதே போன்று சீனா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுடனும் சுதந்திர வர்த்தக வலயத்தைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன் மூலம் தேசியப் பொருளாதாரம் மீட்சி அடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. ஜி.எஸ்.பி. வரிச் சலுகை மீளக்கிடைப்பதன் ஊடாக அது எமக்குப் பொருளாதார ரீதியான நன்மையைப் பெற்றுத் தரும்.

வடக்கைப் பொறுத்த வரை தேசிய நல்லிணக்கத்தின் பணியுடன் வடக்கின் பொருளாதாரமும் மீட்டெடுக்கப்படவேண்டும். அரசின் பௌதீக வளங்கள் வடக்கின் சிறப்புத் தேவைக்கும் உட்பட்டதாக இருக்கவேண்டும். தேசிய விநியோகக் கட்டமைப்பில் வடக்கும் இணைந்தே உள்ளது. முதலீட்டாளர்கள் தற்போது வடக்குக்கும் நகர்கின்றனர் - என்றார். (த-5-101-ரி3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 07 . 07 . 1941

உதிர்வு 04 . 09 . 2015

அமரர் சின்னத்தம்பி பத்மநாதன்

திதி: ஷஷ்டி

ஓராண்டு கடந்தாலும் உங்கள் ஆடம்பரமில்லாத
அன்பான பேச்சும் செயல்களும் இன்னமும் எங்கள் எல்லோரினதும்
மனங்களிலும் அகலாது நிற்கின்றதே ஐயா உங்கள் நெறிமுறை தவறாத
வாழ்வின் பயனாக நிச்சயம் உங்களது ஆத்மா இறைவனிடம் சங்கமிக்கும்


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குமர கோட்டம்,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செலஸ்ரீன் யேசுதாசன்



பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வதிவிடமாகவும், தற்போது சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட செலஸ்ரீன் யேசுதாசன் 21.08.2016 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செலஸ்ரீன் - கரோலினா தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - திரேசம்மா தம்பதிகளின் மருமகனும், மத்தீனம்மாவின் (அலீன்) அன்புக் கணவரும், ஜலீனா (அனித்தா), ஜமீலா (ஜமி - பிரான்ஸ்), ஜெராட் (ராஜன் - சுவிஸ்), ஜனீலா (ரஜி- பிரித்தானியா), ஜமினி (மஞ்சு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விமலானந், சூசைநாதன், சுகன்யா, கணேசராஜன், சுதர்சனன் ஆகியோரின் மாமனாரும், கஜித்தா, ஜபித்தா, நிரோஷன், நிவேதிக்கா, ஜெனிபர், ஜெனற்றி, ஜெனிக்கா, லூசான், திஷான், றோஷன், ஜானாஸ், சக்சிகா, கீர்த்திகரன் ஆகியோரின் பேரனும், அஜீனா, அக்ஷயன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(23.08.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் கோயிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28.02.1930



மறைவு 14.09.2014

திதி: 23.08.2016(சஷ்டி)

### திருமதி அன்னபூரணம் திருநாவுக்கரசு

அம்மா உமைப்பிரிந்து ஈராண்டுகள் போனாலும்
இம்மாநிலத்தில் இணையில்லை உங்களுக்கு
பெம்மான் முருகன் பிறவித் தளையறுத்தான்
அம்மா அவன் அருளால் அடைந்திடுக நற்சாந்தி

113, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிகாயங்களுக்கு உள்ளான பெண் சாவு

## கணவன் கைது

தென்மராட்சி, ஓக. 23

எரிகாயங்களுக்கு உள்ளாகிச் சாவடைந்த பெண்ணின் தற்போதைய கணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் மன்றின் உத்தரவில் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை இரவு நாவற்குழி முந்நூறு வீட்டுத் திட்டப் பகுதியில் தீயில் எரிந்து காயங்களுக்கு இலக்கான நிலையில், கணவனும் மனைவியும் யாழ். போதனா வைத்தியசாலையில் அயலவர்களால் சேர்க்கப்பட்டனர். மறுநாள் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை சிகிச்சை பயனளிக்காது பெண் சாவடைந்தார். அதே இடத்தைச் சேர்ந்த மதன்ராஜ் விஜயலட்சுமி (வயது 38) என்பவரே சாவடைந்தவராவார்.

அந்தப் பெண், தனது தற்போதைய கணவன் தனக்கு மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்தார் என வைத்தியசாலையில் வாக்குமூலம் வழங்கியிருந்தார். இதனடிப்படையிலேயே எரிகாயங்களுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த தற்போதைய கணவரான செல்வராசா சிவகுமார் என்பவரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்து நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான், சந்தேக நபரை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(வ- 9)

# பிரேமதாசவுக்கு நேர்ந்ததே மைத்திரிக்கும் நடக்கும்

## எச்சரிக்கிறார் மகிந்த

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கு நேர்ந்த கதியே தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் நேரப் போகின்றது.

இவ்வாறு எச்சரிக்கிறார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாயப் பரிசோதனை உற்பத்தி உதவி அதிகாரிகளின் சங்கத்தின் 19ஆவது சம்மேளனக் கூட்டம் நேற்று திங்கட்கிழமை பத்தரமுல்லையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தலைமை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினர் புதிய கட்சியைத் தொடங்கினால் வீதியில் இறங்க முடியாத நிலையை உருவாக்குவேன் என்று கடந்த வெள்ளிக்கிழமை மாத்தறையில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால எச்சரித்திருந்த நிலையிலேயே மகிந்த நேற்று இவ்வாறு பதிலளித்திருக்கின்றார்.

இதன்போது மகிந்த மேலும் தெரிவித்ததாவது:

ரணசிங்க பிரேமதாச கட்சிக்குள் இருந்த முக்கியத் தலைவர்களை அச்சுறுத்தி ஓரம்கட்டிவிட்டு தனது அரசியல் பயணத்தை தொடர முற்பட்டதாலேயே, அவர் எவரது ஆதரவும் இன்றி இறுதியில் உயிரிழக்க நேரிட்டது. அந்த நிலை தற்போது மைத்திரிபாலவுக்கும் ஏற்பட்டு வருகின்றது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்தபோது இவ்வாறு அச்சுறுத்தியிருந்தால் என்னவாகியிருக்கும் ? டி.எஸ் கூறியிருந்தால் எப்படியிருந்திருக்கும் ? கட்சி உருவாகியிருந்திருக்குமா ? கட்சி உருவாகும், அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. நான் அப்படிக் கட்சி ஒன்றை ஆரம்பிக்கமாட்டேன். அதன் அர்த்தம் என்னவென்றால் அப்படியான சுதந்திரமொன்று காணப்படவேண்டும். தீர்மானம் எடுப்பதற்கான சுதந்திரம் மக்களுக்கு இருக்க வேண்டும். அச்சுறுத்தினால் அதனை எவ்வாறு செய்வது? நன்றாகக் கூறியிருந்தால் அதில் வித்தியாசம் இல்லை. ஆனால் அச்சுறுத்தல் விடுத்தால் இல்லாததொன்றும் உருவாகும். அச்சுறுத்தல் மற்றும் சிறைத்தள்ளுதல் போன்றவற்றினால் மனிதர்களது அரசியல் சிந்தையை இல்லாதொழிக்க முடியாது.

இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு எதிராகவும், முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் நாங்கள் போர் நடத்தவில்லை. போரில் ஈடுபட்ட போராளிகளுக்கு எதிராகவே போர் தொடுத்தோம் என்பதுதான் உண்மை. இந்தப் போர் 30 வருடங்களாக நடைபெற்றது. போரில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உயிரிழந்த இளைஞர்களின் எண்ணிக்கை என்ன? தினமும் குண்டுகள் வெடித்தன. தினந்தோறும் உயிரிழப்புகள் ஏற்பட்டன. அங்கும் உயிரிழந்தார்கள். இங்கும் சாவடைந்தார்கள். இந்த உயிரிழப்புக்களை நிறுத்தவே நாங்கள் போராடினோம். தினந்தோறும் மக்கள் உயிரிழப்பதையும், நாடு இரண்டாகப் பிளவடைவதையும் நிறுத்தி ஒன்றாகப் பணி செய்வதற்கே போராடினோம். ஒருவேளை நாடு பிளவடைந்திருந்தால் வடக்கிலிருந்தோ அல்லது கிழக்கிலிருந்தோ எவரும் இங்கு வர முடியாது. புறம்பான ஒரு நாட்டை ஏற்படுத் துவதிலிருந்து விலக்கி அனைவரையும் ஒன்றிணைத்து ஒரே நாட்டில் ஒருதாய் பிள்ளைகளாய் வாழவே நாங்கள் நடவடிக்கை எடுத்தோம்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்தமையினால் எமக்கொரு பொறுப்பு ஏற்பட்டது.

போரில் ஈடுபட்ட போராளிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தினோம். 12 ஆயிரத்து 500 போராளிகளுக்கு புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தினோம். போர்நடைபெற்ற பகுதிகளில் அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தோம். வீதி, குடிதண்ணீர் வசதி, மின்சாரம் போன்றவற்றைச் செய்து கொடுத்தோம். 30 வருடகாலமாக பின்நோக்கிச் சென்றிருந்த வடக்கு பகுதியை முன்நோக்கி நகர்த்தியுள்ளோம்–என்றார். (வ-5)


## உடனடி வேலைவாய்ப்பு

சர்வதேச ரீதியில் இயங்கும் நிறுவனத்தின் வடமாகாண கிளைகளுக்கு (யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ) ஆகிய பிரதேசத்திலிருந்து O/L சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இம்முறை A/L எழுதியவர்களுக்கு சிறந்த வாய்ப்பு.

*Administation * Supervisor *Trainee Managers * Sales Representative

தொடர்புகளுக்கு - 077 6644442, 077 5566224

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 2016.08.17 ஆம் திகதி புதன்கிழமை அன்று இறைபதமடைந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும **சிவநேசன் புருஷோத்தமன்** அவர்களின் அன்புத் தந்தை

**துரைசிங்கம் சிவநேசன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்பு ரிசங்கம், மயிலிட்டி,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை,(மல்லாகம்).

## தொழில் நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான வேண்டுகை

எமது நிர்மாண நிறுவனத்திற்கு கட்டட நிர்மாணத்துறையில் அனுபவமுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர். தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் ஆண். பெண் இருபாலாரும் சுயவிவரத்துடன் 27.08.2016 ஆம் திகதி சனிக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கீழ் குறிப்பிடும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின் றோம்.

**குறிப்பு**:- தகைமை அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும்.

K.P.K Buildings
Construction works
இரத்தின புரம் வீதி,
கிளிநொச்சி.
(புதிய தண்ணீர்தாங்கி முன்பாக)
தொடர்பு. 0214923264
Email-kpkkilinochchi@gmail.com

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னையா பொன்னுத்துரை**

தோற்றம் 03.08.1942 மறைவு 03.09.2015

பாசத்தின்
உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால்
அரவணைத்து
வழிகாட்டிய
எங்கள் தெய்வமே !
உங்கள்
நினைவுகளில்
நாம் வாழ்கின்றோம்.



உழவர் வீதி,
தாவடி வடக்கு,
கோக்குவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 03 1922



மறைவு 22 08 2016

### திருமதி அனந்தலட்சுமி அம்மாள் தங்கசாமி ஐயர்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தான பரம்பரைக் குருவும் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியருமாகிய காலஞ்சென்ற சி.தங்கசாமி ஐயர் அவர்களின் மனைவி திருமதி அனந்தலட்சுமி அம்மாள் அவர்கள் 22.08.2016 அன்று சிவபதமடைந்தார். இவர் த.மகாலிங்க ஐயர், சுப்பிரமணிய ஐயர் (இலண்டன்) திருமதி சரோஜினி கனகசபாபதி ஐயர் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாவார். அன்னாரது பூதவுடல் பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 24.08.2016 புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஈமக்கிரியைகள் இடம்பெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மகாலிங்க ஐயர்
20/1A, Palmyrah Avenue
Colombo-3 (Palmyrah Courts Apts)
0112504007 / 0777881776

## வேலையாள்கள் தேவை

Photoshop-Video Editing முழுமையாகத் தெரிந்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 076 6808541

## மரண அறிவித்தல்

### திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம்

தோற்றம் 11 07 1939



மறைவு 18 08 2016

ஊர்காவற்றுறை சுருவிலைப் பிறப்பிடமாகவும் 43 பிறவுண்வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம் கடந்த(18.08.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பியப்பா சண்முகலிங்கம் (நோர்தேன் இன்டஸ்ரீஸ் ஸ்தாபகர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்-வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா-கண்ணம்மா தம்பதிகளின் அருமை மருமகளும் சுபோதினி, சுபேந்திரன், Dr.வினோதினி, நந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr.உதயகுமரன், பாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சத்தியனின் அருமைப் பேர்த்தியும் காலஞ்சென்ற Dr.ராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலட்சுமி, காலஞ்சென்ற ஆனந்தலட்சுமி மற்றும் சந்திரமதி, காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா மற்றும் அருள்கந்தராஜன், நவநீதராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மாணிக்கவாசகன், காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் சிவநாதன், உலகநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2016) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43, பிறவுண் வீதி நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
021 222 8038


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சியில் சிறப்புத் தேவைகளுக்குட்பட்டோர் வலையமைப்புக்கு லண்டனைச் சேர்ந்த புலம்பெயர் அமைப்பான பாத் ரூ தி பியூச்சரினால், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஊடாக சுமார் 3 லட்சத்து 26 ஆயிரத்து 815 ரூபா பெறுமதியான பொருள்கள் மற்றும் நிதி என்பன வழங்கப்பட்டன. (வ)

# முஸ்லிம் வர்த்தகர் கொழும்பில் கடத்தல்

கொழும்பு பம்பலப்பிட்டி கொத்தலாவலை அவனியூவைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடத்தல் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

மொஹமட் சகீம் என்ற முஸ்லிம் வர்த்தகர் தனது வீட்டிற்கு செல்லும் போதே இனந் தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடத்தல் சம்பவம் தொடர்பாக பம்பலப்பிட்டிய பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-5)

# விமானியின் ஓட்டுனர் அனுமதி நீக்கம்

அண்மையில் பணி இடை நிறுத்தப்பட்ட சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவன விமானியின் விமான ஓட்டுநனர் அனுமதிப்பத்திரமும் தற்காலிகமாக நீக்கப்பட்டது.

சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யூ.எல்.554 என்ற விமானம் ஜேர்மனியில் இருந்து கடந்த 19ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தது. எனினும், அந்த விமானம் 15 மணித்தியாலங்கள் தாமதமடைந்ததோடு, கடந்த சனிக்கிழமை இரவு 07.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.இதனையடுத்து ஏற்பட்ட தாமதம் காரணமாக சம்பந்தப்பட்ட விமானத்தின் விமானி ஒருவர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டார். சம்பவம் இடம்பெற்ற போது அவர் மது போதையில் இருந்தாரா என மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில், அவர் தோல்வியடைந்துள்ளமையை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்தநிலையில் அவரது விமான ஓட்டுநர் அனுமதியும் தற்காலிகமாக நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# மைத்திரிக்கு சவால் விடுகிறார் வீரவன்ச

புதிய கட்சி ஒன்று விரைவில் உருவாகும். அந்தக்கட்சி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் உருவாகும். அது தொடர்பில் ஜனாதிபதியும் நாளாந்த செய்தித்தாள்களை வாசித்து அறிந்து கொள்வார். எனவே அந்தச் செய்தி வெளியானதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரிடத்தில் உள்ள எம்மைப் பற்றிய இரகசியங்களை வெளியிடட்டும்.

இவ்வாறு தெரிவித்தார் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

லுனுகும்வெஹெர பிரதேச செயலாளர் அலுவலகத்தின் கேட்போர்கூடத்தில் 'புதிய அரசமைப்பு சாவுப்பொறி' என்ற தலைப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (வ-5)

# ஜனாதிபதி மைத்திரி உரிய நேரத்தில் இரகசியங்களை வெளிப்படுத்துவார்

## மேல் மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 23

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, குற்றம் செய்தவர்களுடைய தவறுகள் அடங்கிய பைல்கள் இருப்பதாகக் கூறினார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரகசியங்கள் இருப்பதாகக் கூறியதன் மூலம் அவர் குற்றவாளிகளைப்பாதுகாப்பதாக எமக்குக் கருதமுடியாது. நேரம் காலம் வரும்போது ஜனாதிபதி தான் கூறியதை வெளிப்படுத்துவார். நாட்டு மக்களுக்குத் தற்போது ஒரு அவதானத்தை அவர் ஏற்படுத்தினார்.

இவ்வாறு தெரிவித்தார் மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்ச குடும்பத்தினரது சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பதவிகளும் எதிர்காலத்தில் நீக்கப்படலாம் எனவும், இதற்காகவே, பெலியத்தை தொகுதியிலிருந்து புதிய அமைப்பாளர் நியமனம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது எனவும் மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய குறிப்பிட்டார்.

கடந்த அரசில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வந்தவர்களுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் பதவிகளை வழங்கினர். தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு அமைப்பாளர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய அமைப்பாளர்களை நியமிக்கும் நடவடிக்கை கட்சியை இரண்டாக்கும் செயற்பாடு என எவராலும் குற்றம் சாட்ட முடியாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மகிந்த ராஜபக்ச குடும்பத்துக்கு இருப்பது போன்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஆழமான டீல் கிடையாது.

தற்பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் பதவிகளை இராஜினாமாச் செய்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறலாம். இதுவரை ஏழு பேர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. –என்றார். (வ)

### போராளிகளுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சுகாதார அமைச்சு.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பிலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளின் ஆரோக்கியம் தொடர்பில் எழுந்திருக்கும் அக்கறைகளையும் கரிசனைகளையும் கருத்திற்கொண்டு, அவர்களுக்கான சிறப்பு மருத்துவக் கவனிப்பு நடைமுறையொன்றை வடக்கு மாகாண சுகாதார அமைச்சு முன்னெடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார அமைச்சில் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நேற்று இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டனர்.சிறப்பு மருத்துவக் கவனிப்பானது வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள பொது வைத்தியசாலைகளிலும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஆதார வைத்தியசாலைகளிலும் இடம்பெறவுள்ளது. அத்துடன் இந்தச் சேவையானது சிறப்பாகப் பயிற்றுவிக்கப்பட்ட மருத்துவர்களால் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நடைமுறையில் புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளுக்குத் தேவையான அடிப்படையான மற்றும் சிறப்பான பரிசோதனைகளும் ஆய்வுகளும் இடம்பெறவுள்ளன. அத்துடன் அவர்களின் நீண்டகால சுகநலம் தொடர்பாக தொடர் அவதானிப்பும் பராமரிப்பும் வழங்கப்படவுள்ளது.

இந்தச் சிறப்பு மருத்துவக் கவனிப்பு நடைமுறைகள் தொடங்கும் திகதியும், அந்த நடவடிக்கைகள் இடம்பெறும் வைத்தியசாலைகள் பற்றிய விவரமும் விரைவில் அறிவிக்கப்படும். இதுபற்றிய மேலதிக தகவல் பெற விரும்புபவர்கள் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பா[illegible] தொடர்பு கொள்ளுமாறும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## மரண அறிவித்தல்கள்

### பஞ்சலிங்கம் காண்டீபன்

(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன்)



தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும், சுவிற்சர்லாந்தை (Basel) வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம் காண்டீபன் 19.08.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம் - சொர்ணபுஷ்பம்தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற சச்சிதானந்தம் - தங்கமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சுவர்ணானந்தி (லலிதா) யின் அன்புக்கணவரும் விகாஷினியின் அன்புத்தந்தையும் துஷ்யந்தன் (சுவிஸ்), பார்த்தீபன் (சுவிஸ்), தமயந்தி (தாவடி), கவிதா (கனடா), சந்திரிகா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மாலா (சுவிஸ்), ரேணுகா (சுவிஸ்), Dr.அற்புதராஜா (D.M.O அனலைதீவு), சிவராஜா (கனடா), ஜங்கரன் (கனடா) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.08.2016 வியாழக்கிழமை சுவிற்சர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**

**திருமதி தயாநிதி அற்புதராஜா (Dr)**
**077 6437838, 0041 763239187, +417 79431570**

### திருமதி அன்னம்மா சின்னையா



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சின்னையா நேற்று (22.08.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும் பஞ்சலிங்கம் காலஞ்சென்றவர்களான சந்திராதேவி, கந்தசாமி, கிருஷ்ணபிள்ளை மற்றும் சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுபத்திரா, மாங்கனேஸ்வரி, செல்வராணி, விஜயா ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2016) செவ்வாய்க்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**கோண்டாவில் வடக்கு, அன்னுங்கை.**

**தகவல். புறோக்கர்சந்திரன் 077 6387517**

### பொன்னம்பலம் சோமசுந்தரம்



சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சோமசுந்தரம் நேற்று (22.08.2016) திங்கட்கிழமை முற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தில்லையாச்சி தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ் சென்றவர்களான இராமலிங்கம் - மாரிமுத்து காலஞ்சென்றவர்களான வித்துவசிங்கம் - கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும் கலாவதியின் அன்புக்கணவரும் சரவணன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊர்காவற்துறை பிரதேச செயலகம்), திருமதி ரூ. தயாளினி (ஆட்பதிவு திணைக்கள கிளை வவுனியா, பிரதேச செயலகம்), திருமதி வே. நாகநந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சோமசேகரம், வேணுதாஸ், சோ.ரூபதாஸ், திருமதி ச.சரணிகா ஆகியோரின் அன்பு மாமனும் செல்வி வே. ஐ[illegible], காலஞ்சென்ற வே.தர்வின் மற்றும் ச.மிதுன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுழிபுரம் மேற்கு.**

**தகவல் : குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இலகுவாக வென்றது கரவெட்டி ஞானம்ஸ்

கரணவாய், ஓக. 23
இலங்கைப் போக்குவரத்துச் சபையால் நடத்தப்படும் 8 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஞானம்ஸ் அணி வெற்றிபெற்றது.
முல்லைத்தீவு டயமன்ஸ் வி.கழக மைதானத்தில் ஆட்டம் இடம்பெற்றது. கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகம் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கலையொளி அணி 7.1 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அஜந்தன் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் குணா 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.
33 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய ஞானம்ஸ் அணி 7.1 பந்துப் பரிமாற்றங்களில் இரு இலக்கை மட்டும் இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாகத் துவி 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பிரதிசன் 2 இலக்குகளை வீழ்த்தினார். (ம-108)



# இந்தியா–தீவுகள் ஆட்டம் சமநிலை

இந்தியா-மேற்கிந்தியத்தீவுகளுக்கு இடையிலான நான்காவதும், இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
முதல் 22 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவுபெற்ற நிலையில் தீவுகள் 62-2 என்ற நிலையில் இருந்தபோது மழை குறுக்கிட ஆட்டம் நிறுத்தப்பட்டது. பலத்த மழை தொடர ஆட்டம் கைவிடப்பட்டது.
இரண்டாம் நாளில் மழை இல்லாத போதிலும் மைதானத்தில் ஈரப்பதம் இருந்ததால் ஆட்டத்தை தொடரமுடியாத நிலை ஏற்பட்டது. மூன்றாம் நாளில் மீண்டும் மழை குறுக்கிட்டது. நான்காம் நாளில் ஈரப்பதம் இருந்தது இதனால் மூன்றாம், நான்காம் நாள்களின் ஆட்டங்கள் நடைபெறவில்லை.
ஆட்டத்தின் இறுதிநாளான நேற்று மழையில்லாத போதிலும் மைதானம் விளையாடுவதுக்கு உகந்ததாக இல்லாத காரணத்தால் ஆட்டம் கைவிடப்பட்டு சமநிலையில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது.
நான்கு ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில் முதலாவது, மூன்றாவது ஆட்டங்களில் இந்தியா வெற்றிபெற்றது.
இரண்டாவது, நான்காவது ஆட்டங்கள் சமநிலை கண்டன. எனவே 2:0 என்ற கணக்கில் இந்தியா கிண்ணம் வென்றது.
பன்னாட்டு டெஸ்ட் தரப்படுத்லில் முதலிடத்தில் உள்ள இந்திய அணி இந்த இடத்தைத் தொடர்ந்தும் தக்க வைக்கவேண்டுமாயின் நேற்று முடிவுக்கு வந்த ஆட்டத்தில் வெற்றிபெறவேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. சமநிலையில் முடிவடைந்ததால் புதிதாக வெளிவரவுள்ள தரப்படுத்தலில் இந்தியா பின்தள்ளப்பட்டு பாகிஸ்தானுக்கு முதலிடம் கிடைக்க அதிக வாய்ப்புக்கள் உள்ளன. (ம)



# லூயிஸ் சுவாரஸ் மிரட்டலில் பார்சிலோனா இலகு வெற்றி

நடப்பு வருட லா லிகா பருவ காலத்தை, கடந்த லா லிகா பருவகால சம்பியனான பார்சிலோனா வெற்றியுடன் ஆரம்பித்தது.
பார்சிலோனாவின் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில், பார்சிலோனா, ரியல் பெடிஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி முதல் கோலைப் பதிவுசெய்தார். 17 ஆவது, 39 ஆவது நிமிடங்களில் சுவாரஸ் கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் பார்சிலோனா 3:0 என்று ஆதிக்கம் செலுத்தியது.
இரண்டாம் பாதியிலும் பார்சிலோனாவின் ஆதிக்கம் தொடர்ந்தது. 56 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி தனது இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 60 ஆவது, 64 ஆவது நிமிடங்களில் ரியல் பெடிஸ் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்து 4:2 என்றாக்கியது. 75 ஆவது நிமிடத்தில் தனது ஹற்றிக் கோலைப் பதிவுசெய்தார் சுவாரஸ். 84 ஆவது நிமிடத்தில் அர்டா துரான் பார்சிலோனாவின் ஆறாவது கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 6:2 என்ற கோல் கணக்கில் ரியல் பெடிசை நொறுக்கியது பார்சிலோனா. (ம)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 23
யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்துக்கும், இலங்கை கிரிக்கெட் சபையின் அபிவிருத்திக் குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.
சென். ஜோன்ஸ் கல்லூரியில் காலை 9 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட கிரிக்கெட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவே குறித்த கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக அறியவருகிறது. (ம-23)

# இங்கிலாந்து பாகிஸ்தான் ஒருநாள் தொடர் நாளை

இங்கிலாந்து – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் நாளை ஆரம்பமாகிறது.
ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடர் இங்கிலாந்தில் நடைபெறுகிறது. முன்னதாக நடைபெற்ற டெஸ்ட் தொடரை 2:2 என்று சமன்செய்து இங்கிலாந்துக்குஅதிர்ச்சியைக்கொடுத்துத் தரப்படுத்தலில் முதலிடத்துக்கு முன்னேறும் வாய்ப்பைப் பெற்றது பாகிஸ்தான். எனவே ஒருநாள் தொடரையாவது கைப்பற்றி இழந்த தனது இருப்பை நிலைப்படுத்த வேண்டிய கட்டாயம் இங்கிலாந்துக்கு உள்ளது.
தொடரைக் கைப்பற்றுவோம் என்று இங்கிலாந்தின் தலைவர் இயன் மோர்கன் அறிக்கை விட்டிருக்கும் நிலையில் இந்தத் தொடர் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# பயிற்சியாளர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 23
இலங்கை கிரிக்கெட் சபையால் மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர்கள் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
யாழ். மாவட்ட பயிற்சியாளர்களாக லக்சித கேரத்தும், லவேந்திராவும் நியமிக்கப்பட்டனர். யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநராக கடமையற்றிய கார்த்தி கேயன் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பயிற்றுநராக நியமிக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட் டங்களின் பயிற்றுநராக கடமையற்றிய கங்காதரன் வவு னியா மாவட்ட பயிற்றுநராக நியமிக்கப்பட்டார். வவுனியா மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநராக கடமையற்றிய வீரகொடபொலநறுவைக்கு மாற்றம் செய்யப்பட்டார். மன்னார் மாவட்டப் பயிற்சியாளர் அதே மாவட்டத்தில் தொடர்கிறார். (ம-23)


லக்சித கேரத் லவேந்திரா
கார்த்திகேயன் கங்காதரன்

NEW ZEALAND CRICKET vs CRICKET SOUTH AFRICA

# தெ.ஆபிரிக்கா–நியூசி. மழை ஆதிக்கம்

தென்னாபிரிக்கா-நியூசிலாந்துஅணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்று மழையின் தாக்கம் அதிகம் இருந்த காரணத்தால் ஒருபந்துகூட வீசப்படாத நிலையில் ஆட்டம் கைவிடப்பட்டது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 263 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து இரண்டாம் நாளின் ஆரம்பப் பகுதியில் 15-2 என்ற நிலையில் இருந்த வேளையில் மழை குறுக்கிட ஆட்டம் நிறுத்தப்பட்டது. மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் மழை குறுக்கிட ஆட்டம் கைவிடப்பட்டது. நான்காம் நாளாக நேற்றும் மழை குறுக்கிட ஆட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. குறித்த டெஸ்ட் ஆட்டத்தின் ஒரு இன்னிங்ஸ்கூட இன்னும் முழுமையாக நிறைவடையவில்லை. ஒரு நாளே எஞ்சியுள்ளது. எனவே ஆட்டம் சமநிலையில் முடிவடையவே அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படுகிறது.
(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி, மன்னார் லீக்குகள் முன்னேறின

கரணவாய், ஓக. 23
வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கம் லீக்குகளுக்கு இடையில் முன்னெடுத்து வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வடமராட்சி, மன்னார் லீக்குகள் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டன.

**வடமராட்சி – மட்டக்களப்பு**
நெற்கொழு கழுகுகள் வி.கழக மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வடமராட்சி கால்பந்தாட்ட லீக் அணியும் மட்டக்களப்பு மாவட்ட லீக் அணியும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் பெரும் பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த வடமராட்சி லீக் அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. வடமராட்சி அணியின் சார்பில் பிறேம்குமார் 4 கோல்களையும், துசிகரன் 2 கோல்களையும் பெற்றனர். மட்டக்களப்பு அணியின் சார்பில் பதிவான ஒரு கோலை காந்தன் பெற்றிருந்தார்.

**மன்னார் – அம்பாறை**
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணியும் அம்பாறை மாவட்ட அணியும் பலப்பரீட்சை நடத்தின. பலத்த போராட்டத்தின் பின் 2:1 என்ற கோல்கணக்கில் மன்னார் மாவட்ட அணி வெற்றிபெற்றது. (ம-108)



## பூப்பந்தாட்டக் கிண்ணத்தை வழித்துத் துடைத்தது யாழ்.

கரணவாய், ஓக. 23
உலக பூப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட பூப்பந்தாட்டத் தொடரில், திறந்த பிரிவினருக்கான பெண்கள் இரட்டையர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் யாழ். மாவட்ட அணிகள் கைப்பற்றின.
மன்னார் மாவட்ட உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியைச் சேர்ந்த எம். ஜோய் காருண்யா மற்றும் எச். கன்சா நட்ரசா இணையும் திருமதி கரிகரன் மற்றும் திருமதி டானியல் இணையும் மோதின. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 21:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஜோய் காருண்யா, கன்சா இணை கைப்பற்றியது. கரிகரன், டானியேல் இணை இரண்டாவது செற்றை 21:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது. மூன்றாவது செற்றில் வெற்றிபெறும் இணையே மாகாணச் சம்பியன் என்ற நிலையில், அந்த செற்றை 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஜோய் காருண்யா, கன்சா இணை 2:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. மூன்றாமிடத்தை யாழ். மாவட்டத்தின் குயின்சிகா, டென்சிகா இணை தனதாக்கியது. (ம-108)

## அரையிறுதியை இழந்தது மேரிஸ்

யாழ்ப்பாணம், ஓக. 23
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்பட்டுவரும் முதலாம் பிரிவு அணி களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் அரையிறுதிக்கான வாய்பைத் தவறவிட்டது நாவாந்துறை சென். மேரிஸ் அணி.
குருநாகல் மலிகதேவ கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்த காலிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து பெலிக்கன்ஸ் அணி மோதியது. இதில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற பெலிக்கன்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. சென். மேரிஸின் பயணம் காலிறுதியுடன் முடிவுகண்டது. (ம-23)

## டினோசன் அதிரடி சதம் யாழிடம் வீழ்ந்தது வவு.

யாழ்ப்பாணம், ஓக. 23
இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் 15 வயதுக்குபட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் டினோசனின் சதம் கைகொடுக்க வவுனியா மாவட்ட அணியை இலகுவாக வீழ்த்தியது யாழ். மாவட்ட அணி.
சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் நான்கு இலக்குகளை இழந்து 349 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டினோசன் ஆட்டமிழக்காமல் 112 ஓட்டங்களையும், டிலக்சன் 73 ஓட்டங்களையும், கிருசன் 51 ஓட்டங்களையும் பெற்றனர். 350 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வவு னியா மாவட்ட அணி 49.2 பந்துப் பரிமாற் றங்கள் 167 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பிரதீசன் 34 ஓட்டங்களையும், றோஜ் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். மாவட்ட அணியின் சார்பில் பிரசாந் 3 இலக்குகளையும், கிருசாந், விதுசன் இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)


டினோசன்

## கலைமதி முன்னேற்றம் கண்டது

கரணவாய், ஓக. 23
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையில் முன்னெடுக்கும் கால்பந்தாட்டத் தொடரில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் கண்டது.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தைச் சேர்ந்த நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் கிளிநொச்சி கால்பந்தாட்டச் சங்கத்தைச் சேர்ந்த இளந்தளிர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 10 ஆவது நிமிடத்தில் கலைமதியின் முன்கள வீரர் பானுப்பிரியன் ஆட்டத்தின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 18 ஆவது நிமிடத்தில் பழிதீர்த்தது இளந்தளிர் அணி. தற்போது நிலமை 1:1. எந்தவொரு அணியினதும் ஏக ஆதிக்கம் இல்லாமல் ஆட்டம் முடிவுப் பகுதியை அடைந்தது. இறுதி நிமிடத்தில் நிசாந்தன் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் கலைமதி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-108)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 23

**சிறி விக்னேஸ்வரா வி.கழகத் தொடர்**
புத்தூர் சிறி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதவுள்ளது.

**இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடர்**
இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று செவ்வாய்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதவுள்ளது. (ம-23-108-422)

## காலிறுதியாட்டத்துக்கு தகுதியானது விண்மீன்

யாழ்ப்பாணம், ஓக. 23
பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் பலாலி விண்மீன் அணி காலிறுதியாட்டத்துக்கு முன்னேறியது.
பாரதியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் அணி மோதியது. ஆட்டத்தின் முதல் நிமிடத்திலேயே உதயதாஸ் விண்மீனின் முதல் கோலைப் பதிவுசெய்தார்.
இறுதி நிமிடத்தில் யூட் கெனடி இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது விண்மீன். இரண்டாம் பாதியில் விண்மீனின் ஆதிக்கம் இரட்டிப்பானது. உதயதாஸ் 34 ஆவது, 41 ஆவது, 47 ஆவது நிமிடங்களிலும், அருள்தாஸ் 37 ஆவது நிமிடத்திலும், யூட் கெனடி 44 ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பலாலி விண்மீன் அணி. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க்கந்தன் திருவிழாவை முன்னிட்டு விசேட கழிவு

**யாழ்ப்பாணப் பெண்களுக்கு பொற்காலம் பிறந்திருக்கு ஐந்து நாள்களில் தங்கமுலாம் பூசப்பட்ட ஜெய்புரி குந்தன், மும்பாய் கிறிஸ்டல் ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கன் டயமன்ட் ஜுவலரிகளை நம்பமுடியாத விலைகளில் கொள்வனவு செய்ய பொன்னான வாய்ப்பு**

## 100/=, 200/=, 300/= வில்

**ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் உங்களுக்கு பிடித்த டிசைன்களை தெரிவு செய்து**

**100/=, 200/=, 300/= ஐ செலுத்துங்கள்**

**இந்த விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.**

| | | | |
|---|---|---|---|
| • கொரியன் ஸ்டேன் ஸ்டட்ஸ் | ரூ.100/= Only | • கொரியன் ஸ்டோன் சாறிப் பின் | ரூ.300/= Only |
| • ஆண்கள் லொக்கட் செயின் | ரூ.100/= Only | • அமெரிக்கன் டயமன்ட் மோதிரம் | ரூ.300/= Only |
| • ஆஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் | ரூ.100/= Only | • ஆஸ்திரேலியன் டயமன்ட் நெக்லஸ் செட் | ரூ.300/= Only |
| • வெஸ்டன் ஸ்டைல் இயரிங் | ரூ.100/= Only | • கோல்ட் பிளேட் வளையல் செட் | ரூ.300/= Only |
| • அமெரிக்கன் டயமன்ட் காதணி | ரூ.100/= Only | • கோல்ட் பிளேட்ட் செயின் | ரூ.300/= Only |
| • கோல்ட் கவரிங் செயின் பென்டன்ட் | ரூ.100/= Only | • ஆஸ்திரேலியன் டயமன்ட் ஆண்கள் மோதிரம் | ரூ.300/= Only |
| • கோல்ட் கவரிங் ஆண்கள் மோதிரம் | ரூ.300/= Only | • ஆஸ்திரேலியன் டயமன்ட் பிரேஸ்லட் | ரூ.300/= Only |
| | | • சில்வர் பிளேட் கால் கொலுசு | ரூ.300/= Only |

**விசேட சலுகை: விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூ.500/=, - ரூ.5000/= வரை விசேட ஆபரணங்கள்**

## இடம்: அமுதாம்பிகை மணிமண்டபம்

**380/13, வீரமாகாளியம்மன் கோயில் வளவில், நல்லூர்-யாழ்ப்பாணம்.**

**காலம்: 23 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை**

**(செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி)**

**நேரம்: காலை 9.00-இரவு 7.00 மணிவரை**

**(மதிய உணவு இடைவேளை இல்லை)**

(J/3991)(10.17.18)

அனுமதி இலவசம் தொ: 077 604 7788 விற்பனை பெண் பிரதிநிதிகள் தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.